In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மகிழ்ச்சியான வாழ்வுக்கு மகத்தான மந்திரங்கள்

ஸ்ரீ ஜானகிராம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மகிழ்ச்சியான வாழ்வுக்கு மகத்தான மந்திரங்கள்

ஸ்ரீ ஜானகிராம்

தந்தி பதிப்பகம்
THANTHI PUBLICATIONS
86, ஈ.வெ.கி. சம்பத் சாலை,
சென்னை-600 007
தொலை பேசி : 26618661

தந்தி பதிப்பகம்,
86, ஈ.வி.கே.சம்பத் சாலை,
வேப்பேரி, சென்னை-7.
போன் : 044-2661 8661
www.dailythanthi.com
e mail: mgrthanthipub@dt.co.in

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தந்தி பதிப்பகம்
THANTHI PUBLICATIONS
86, ஈ.வெ.கி. சம்பத் சாலை,
சென்னை-600 007
தொலைபேசி : 26618661

Title : Makizhchiyana Vazhvukku Makathana Manthirangal.

நூல் தலைப்பு	:	மகிழ்ச்சியான வாழ்வுக்கு மகத்தான மந்திரங்கள்
ஆசிரியர்	:	ஸ்ரீ ஜானகிராம்
முதற்பதிப்பு	:	ஜனவரி 2015
விலை	:	ரூ. 165/–
பக்கங்கள்	:	152 (vi + 146)
வெளியீடு	:	©தந்தி பதிப்பகம், 86, ஈ.வி.கே.சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை–7. போன் : 044–2661 8661 www.dailythanthi.com e mail: mgrthanthipub@dt.co.in
அச்சிட்டோர்	:	ஸ்ரீநிவாசா பைன் ஆர்ட்ஸ் (பி) லிட் 340/3, கீழத்திருத்தங்கல், சிவகாசி – 626 130.

FSC
www.fsc.org
MIX
Paper from responsible sources
FSC® C031321

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும். புத்தக விமர்சனத்துக்கு மட்டும் இந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்ட அனுமதிக்கப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உங்களுடன்...

தங்கள் கரங்களில் தவழும் இவ்வழகிய நூல் நீண்ட நாட்கள் தொடர் உழைப்பால் விளைந்த ஒரு மாமணியே என்றால் அது மிகையன்று. தற்போதைய காலகட்ட வாழ்வியல் நோக்கங்கள் அனைவரையும் அவசரமாக முன்னே தள்ளும் அதே தருணத்தில், அவை ஒரு நிலையற்ற மனோபாவத்தையே நமக்கு நாகரிகப் பரிசாக வழங்குகின்றன. கட்டுப்பாடுகள் குறைந்த நாகரிக வாழ்க்கை முறைகளால், அன்றாட வாழ்வின் பல கேள்விகள் பதிலற்றவையாகவே மிதந்து கொண்டுள்ளன. எல்லாவிதமான சாத்தியக்கூறுகளையும் இணைக்கும் ஒரு மாயக் கோட்டினை, நிஜ வாழ்வில் நாம் வரைவதற்கான சாத்தியங்கள் குறித்து ஊடகங்களின் வாயிலாக நம்மால் பேசப்படத்தக்க வாழ்க்கையையே 21–ம் நூற்றாண்டு நமக்குத் தந்துள்ளது.

அவை நம்மால் பேசப்பட்டாலும், படிக்கப்பட்டாலும், புதிய வடிவங்களில் பார்க்கப்பட்டாலும் அவற்றை நாம் ஏட்டுச் சுரைக்காயாகவே விட்டு வைப்பதில் ஒரு சுலபத்தன்மை இருப்பதை பெரும்பாலும் யாவரும் ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு மனோவியல் முரண்பாடுகளுக்கு ஆளாகி விட்டதை நிஜவாழ்வு அவ்வப்போது சுட்டிக் காட்டியபடியேதான் உள்ளது.

இந்நூலின் மையம், ஆன்மிகமே. எனினும்,

''எப்பொருள் யார்யார் வாய்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு''

என்ற குறளியல் மனோதத்துவத்தை உள்ளடக்கிய தொகுப்பாகவும், நம் உள்முகத்தை நம்மால் பார்க்கக்கூடிய அளவு செயல் வடிவங்கள் சார்ந்ததாகவும் இருப்பதை ஒவ்வொரு முறையும் உறுதி செய்து கொண்டேன்.

''தைவாதீநம் ஜகத் ஸர்வம்
மந்ராதீநம் து தைவதம்''

என்பது பகவத் கீதையின் முழக்கம். உலகம் தெய்வ வசமானதென்றால், தெய்வம் மந்திர வசமானது என்ற அர்த்தம் உள்ளடக்கிய கீதையின் கருத்துப்படி ''அநிர்வசனீய மஹத்துவம்'' பொருந்திய மந்திரஸ்வருபங்களின் மேலமைந்த இந்நூல் எனது தாய்தந்தையரின் ஆத்மீக ஆசிகளோடும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மானசீக குரு நிலையின் பாற்பட்டவர்களின் சூட்சும ஆசிகளோடும், ஸ்ரீ லக்ஷ்மி ந்ருஸிம்மரின் அருளோடும் மலர்ந்துள்ளது என்பது பிரத்யக்ஷமாகும்.

முக்கியமாக ஒரு சாதாரண வாசகனை கட்டுரையாளராக்கி, கட்டுரையாளரை நூலாசிரியராகவும் மாற்றிய 'தினத்தந்தி'யைப் பாராட்டுவது வார்த்தைகளுக்குட்படாத விசயம். கல்லையும் சிற்பமாக்கும் சமூகச் சிற்பியான தினத்தந்தியையும், அதன் நிர்வாகத்தையும் பாராட்ட வேண்டுமானால் அது இன்னொரு நூலாகத்தான் மாறி விடும் சாத்தியம் உண்டு.

''**ஸம்ப்ரதாயம் விச்வாஸாப்யம் ஸர்வ ஸித்தி**'' என்பது மஹரிஷி பராசரரின் உறுதியாகும். அதாவது சொல்லப்பட்ட மந்திரத்தின் வழிமுறைகளை அப்படியே கடைப்பிடிப்பதும், அதன் மீது முழு நம்பிக்கை கொள்வதுமே வெற்றிக்கு வழி என்பதாகும்.

மந்திர ஸித்தியின் மூலமாக பகவத் ஸாக்ஷாத்காரம் பெற்ற பற்பல மகான்களைத் தன்னில் கொண்ட நம் பாரதம் புண்ணிய பூமியே. அவர்களின் மூச்சுக் காற்றுக் கலந்த நமது பண்பாடு அவர்களின் மஹத்துவத்தில் ஒரு அணுவையாவது நம்மில் பதித்துச் செல்லாதா என்ன?

''India will teach the world'' என்றே சுவாமி விவேகானந்தர் முழங்கினார். அத்தகைய ஆதர்ஷ பூமியாகவும் தர்ம பூமியாகவும், நம்மை நமக்கே காட்டி வைக்கும் யோக பூமியுமாகவும் உள்ள நமது வேதப் பண்பாட்டின் முக்கியக் கூறாக விளங்கும் மந்திர தேவதாஸ்வரூபங்கள் யாவும் நம்மை யாண்டும் வழி நடத்திச் செல்ல வேண்டுமாய்ப் பிரார்த்தித்துக் கொள்வதுடன், இன்னும் பல நூல்களின் வாயிலாக தங்களைச் சந்திக்க உள்ளேன் என்ற இறையருளுடன்.

தங்களின் அன்பன்,
“ஸ்ரீ ஜானகி ராம்”
இயல்முறை ஆன்மிக
ஜோதிஷ ஆராய்ச்சியாளர்.
சென்னை - 17

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருளடக்கம்

1. செல்வ வளம் பெருகச் செய்யும் மந்திரங்கள் 1
2. திருமணத் தடை விலகச் செய்யும் மந்திரங்கள் 6
3. கடன் தொல்லை தீர்க்கும் மந்திரங்கள் 11
4. கல்விச் செல்வம் வழங்கும் மந்திரங்கள்......................16
5. சொந்த வீடு அமைய வழிகாட்டும் மந்திரங்கள்.........21
6. சந்தான பாக்கியம் தரும் மந்திரங்கள் 26
7. உடல்நலம் காக்கும் உன்னத மந்திரங்கள்................ 32
8. பில்லி, சூனியம் விரட்டும் மந்திரங்கள் 38
9. கணவன்-மனைவி ஒற்றுமைக்கு வழிகாட்டும் மந்திரங்கள் 44
10. சகல நன்மைகளும் வழங்கும் சாளக்ராம மந்திரங்கள் 50
11. நலம் பல புரியும் வலம்புரி சங்கு மந்திரங்கள் 57
12. பத்திரமான வாழ்வுக்கு உத்தரவாதம் தரும் ருத்ராட்ச மந்திரங்கள் 63
13. உயர்வு தரும் ஓம்கார மந்திரங்கள் 70
14. சகல நன்மைகளையும் தரும் சிவ மந்திரங்கள் 76
15. பலன் தரும் நாராயணர் தாரக மந்திரங்கள் 83
16. பக்திக்கு முக்கியமாகும் சக்தியின் மந்திரங்கள் 89

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

17. தொல்லைகளை நீக்கும் பிள்ளையார் மந்திரங்கள் 95

18. அறுபடை ஆண்டவனின் அற்புத மந்திரங்கள் 101

19. ஆதவனின் அருளைத் தரும் மந்திரங்கள் 107

20. அஞ்சனை மைந்தனின் அற்புத மந்திரங்கள் 113

21. அரசு வேலைக்கு உறுதுணையாகும் மந்திரங்கள் 118

22. பயத்தை விலக்கி ஜெயத்தை அருளும் மந்திரங்கள் 123

23. வெளிநாட்டுப் பயணங்களுக்கு உதவும் மந்திரங்கள் 129

24. எதிர்மறை சக்திகளை விரட்டும் மந்திரங்கள் 135

25. தவறாது தனயோகம் தரும் மந்திரங்கள் 141

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

1. செல்வ வளம் பெருகச் செய்யும் மந்திரங்கள்

'பணம்'– ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கை முழுவதும், எப்போதும் உடன் இருக்க வேண்டும் என்று கருதும் பொருள். வாழ்க்கையின் ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்க பணம் இன்றியமையாதது என்ற கருத்துக்கு எவரிடம் இருந்தும் மாற்றுக் கருத்து வரப்போவதில்லை. அவ்வளவு முக்கியத்துவம் மிகுந்த பணத்தை சம்பாதிக்க வாழ்வில் ஒவ்வொரு நொடி யும் போராட வேண்டியதிருக்கிறது. பணம் இல்லாதவர்களை இந்தத் தேசம் திரும்பிக் கூட பார்ப்பதில்லை.

மனித வாழ்வில் பணம் மிகவும் முக்கியம் என்பதை, இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே

'அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை, பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு'

என்ற திருக்குறள் மூலம் தெளிவுபடுத்தியுள்ளார் திருவள்ளுவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஜனனம் முதல் மரணம் வரையில் உள்ள இடைநிலை உயிர் வாழ்வின் பயன்பாடுகள் அனைத்துமே, ஒருவரது பொருளாதார வளத்தையே சார்ந்துள்ளது என்பதே நிதர்சனமான உண்மையாகும்.

வறுமை அகன்று செல்வ வளம் பெருக சில மந்திரங்கள் கை கொடுத்து உதவுகின்றன. 'அப்படியானால் வேலைக்கு செல்லாமல், மந்திரங்களின் உதவி மட்டும் போதுமா?' என்ற விதண்டாவாதம் இங்கு தேவையில்லாதது. ஆத்மார்த்தமாக தங்கள் பணியைச் செய்து கொண்டு, அதன் ஊடே இந்த மந்திரங்களை முறைப்படி ஜபித்து வருவதன் வாயிலாக நமது வறுமை நிலை அகன்று படிப் படியாக உங்கள் வீட்டில் செல்வம் கொழிக்க, மந்திரத்திற்குரிய தெய்வங்கள் அருள்புரியும்.

பொருள் வரவின் அளவு நிலைகளை நிர்ணயிக்கும் பல விஷயங்களில் முக்கியமானது 'எதிலும் அளவு' என்பதேயாகும். 'ஆற்றில் போட்டாலும் அளந்தே போடு' என்ற முதுமொழியில் உள்ள பொருளின் தன்மை அனைவருக்கும் புரிந்ததே. பேச்சில் அளவு, பழக்கங்களில் அளவு, உணவு, உறக்கம், செயல், உழைப்பு, சிந்தனை, செலவு ஆகிய விதங்களிலும் திருமகளின் வருகையை உறுதிப்படுத்த அளவு முறையே எதிலும் அவசியம்.

பொதுவாக வெள்ளிக்கிழமைகளில் கடைப்பிடிக்கப்படும் பூஜை முறைகளும், விரத நியமங்களும், திருக்கோவில் தரிசனங்களும் ஒருவரது பொருளாதார நிலைகளை மேம்படுத்தக்கூடிய தன்மை பெற்றதாகும்.

ஒரு வளர்பிறை வெள்ளிக்கிழமையன்று அதிகாலையில் குளித்து முடித்து 5 மணியில் இருந்து 6 மணிக்குள், தூய ஆடை அணிந்து, மஞ்சள் நிற விரிப்பில் கிழக்கு முகமாக அமர வேண்டும். அருகில் மஞ்சள் பிள்ளையார் பிடித்து வைத்து, வடக்கு முகமாக மகா லட்சுமி தாயார் படத்தை வைத்து, அதற்கு பொட்டிட்டு மலர் களால் அலங்கரிக்க வேண்டும். நைவேத்தியமாக கற்கண்டு பொடி சேர்த்த பசும்பால் அல்லது பால் பாயசம் படைக்க வேண்டும். வெற்றிலை, பாக்கு, ஏலக்காய், தேங்காய், பழம், ஊதுபத்தி ஆகிய வற்றை ஒரு பித்தளை தட்டில் வைத்துக்கொண்டு தூப, தீப ஆராதனை செய்து பூஜையைத் தொடங்க வேண்டும்.

இந்தப் பூஜைக்கு குத்துவிளக்கே உகந்தது. பசு நெய் மட்டுமே விளக்கேற்ற உபயோகப்படுத்த வேண்டும். மனதில் அமைதியுடன் தீபாராதனை செய்து விட்டு

'ஓம் யா தேவி ஸர்வ பூதேஷு லக்ஷ்மி ரூபேண சம்ஸ்திதா நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம'

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்ற மந்திரத்தை 108 முறை ஜபம் செய்ய வேண்டும். அந்த வெள்ளிக் கிழமையிலிருந்து தினமும் 108 முறை ஜபம் செய்ய வேண்டும்.

வெள்ளிக்கிழமைகளில் மட்டும் மகாலட்சுமி படம் வைத்து பூஜை செய்ய வேண்டும். மற்ற நாட்களில் குளித்து முடித்து சிறு அகல் விளக்கில் நெய் தீபமேற்றி அருகில் வைத்துக்கொண்டு ஜபம் மட்டும் செய்தால் போதுமானதாகும். பூஜை ஆரம்பித்த 48–வது நாளில் இருந்து படிப் படியாக ஒருவரது பொருளாதார நிலை நிச்சயமாக உயர ஆரம்பிக்கும்.

அதேபோல் இன்னொரு பிரசித்தமான முறையும் நடைமுறையில் உள்ளது. அதாவது ஒரு வளர்பிறை புதன் கிழமை அதிகாலை 5 மணியில் இருந்து 6 மணிக்குள் இம்முறையைத் தொடங்க வேண்டும். ஒரு மஞ்சள் நிற விரிப்பில் வடக்கு முகமாக அமர்ந்து, தமது குல தெய்வத்தையும் இஷ்ட தெய்வத்தையும் வணங்கிவிட்டு ஜபத்தை ஆரம்பிக்க வேண்டும். தமக்கு முன்பாக ஒரு சிறு அகல் விளக்கில் நெய் தீபம் ஏற்றி வைத்துக்கொள்ள வேண்டும். வீட்டில் சங்கு இருந்தால், அதில் சிறிது தீர்த்தம் விட்டு வைத்துக்கொள்ள வேண்டும்.

ஜபம் செய்ய தாமரை மணிமாலை அல்லது துளசி மணி மாலையைப் பயன்படுத்த வேண்டும். **'ஓம் ஸ்ரீம் மகாலஷ்ம்யை ஸ்வாஹா'** என்ற மந்திரத்தை 108 முறை ஜப மாலை கொண்டு ஜபம் செய்ய வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடம், ஒரு குறிப்பிட்ட நேரம், ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை என்ற முறையில் தினமும் இதனை செய்து வந்தால் நிச்சயம் ஒருவரது பொருள் வளம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெருகும். ஜபம் பூர்த்தியான பிறகு சங்கில் உள்ள தீர்த்தத்தை அருந்திட வேண்டும்.

இவை தவிர ஸ்ரீ மகாலட்சுமியின் மூல மந்திரம், ஸ்ரீ கனக தாரா ஸ்தோத்திரம், ஸ்ரீ குபேர ஸ்துதி, ஸ்வர்ண ஆகர்ஷண பைரவர் வழிபாடு ஆகியவற்றின் மூலமாகவும் ஒருவரது தன யோகம் பெறும் அதிர்ஷ்டத்தை விருத்தி செய்து கொள்ளலாம்.

'ஓம் ஸ்ரீம் யஷாய குபேராய வைஸ்ரவணாய
தன தான்யாதி பதயே
தன தான்ய சம்ரித்திம்மே
தேஹி தாபய ஸ்வாஹா'

என்ற குபேர ஸ்துதியை ஒவ்வொரு அமாவாசை அன்றும் இரவில் குபேர எந்திரத்தை வைத்து சொல்லி வந்தால் தன விருத்தி நிச்சயமாக ஏற்படும்.

அந்த பூஜை முறை பின் வருமாறு:-

அமாவாசை அன்று மாலையில் குளித்து தூய ஆடைகளை அணிந்து அருகில் உள்ள சிவ தலத்திற்குச் சென்று வர வேண்டும். அன்று இரவு விரதம் அனுஷ்டிக்க வேண்டும். ஸ்ரீ குபேர எந்திரத்தை வீட்டின் பூஜையறையில் அல்லது ஒரு தனியிடத்தில் ஒரு செம்பு அல்லது பித்தளை தாம்பாளத்தில் பொட்டிட்டு மலரிட்டு வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு மஞ்சள் நிற விரிப்பில் நாம் வடக்கு முகமாக அமர வேண்டும். அட்சதையைக் கலந்து வைத்துக்கொள்ள வேண்டும். வாழைப் பழம் உள்ளிட்ட ஐந்து வகை கனி வர்க்கங்களை நிவேதனம் செய்ய வேண்டும்.

அத்துடன் 5 வெற்றிலைகள், (முழுமையானவை, நுனி முறியாதவை) 11 கொட்டைப்பாக்குகள், 11 ஏலக்காய்கள் ஆகியவற்றை அதில் வைக்க வேண்டும். தூப, தீப நைவேத்திய ஆராதனைகள் முடிந்த பிறகு மேற்கூறிய ஸ்துதியை 108 முறையோ அல்லது 1008 முறையோ சொல்ல வேண்டும். அதன்பின் நைவேத்தியங்களை வீட்டில் உள்ளவர்களுக்குப் பிரசாதமாகத் தரலாம்.

ஒரு மஞ்சள் துணியில் அட்சதை, வெற்றிலை, பாக்கு, ஏலக்காய் ஆகியவற்றை சிறு மூட்டையாகக் கட்டி, பொட்டிட்டு அதைப் பணப்பெட்டியில் வைத்துக்கொள்ள வேண்டும். அடுத்த அமாவாசை தினத்தன்று இது போல் பூஜை செய்து முடித்து புதிய மஞ்சள் துணியில் உள்ளவற்றைப் பணப்பெட்டியில் வைத்துவிட்டு, முன்பு வைத்ததை வெளியில் எடுத்து வைத்திருந்து அடுத்த நாள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காலையில் ஏதாவது ஒரு நீர் நிலைகளில் சேர்த்துவிட வேண்டும். இதன் வாயிலாகவும் ஒருவரது தன யோகம் பெருகும்.

மேலும், இன்னும் பற்பல சூட்சுமமான மந்திர வழிபாட்டு முறைகள் பொருளாதாரம் சார்ந்து நிறைய உள்ளன. அவை யாவுமே அனைவருக்கும் பொருந்தாத நடைமுறை நிலைகளை உள்ளடக்கியவை.

காரணம், ஒவ்வொருவரது ஜனன கால கிரக அமைப்பு நிலைகள், ஒருவருக்கொருவர் வித்தியாசமான நிலைகளில் அமைந்து அவரவர்களுக்கென்று தனிப்பட்ட வாழ்க்கைச் சூழல்கள் அமைந்திருக்கும். அனைவருக்கும் பொதுவான, மங்களகரமான, சுப நிலைகளை உறுதியாகத் தரக் கூடிய வழிமுறைகளில் மேற்கூறியவையும் முக்கியப்பங்கை வகிக்கின்றன என்பது அனுபவ ரீதியானதாகும்.

இங்கு நாம் கண்ட வழிமுறைகள் யாவுமே பல வருடங்களாக நடைமுறையில் இருந்து வருபவையே ஆகும். நமக்குப் பொருந்தும் வழிமுறைகளைக் கடைப்பிடித்தால் நாம் நிச்சயமாக வாழ்வில் பொருளியல் மேன்மையை அடையலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2. திருமணத் தடை விலகச் செய்யும் மந்திரங்கள்

'இரு மனம் இணையும் திருமணம், நறுமணம் வீசிடும் இனிய பூஞ்சோலையாம்' என்பது கவிதை வரி. ஆனால் இன்று பல குடும்பங்களில் இந்த வரிகளுக்கு ஏற்ப, திருமண வாழ்வுதனில் நறுமணம் வீசுவதில்லை.

தாமதமாகும் திருமணங்கள் ஏற்படுத்தும் நடைமுறை வலிகள், இதற்கு முக்கிய காரணங்களில் ஒன்றாக இருக்கிறது. நல்ல கல்வி பெற்ற பின்பு, ஒரு நல்ல வேலையில் அமர்ந்த பின்பு, அந்த வேலையில் நன்கு கால் ஊன்றிய பின்பு, இப்படி பல 'பின்பு'களின் கால இடைவெளியில் சிலர் வாழ்க்கையின் பாதியளவு தூரத்தைக் கடந்து விட நேரிடுகிறது.

அந்தக் கால இடைவெளி, சமூக பொருளாதார வரையறைகளின் செயற்கை நிர்ப்பந்தங்களால் அவர்களே அவர்களுக்குள் திணித்துக்கொண்ட விஷயமாகும். திருமணம் ஒருவருக்கு தாமதமாவதற்குக் காரணம், மேற்கண்ட சுய முடிவுகளின் கால இடைவெளி ஒரு வகை என்றால், ஜாதக ரீதியான கிரக தோஷங்கள் இன்னொரு வகையாக இருக்கிறது. செவ்வாய்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தோஷம், ராகு- கேது தோஷம், மாங்கல்ய தோஷம், களத்திர தோஷம், அனுகூலமற்ற தொடர்ந்த திசாபுத்திகள், அனுகூல மற்ற கோட்சார நிலைகள், என்று பல வகையான ஜோதிட ரீதியான காரணிகளும் ஒருவரது திருமணத்தைத் தாமதமாக்கு கின்றன.

ஜோதிட ரீதியான காரணங்களுக்கு முறையான சரியான தீர்வுகள் நிச்சயமாக உள்ளன. ஆனால், ஒருவரது மனம் சார்ந்த, அவரது குடும்பம் சார்ந்த பொருளாதார மற்றும் சமூக அளவீடு களின் மதிப்பீடுகளை முன்னிறுத்தி திருமணத்தைத் தள்ளிப்போடு வதால், பல நல்ல கால கட்டங்களை அவர்கள் அறியாமலேயே இழக்க நேரிடுவதுதான் தற்போதைய நவீன சூழலின் சங்கடம் உண்டாக்கும் தருணங்களாகும்.

'பருவத்தே பயிர் செய்' என்ற மூதுரை விவசாயம் சார்ந்த பயன் பாட்டு அளவீடு அல்ல. அது மானிட வாழ்வியலின் பயன் தரும் கால கட்ட வாழ்வு முறையின் காலக்கணக்கு ஆகும். அதாவது காலம் கடந்த திருமணத்தால் குழந்தை பிறப்பு, குழந்தைகள் - பெற்றோர்களின் வயது வித்தியாசம், திருமண வாழ்வில் ஈடுபாடு ஆகியவற்றின் இயல்பு நிலைகள் முரண்பாடாக அமைய நிறைய வாய்ப்புகள் உள்ளன.

ஜோதிட ரீதியாக சுக்ரன் என்ற கிரகம் ஒருவருடைய திருமண வாழ்வையும், தம்பதிகளிடையே உள்ள பரஸ்பர ஈடுபாட்டையும் வெளிப்படுத்துகிறது. எனவே சுக்ரன் சார்ந்த பூஜை நியமங்கள் பெரும்பாலான திருமணத் தடைகளை நீக்குகின்றன.

ஒரு வளர்பிறை வெள்ளிக்கிழமை மாலை நேரத்தில் வீட்டின் பூஜை யறை அல்லது ஒரு தனியிடத்தைச் சுத்தம் செய்து, அமர்வதற்கு ஒரு மஞ்சள் விரிப்பும், பஞ்சமுக விளக்கு வைப்பதற்கு பலகை ஒன்றில் மஞ்சள் துணி விரிப்பும் ஏற்படுத்த வேண்டும். விளக்கில் பசு நெய்யும், நல்லெண்ணெயும் சம அளவில் கலந்து தீபமேற்ற வேண்டும். மகா லட்சுமியின் திருவுருவப் படமும் பூஜையில் இடம் பெற வேண் டும். மல்லிகை, முல்லை, செந்தாமரை மலர்களால் அலங்கரித்துக் கொள்ளவேண்டும். நைவேத்தியமாக ஏதேனும் ஒரு இனிப்புப் பொருளை வைக்கலாம்.

மஞ்சள் விரிப்பில் நாம் கிழக்கு முகமாக அமர்ந்து, தெய்வத் திருவுருவை வடக்கு நோக்கி வைத்து புஷ்பங்களால் அழகுபடுத்தி பொட்டிட வேண்டும். தெய்வப்படம், தீபங்கள் யாவும் பலகையின் மேல்தான் இருக்க வேண்டும். பொட்டிட்டு மலர் சாத்தி முடித்து, நைவேத்தியம் நிவேதனம் செய்து பஞ்சமுக விளக்கை ஏற்றி வழி பட வேண்டும்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

'சுபம் கரோதி கல்யாணம்
ஆரோக்யம் தன சம்பதா
சத்ரு-புத்தி-விநாசாய தீப
ஜ்யோதிர்-நமோஸ்துதே
தீப ஜ்யோதி பரப்ரஹ்மா-தீப
ஜ்யோதி ஜனார்த்தன
தீபோ ஹரதுமே பாபம்-தீப
ஜ்யோதிர்நமோஸ்துதே'

பஞ்சமுக விளக்கை ஏற்றிவிட்டு மேற்கண்ட ஸ்லோகத்தை 12 முறை கூறி பஞ்சமுக தீப ஜோதியை நமஸ்காரம் செய்ய வேண்டும். மகாலட்சுமியையும் வழிபட வேண்டும். பின்பு இன்னொரு அகல் விளக்கில் பசு நெய் விட்டு, அதில் சிறிது மொச்சைப் பருப்பைப் போட்டு பஞ்சு திரியால் தீபமேற்றி கீழ்க்கண்ட சுக்ரனுக்குரிய துதியை 48 அல்லது 108 முறை சொல்லவும்.

'ஹிமகுந்த ம்ருணாலாபம்
தைத்யானாம் பரமம் குரும்!
ஸர்வ ஸாஸ்த்ரப்ரவக்தாரம்
பார்கவம் ப்ரணமாம்யஹம்!!'

இதைச் சொல்லி முடித்து பூஜையை நிறைவு செய்து பிரசா தத்தை மட்டும் உண்டு, இரவில் விரதமிருந்து காலையில் விரதத்தை நிறைவு செய்யலாம். தொடர்ந்து 48 நாட்கள் இந்த விரதத்தை செய்து வந்தால் நிச்சயமாகத் தாமதத் திருமணத் தடைகள் நீங்கி, நல்ல இல்லறத் துணை அமையும். தம்மால் செய்ய இயலாத தரு ணங்களில் நமக்காக குடும்பத்தார் யாரேனும் செய்து வரலாம். முக்கியமாக பூஜை காலங்களில் அசைவ உணவுப் பழக்கங்களைத் தவிர்த்து விட வேண்டும்.

பொருளாதார வசதி உள்ளவர்கள், வசதி வாய்ப்புகள் குறைந்த எளிய நிலையில் உள்ளவர்களின் திருமணத்திற்கு, திருமாங்கல் யத்திற்கான தங்கத்தை அவர்களது கைகளாலேயே தானமாக வழங்கலாம். திருமாங்கல்யத்துடன் ஒரு தட்டில் தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, ஏலக்காய், குங்குமம், மஞ்சள், வளையல்கள் ஆகியவற்றையும் சேர்த்து மனமுவந்து தானமாக வழங்க வேண்டும். இதனை முழு மனதுடன் இறைவனது அருள் வாய்ப்பாக எண்ணி விளம்பரங்களின்றி செய்வதே பூரணப் பலன் தரும்.

மற்றொரு வழிமுறை பிரசித்தி பெற்றதாகும். அது 'ஸ்வயம்வர கலா பார்வதி' மந்திரம் என்று வழங்கப்படுகிறது. அன்னை உமா தேவி தாம் மனதார விரும்பிய, 'மறையெலாம் மொழிய நின்ற குறைவிலா அம்பலக்கூத்தனை....' அடைவதற்குச் செய்த தவத்தின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பயனால் நினைத்ததை அடைந்தார். தவப்பயனால் அவரது விருப்பப்படியே தன் மனம் கவர்ந்த நாயகனான பரமேஸ்வரரையே திருமணம் செய்தார். எனவே அந்த சுலோகம் பார்வதியைக் குறித்த வகையிலேயே அமைந்துள்ளது.

பூஜையறையில் சிவ–பார்வதியர் இணைந்திருக்கும்படி நல்ல படமாக வைத்துக்கொள்ள வேண்டும். வாசமுள்ள மல்லிகை, முல்லை மலர்களால் அலங்கரித்து, பொட்டிட்டு தூப– தீப நைவேத்தியங்கள் படைத்து குத்துவிளக்கேற்றி வழிபட வேண்டும். பின்னர் கீழ்க்கண்ட சுலோகத்தைத் தினமும் 24 முறை சொல்லி வர வேண்டும். பூஜையை வளர்பிறை திங்கட்கிழமை ஆரம்பித்துச் செய்ய வேண்டும். காலை, மாலை ஆகிய எந்த வேளையும் உகந்ததே. காலையில் ஆரம்பித்துச் செய்தால் காலை வேளைகளில் மட்டுமே செய்ய வேண்டும். அது போல் முதல் நாள் பூஜையை மாலையில் ஆரம்பித்து செய்தால் எல்லா நாளும் மாலை வேளைகளிலேயே செய்து வர வேண்டும்.

<u>மந்திர ஸ்லோகம்</u>

'ஓம் ஹ்ரீம் யோகினீம் யோகினி
யோகேஷ்வரி யோக பயங்கரி
ஸகல ஸ்தாவர ஜங்கமஸ்ய
முக ஹ்ருதயம் மம வசம்
ஆகர்ஷ ஆகர்ஷய ஸ்வாஹா'

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்த மந்திர ஆகர்ஷண சக்தியால், மனம் போல் மணாளன் அமையும் இனிய வாய்ப்பு ஒருவருக்கு அமையும். இந்தப் பூஜையை தொடங்கும் முன்பு, சாதாரண நீரில் குளிக்காமல் மங்கள நீரில் குளிக்க வேண்டும். மங்கள நீர் என்பது குளிக்கும் நீரில் சிறிது மஞ்சள் பொடி சேர்த்துக் கொள்வது ஆகும்.

பிரஹஸ்பதியான குருவின் ஆகர்ஷண சக்தி நிறைந்த மஞ்சள் பொடி கலந்து குளிக்கும்போது பெண்களுக்குக் குருவின் திருவ ருள் கிட்டுவது நிச்சயம். பெண்கள் ஜாதகத்தில் அமையும் குரு, அவர்களது பர்த்தாவாகிய கணவரின் நிலையைக் காட்டுவதாகும். குருவருளால், கணவன் அவர்களது மனம் கவர்ந்தவராகவே அமை வார். குருவருளும் திருவருளும் அனைவருக்கும் வாய்க்கட்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3. கடன் தொல்லை தீர்க்கும் மந்திரங்கள்

கடன் தொல்லை இல்லாமல் அன்றாட வாழ்வைக் கழிப்பவர்களை விரல் விட்டு எண்ணிவிட முடியும். கடனில் சிக்கி அதில் இருந்து மீண்டு வந்தவர்களும் குறைவானவர்களே! கடனில் தொடங்கி, கடனிலேயே வாழ்க்கையை நடத்தி முடிந்து போனவர்களே இங்கு அதிகம். 'கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்கி நின்றான் இலங்கை வேந்தன்' என்று ராவணனின் நிலைக்கு உவமையாக கூறப்பட்டிருப்பதில் இருந்தே, கலங்க வைக்கும் கடன் தொல்லையின் எல்லையை நாம் கணக்கிட்டு விடலாம்.

தொழில் முதலீடு, பணியாளர் ஊதியம், தொழில் விரிவாக்கம், மூலதனப் பொருட்களின் திடீர் விலையேற்றம், எதிர்பார்த்த லாபம் வராதது, நிர்வாகக் குளறுபடிகள் ஆகிய பற்பல காரண காரணிகளால் ஒருவரது நிறுவனத்திற்கோ, தனிப்பட்ட மனிதர்களுக்கோ,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தொழில் கூட்டாளிகளுக்கோ கடன் தொல்லை ஏற்படுவது இன்றைய பன்முகச் சந்தை வணிக உலகில் மிகவும் சாதாரணம்.

ஆனால், அத்தகைய நிலையில் இருந்து மீண்டு வரத் தெரிந்தவர் சிலரே. பலர், துன்ப துயரங்களில் மனம் நொந்து வாழ்க்கையின் எதிர்மறை அனுபவத்தை அன்றாட நிகழ்வுகளாக எதிர்நோக்கிக் கொண்டுள்ளனர். இந்தப் பரந்த உலகின் பல்வேறு வகை சாத்தியக்கூறுகளும், நமது வாழ்வின் இயல்பான போக்கை ஒரு மாறுபட்ட பார்வையுடன் அணுகத் தகுந்த சூழ்நிலைகளை அவ்வப்போது உண்டாக்கி வைக்கின்றன. அவ்வகையில் ஒருவரது கடன் தொல்லைகளில் இருந்து விடுபட வைக்கும் மந்திரப்பூர்வமான சில வழிமுறைகளை இங்கு காணலாம்.

'நாளை என்பதில்லை நரசிம்மனிடத்தில்...' என்ற வாக்கியம் மிகவும் பிரசித்தமானது. ஒருவருக்கு அமையும் ருணம், ரோகம், சத்ரு (கடன், நோய், எதிரிகள்), ஆகிய தொல்லைகளைத் தாண்டிவர லட்சுமி நரசிம்ம சுவாமியைச் சரண் புகுவதே உடனடி வழியாகும்.

ஒரு வளர்பிறை ஞாயிற்றுக்கிழமை மாலையில் அல்லது செவ்வாய்க் கிழமை மாலையில் லட்சுமி நரசிம்ம சுவாமி சன்னிதியில் 6 நெய் தீபம் ஏற்றி வணங்கி, 12 முறை பிரதட்சணம் வந்து விட்டு கீழ்கண்ட 'ருண விமோசன' ஸ்தோத்திரத்தை 12 முறை படித்து வந்தால் எப்பேர்ப்பட்ட கடனும் நிச்சயம் தீர்ந்து விடும். தினமும் இதைக் கடைப்பிடிப்பது மிக விரைவான பலன்களைத் தரும்.

திருக்கோவிலில் இந்த வழிபாட்டு முறையைச் செய்ய இயலாதவர்கள் லட்சுமி நரசிம்ம சுவாமியின் திருவுருவப் படத்தை வடக்கு முகமாக வைத்து, 4 தீபங்களை மேற்கு நோக்கி ஏற்றி வைத்து, பானகம் நைவேத்தியம் படைத்து, புஷ்ப, தூப, தீப, வழிபாடுகள் செய்து இந்த ஸ்தோத்திரத்தை 24 முறை தினமும் மாலையில் அல்லது இரவில் முடிந்த நேரத்தில் சொல்லி வரவும். இதை வீட்டில் ஒரு குறிப்பிட்ட இடத்திலேயே செய்து வரவும். இதுபோன்ற நேரத்தில் அசைவ உணவுப் பழக்கம் இருந்தால் உடனடியாக நிறுத்தி விட வேண்டியது அவசியம்.

ஸ்தோத்திரம்

'தேவதா கார்ய ஸித்யர்த்தம்
ஸபாஸ்தம்ப ஸமுத்பவம்
ஸ்ரீ நரஸிம்ஹம் மஹாவீரம்
நமாமி ரிண முக்தயே!

லக்ஷ்மியாலிங்கித வாமாங்கம்
பக்தானாம் வர தாயகம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ நரஸிம்ஹம் மஹாவீரம்
நமாமி ரிண முக்தயே!

ஆந்த்ர மாலா தரம் சங்கம்
சக்ராப்ஜாயுத தாரிணம்
ஸ்ரீ நரஸிம்ஹம் மஹாவீரம்
நமாமி ரிண முக்தயே!

ஸ்மரணாத் ஸர்வ பாபக்ரும்
கத்ரூஜ விஷ நாசனம்
ஸ்ரீ நரஸிம்ஹம் மஹாவீரம்
நமாமி ரிண முக்தயே!

ஸிம்ஹ நாதேந மஹதா
திக் தந்தி பய நாஸனம்
ஸ்ரீ நரஸிம்ஹம் மஹாவீரம்
நமாமி ரிண முக்தயே!

ப்ரஹ்லாத வரதம் ஸ்ரீஸம்
தைத்யேச்வர விதாரிணம்
ஸ்ரீ நரஸிம்ஹம் மஹாவீரம்
நமாமி ரிண முக்தயே!

க்ரூரக்ரஹை பீடிதாநாம்
பக்தாநாம் வரதாயகம்
ஸ்ரீ நரஸிம்ஹம் மஹாவீரம்
நமாமி ரிண முக்தயே!

வேத வேதாந்த யக்ஞேஸம்
ப்ரஹ்மருத்ராதி வந்திதம்
ஸ்ரீ நரஸிம்ஹம் மஹாவீரம்
நமாமி ரிண முக்தயே!

ய இதம் படதே நித்யம்
ரிண விமோசன ஸம்க்ருதம்
அந்ருணி ஜாயதே சத்யோ
தனம் ஸீக்ரமவாப்நுயாத்'

முக்கியமாக கடன் தொல்லைகளைச் செவ்வாய் என்ற கிரகமே பெரும்பாலும் குறிப்பிட்டுக் காட்டும். ஆதலால் செவ்வாய்க்கிழமை களில் விரதம் இருந்து அருகிலுள்ள முருகன் சன்னிதியில் மாலை வேளைகளில் 12 முறை பிரதட்சணம் செய்து நெய் தீபமேற்றி வழி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பட்டு வரவேண்டும். முக்கியமாகக் கிருத்திகை நட்சத்திரத்தன்று முருகப்பெருமானை விரதமிருந்து தரிசித்து வந்தால் கடன்கள் தீர வழி வகைகள் பிறக்கும்.

மேலும், கோவிலுக்குள் சென்று வழிபட்ட உடனேயே திரும்பி வந்து விடுதல் கூடாது. இரண்டரை நாழிகைப் பொழுதான ஒரு மணி நேரமாவது இறைவன் திருக்கோவிலில் இருந்து வழிபட வேண்டும். மேலும், திருக்கோவிலுக்குள் நுழைந்ததில் இருந்து யாரிடமும் எதுவும் பேசாமல் **'ஓம் ஸரவண பவாய நம'** என்ற கந்த சுவாமியின் திவ்ய மந்திரத்தை மனதில் சொல்லிக் கொண்டே இருப்பதன் மூலமாக ஒரு தெய்வீக அலை இயக்கத்திற்கு நம்மை நாமே ஆட்படுத்திக்கொள்ளலாம். அதன் விளைவாக மனதில் அமைதியும், அமைதியின் விளைவாகத் தெளிவான சிந்தனையும், அதன் விளைவாகக் காரியத் தெளிவும், சங்கடங்களின் நிவர்த்தியும் உண்டாகி வளமான வாழ்வினைப் படிப்படியாக அடைந்து விடலாம்.

மேலும், அஷ்டமி தினங்களில் பைரவருக்குப் புனுகு சாத்தி நல்லெண்ணெய் தீபமேற்றி, அபிஷேக ஆராதனைகள் செய்து கடன் தொல்லைகள் தீர வேண்டுமென மனமுருகிப் பிரார்த்தனை செய்து வரலாம். பைரவர் வழிபாட்டை மேற்கொள்ளும்போது யாரிடமும் எதுவும் பேசக்கூடாது. அர்ச்சகரிடம் மட்டும் தேவையான விவரங்களைத் தெரிவித்து மவுனம் அனுசரிக்க வேண்டும். கடன் சுமைகள் தீரும் வரையில் கண்டிப்பாக அசைவ உணவு தவிர்க்கப்பட வேண்டும்.

சன்னிதி முன் அமர்ந்து 'ஓம் ஸ்ரீ பைரவாய நமஹ' என்ற மந்திரத்தை 24 நிமிடங்களான ஒரு நாழிகைப் பொழுது மனதால் ஜபம் செய்வது அவசியம். அல்லது, நமக்கு மட்டும் கேட்கும் படியாக மெல்லச் சொல்லிக்கொள்ளலாம். ஸ்ரீ பைரவர் என்ற சிவாம்ஸம் நமது பக்தி கலந்த வேண்டுகோளை ஏற்றருள் புரிய வேண்டுமானால், மவுனமும் அமைதியும் கொண்டு மானசீக ஜபம் செய்வது முக்கியமாகும். தனிப்பட்ட நமது வாழ்வில் நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பதும் அவசியம். அப்படி நெறிமுறை சார்ந்த வாழ்வால் நாம் நிச்சயமாக உயர் நிலையை அடைவது இறை நியதியாகும்.

திருக்கோவில்களில் கோ-பூஜை நடக்கும் போது, அதில் பங்கேற்று கோ-பூஜை செய்தாலும் நமது கடன் தொல்லைகளுக்கு விமோசனம் உண்டாகும். காமதேனுவின் பிரத்யட்ச தோற்றங்களான பசுக்களுக்கு, நாம் வழங்கும் எந்தவித உணவா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

னாலும் நமக்கு அது நல்ல விளைவுகளைத் தரும் கிரக சாந்தியாக அமையும். அதன் மூலமும் நமது கஷ்ட நஷ்டங்கள் ஒரு முடிவுக்கு வரும்.

கடன் தொல்லைகள் தீர்வதற்கான வழிமுறைகளில் சிலவற்றைப் பார்த்தோம். தற்போதைய காலச் சூழ்நிலைகளில், ஒருவருடைய அறிவுத் திறம், கல்வித்தரம், சுதந்திர மனோபாவம் ஆகிய வாழ்வு முறைகளின் வெளிப்பாடாக, அகவியல் பயன்பாட்டு வழிமுறைக ளான ஆன்மிக உணர்வுகள் குறைத்து மதிப்பிடப்படுகிறது. அத னால் நாம் இழந்த பண்பாட்டின் வழித்தடங்கள் ஏராளம்.

நமது இந்தியப் பாரம்பரியத்திற்கு என்று ஒரு மிக வலிமையான பின்புலம் உண்டு. அது அகவியலாம் ஆன்மிகமாகும். சிறிதோ, பெரிதோ நாம் செய்யும் பூஜைகளோ, தெய்வ தரிசனங்களோ, ஜப தபங்களோ நிச்சயமாக நமது ஆழ்மனதில் நல்ல பதிவாக அமைந்து நல்ல விளைவுகளை உண்டாக்கும். விஞ்ஞான வளர்ச்சி கள் தர முடியாத மன அமைதியைப் பெறுவதற்காகவே நமது மதம் சார்ந்த வழிபாட்டுத் தலங்கள் நம் முன்னோர்களால் திட்ட மிட்டு அமைக்கப்பட்டுள்ளன. கலையழகும், தெய்வீகமும் நிரம்பிய அத்தகு திருத்தலங்களை நாம் அடிக்கடி தரிசித்து வந்தாலே ஒரு இனம் தெரியாத அமைதியை உறுதியாக உணரலாம். திருத்தலங் களைத் தரிசிப்போம்.. மேன்மை பெறுவோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



4. கல்விச் செல்வம் வழங்கும் மந்திரங்கள்

'கண்ணுடையரென்போர் கற்றோர்' என்று வள்ளுவம் மொழியும் செல்வத்துள் தலையாய கல்விச் செல்வம் ஒருவருக்கு நன்முறையில் அமைவது அவரது தவப் பயனே என்றால் அது மிகையன்று.

எல்லாவித வாழ்வியல் வாய்ப்புகளையும் பெற்ற ஒருவர் கல்வியில் சாதாரண நிலையில் இருப்பதும், தெருவில் எரியும் மின் விளக்கொளி யில் படித்தவர் 'எழுமையும் ஏமாப்புடைத்த' கல்வியில் சிறந்து விளங்குவதும் தற்போதைய நடைமுறையில் நாம் காணும் விஷயங் களாகும்.

அத்தகைய கல்விச் செல்வத்தைப் பெற ஒருவருக்கு என்னென்ன வழிகளில் தடை தாமதங்கள் ஏற்படுகின்றன? என்ற கேள்விக்கு மனம் சார்ந்த சிக்கல்கள் 60 சதவிகிதமும், உடல் சார்ந்த சிக்கல்கள் 20 சதவிகிதமும், மீதியுள்ள 20 சதவிகிதம் பொருளாதார, சமூக, பண்பாட்டு சிக்கல்கள் என்றும் உடனடியாகப் பதில் கிடைக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மனம் சார்ந்த ஒருவரது கவன ஒருமையின் சுய சாத்தியங்களின் சதவிகித அளவீட்டை, அவரது சுய முயற்சியின் விளைவுகளாலேயே அதிகப்படுத்தக்கூடிய ஆன்மிக ஜோதிட வழிவகைகளை இந்தக் கட்டுரையில் நாம் காண இருக்கிறோம்.

கல்வி என்ற பதம் மிக ஆழ்ந்த பொருள் உடையதாகும். கல்வியின் ஆழத்தையும், ஞாபக சக்தியையும் நாம் விருத்தி செய்துகொள்ள நம்முடைய ஆன்மிகப் பெரியோர்கள் பல்வேறு மந்திர, வழிபாட்டு முறைகளைத் தந்துள்ளார்கள். அவற்றில் சிலவற்றை இப்போது காணலாம்.

கல்வி என்றாலே சரஸ்வதி தேவிதான், நம் மனக்கண் முன் வருவாள். கையில் புத்தகங்களை வைத்துக்கொண்டு, ஞானத்தின் வெளிப்பாடான வெண் தாமரை மீது அமர்ந்து கொண்டு மென்மையான தோற்றம் கொண்ட ஒரு சாத்வீக தேவதை அம்சமே சரஸ்வதிதேவி.

அந்தச் சரஸ்வதி தேவியை வழிபட வார நாட்களில் உகந்தது புதன் கிழமையாகும். அதனால் ஒரு வளர்பிறை புதன்கிழமை நாளில் மாணவ மணிகள் அதிகாலையிலேயே குளித்து முடித்து சரஸ்வதி தேவியின் திருவுருவப் படத்திற்கு முன்பு வடக்கு முகமாக அல்லது கிழக்கு முகமாக நின்று நெய் தீபமேற்றி கீழ்க்கண்ட மந்திரத்தை 24 முறை அல்லது 48 முறை கூறி வர வேண்டும்.

'ஓம் ஐம் ஸாரஸ்வத்யை நமஹ'

இந்த மந்திரத்தைத் தொடங்கிய நாளில் இருந்து தினமும் காலை, மாலை இரு வேளைகளிலும் 48 முறை சொல்லி வருவதால் பாடங்களில் கிரகிப்புத் திறன் நிச்சயமாக கூடி வரும். இந்த மந்திரத்தின் உள்ளார்ந்த சப்த அலைவரிசையின் அமைப்பால் கவனம் மெல்ல மெல்ல விருத்தியாகி மனதின் கிரகிக்கும் தன்மை நல்ல முறையில் மேம்படும். மேலும், மன ஒருமைப்பாடு அடையவும், பாடங்கள் எளிதில் புரியவும், மனதில் பதியவும் கீழ்க்கண்ட துதியை 24 முறை சொல்லி கற்கண்டு நைவேத்தியம் செய்து அதைப் பிரசாதமாக உட்கொள்ள வேண்டும். நெய் தீபமும் ஏற்றி வைத்து துதியைச் சொல்ல வேண்டும் .

'ஸரஸ்வதி நமஸ்துப்யம் வரதே காம ரூபிணி!
வித்யாரம்பம் கரிஷ்யாமி ஸித்திர் பவ து மே ஸதா!!'

மேற்கண்ட சரஸ்வதி துதியைத் தினமும் கூறிவந்தால் தத்தம் பாடங்களில், தேர்ந்த அறிவுத்திறனை நமது மாணவக் கண்மணிகள் நிச்சயம் பெறுவார்கள். மாணவ- மாணவியர் கல்வி கற்க

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அமரும் திசை வடக்கு அல்லது கிழக்கு நோக்கி இருப்பது மிகவும் சிறந்ததாகும். வீட்டில் படிப்பதற்கு அமரும் போது கிழக்கு நோக்கி இருப்பதே மிகவும் சிறந்ததாகும். அல்லது வடக்கு நோக்கி அமர லாம். படிக்கும் அறையில் இளம் பச்சை அல்லது வெளிர் சிவப்பு நிறங்களே பிரதானமாக இருக்க வேண்டும். அந்த நிறங்கள் மனதின் கவனத்தையும், கிரகிப்புத் தன்மையையும் தூண்ட வல்லவை.

பாடங்களில் நன்கு கவனம் செலுத்திப் படித்தும் கூட மனதில் அது நிற்காததும், பல முறை மனப்பாடம் செய்தும் கூட பரீட்சை எழுதும்போது அது மறந்து போய் விடுவதும் பல மாணவ மணி களுக்கு ஏற்படும் அனுபவமாகும். இதிலிருந்து விடுபட காலை யில் உணவு உண்டு முடித்த பின்பு சிறிது துளசிச் சாறுடன் சிறிது தேன் (அரை ஸ்பூன் மட்டுமே, அதிகம் கூடாது) கலந்து அருந்தி வந்தால் அவர்களது ஞாபக சக்தி நிச்சயமாக நல்ல முறையில் விருத்தியடையும்.

கூடுதலாக, ஒவ்வொரு புதன்கிழமையும் காலையில் பசு மாட் டுக்கு வாழைப் பழங்களோ, பசுந்தீனிகளோ மாணவர்கள் கை களாலேயே தந்து வந்தால், வித்யா தோஷங்கள் யாவும் நீங்கி கல்வி விருத்தி நிச்சயம் உண்டாகும். பரீட்சை நேரங்களில் பள்ளி செல் லும் முன்பாக அவர்களது பேனா, பென்சில் முதலிய பொருட்கள் யாவையும் சரஸ்வதி தேவி அல்லது ஹயக்ரீவர் படத்தின் முன்பு வைத்து பிரார்த்தித்து விட்டு எடுத்துச் செல்லலாம்.

இவைகளின்றி இன்னும் ஒரு பிரபலமான முறையும் நடைமுறை யில் உள்ளது. அது வேதங்களின் ஸ்தூல சொரூபமாகவே திருமேனி அமையப்பெற்ற ஹயக்ரீவரின் உபாசன முறையாகும். மாணவ மணிகள் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் ஹயக்ரீவரின் படத்தின் முன்பாக சிறிது பசும்பாலில் கற்கண்டுப்பொடி சேர்த்து நைவேத் தியம் செய்து கீழ்க்கண்ட ஸ்தோத்திரத்தை 24 முறைகள் சொல்லி, ஹயக்ரீவப் பெருமாளை அன்புடன் வழிபட்டு பிரசாதத்தை உட் கொண்டு வந்தால், வித்யா அபிவிருத்தி நிச்சயம் ஏற்படும்.

மறக்காமல் நெய் தீபமும் ஏற்றி வைக்க வேண்டும். இன்னும் விசேஷமாக தீபம், படம் இரண்டையும் சேர்த்து 12 முறை பிரதட் சணம் செய்து வந்தால் நிச்சயமாக நல்ல பலன்கள் உண்டாகும்.

ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்தோத்திரம்

'ஞானாநந்த மயம் தேவம்
நிர்மல ஸ்படிகாக்ருதிம்!
ஆதாரம் ஸர்வ வித்யானாம்
ஹயக்ரீவம் உபாஸ்மஹே!!'

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இது நமது மாணவ, மணிகளில் பலருக்கு அறிமுகமான மந்திரமே ஆகும். இதனுடைய மகத்துவம் பற்றி நாம் அனுபவ ரீதியாகவே தெரிந்து கொள்ள இயலும். அதுவும் இந்த மந்திரத்தை உச்சரித்த படி பிரதட்சணமாக வலம் வந்து வணங்கினால் மிக நல்ல பலன் களை உறுதியாக எதிர்நோக்கலாம். வலம் வருவதன் மூலமாக ஒருவரது பிரார்த்தனையின் மையப்பொருள் அவரது மனதில் நன்கு பதிகிறது.

அதன் சக்தி மையமும் தூண்டப்படுவதன் மூலமாக அவரது பிரார்த்தனைக்கான சாதக சூழ்நிலைகள் தாமாகவே வந்தமைகிறது. இதுவும் இயற்கை நியதியே என்பதை அனுபவம் நிச்சயம் உணர்த்தும்.

கல்வி சம்பந்தமான மந்திரங்களில் ஒரு முக்கிய இடம் வகிப்பது புதன் கிரகத்தின் மந்திரமாகும். இதை மாணவக் கண்மணிகள் சொல்லி வரலாம். இல்லாவிடில் தாயாரோ அல்லது தந்தையாரோ இதைத் தம் பிள்ளைகள் பொருட்டு பசும்பாலில் மந்திர உச்சாடனம் செய்து தமது கண்மணிகளுக்கு தந்து வரலாம்.

அதாவது, ஒரு வளர்பிறை புதன்கிழமை அன்று காலையில் தேக சுத்தி விஷயங்களை முடிக்க வேண்டும். பிறகு பூஜையறையில் அல்லது ஒரு தனியிடத்தில் வடக்கு முகமாக அமர்ந்து வெள்ளி அல்லது பித்தளை அல்லது செம்பு டம்ளரில் பசும்பாலை எடுத்துக்கொண்டு தமது வலது உள்ளங்கையில் அதை வைத்து கீழ்கண்ட புதனுக்குரிய துதியை 24 முறைகள் சொல்வதன் மூலமாக பசும் பாலில் மந்திர சக்தி ஈர்க்கப்படுகிறது. பிறகு அதைத் தமது குழந்தைகளுக்குப் பிரசாதமாகத் தரும்போது அவர்களது கல்வி சம்பந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மான சிக்கல்கள் நீங்கப் பெறுவார்கள். புதன்கிழமை ஆரம்பித்து தினந்தோறும் செய்து வந்தால் நல்ல பலன்களைப் பெறலாம். மேலும் அதை *90* நாட்கள் செய்வது மிகவும் நல்லதாகும்.

புதன் ஸ்தோத்திரம்

'ப்ரியங்கு கலிகாஸ்யாமம்
ரூபேணப் பிரதிமம் புதம்!
சௌம்யம் சௌம்ய குணா பேதம்
நமாமி ஸஸீநம் ஸுதம்!!

புதன் துதியை மட்டுமல்லாமல் மேலே கண்ட அனைத்து மந்திரங்களையும் பசும்பாலில் மந்திர உச்சாடனம் செய்து, நம் குழந்தைகளுக்குத் தந்து வரலாம். மாணவர்களே செய்து வந்தால் மிகவும் நல்லது. மேற்கண்ட மந்திரங்கள் யாவுமே சௌம்ய (சாத்வீக) தேவதை மந்திரங்கள் என்பதால், அசைவ உணவு சம்பந்தம் கூடவே கூடாது. பெரும்பாலான மந்திர நலன்கள் யாவையுமே அசைவ உணவு தடுத்து விடும் என்ற காரணத்தால், நிறுத்தி விடுவது நல்லது. அல்லது தேர்வுகள் சமயத்திலாவது அசைவ உணவைக் கைவிடுவது சிறந்தது.

ஒவ்வொருவருக்கும் படிக்கும் முறை வித்தியாசமாக அமைந்திருக்கும். அதில் எவ்வித மாற்றமும் செய்யாமல் அவரவரது மனோ இயல்புக்கு ஒத்திசைவாக படிக்கும் முறைகளையும் நேரத்தையும் திட்டமிட்டு அமைத்துக்கொள்வது மிகவும் நல்லதாகும். அத்துடன் மேற்கண்ட முறைகளையும் கடைப்பிடித்து வந்தால் கல்வி சம்பந்தமான அனைத்துவித முன்னேற்றங்களும் நம்மை நிச்சயமாக வந்தடையும் என்பது உறுதியாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



5. சொந்த வீடு அமைய வழிகாட்டும் மந்திரங்கள்

நமது வாழ்க்கைக்குத் தேவையானவற்றில் மூன்று 'உ'க்கள் மிக முக்கியத்துவம் பெறுகின்றன. அவை உணவு, உடை, உறையுள். அமீபாவில் இருந்து மனிதன் வரையுள்ள பல்லுயிர்த் தொகுப்பில் அனைத்து உயிர்களுக்கும் உணவே பிரதானமாகும். இந்த வரிசையில் உறையுள் என்ற வீடும் எல்லா உயிர்களுக்கும் முக்கியம் என்றாலும் கூட, உச்ச பரிணாம வளர்ச்சியுற்ற மானிட சமூகமே அதில் பூரண நிலையை எட்டியிருக்கிறது.

பல்லுயிர்த் தொகுப்பில் வேண்டுமானால் உறைவிடத்தில், மனித இனம் பூரண நிலையை எட்டியதாக கூறிக்கொள்ளலாம். ஆனால் மனித இனத்தை மட்டும் தனியாக அடையாளப்படுத்தி பார்த்தோம் என்றால், வாடகை வீடுகூட இல்லாதவர்களும், வாடகை வீட்டில் இருந்து கொண்டு சொந்த வீட்டிற்காக ஏங்குபவர்களும் அதிக அளவில் இருப்பதைக் காணமுடியும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'தலை சாய்க்க ஒரு தனியிடம்', 'எலி வளையானாலும் தனி வளை' என்று நடைமுறையில் உள்ள சொல் வழக்குகள் சொந்த வீட்டின் பெருமை பற்றி பேசுகின்றன. 'நினைவு தெரிந்த நாளில் இருந்து கஷ்டங்களையே அனுபவித்து வந்துள்ளோம். இருந்தாலும் வாடகை வீடுதானே இன்னும் நமக்கு வாய்த்திருக்கிறது. வாடகை வீட்டில் இருந்து மாறி நாம் சொந்த வீடோ, மனையோ அடைய ஏதேனும் உபாயம் உள்ளதா? என்ற வினாவிற்கு சற்று விரிவாக மந்திரப் பூர்வமான வழிகளையும், ஜோதிட ரீதியான உபாயங்களையும் பார்க்க இருக்கிறோம்.

முதலில் வரும் பூஜை முறையானது ஒரு பழமையான, பெரும்பாலும் நடைமுறையில் இல்லாத ஒன்றாகும். இந்த முறை 'பூமி வசிய பூஜை' என்று வழங்கப்படுகிறது. இதற்கான பாடல் கீழே வருகிறது.

**'விருந்துவான் பரணி ஓணம்
விசாகம் மூட அஸ்தம் நாளில்
கருத்துடன் நாலாங் காலில்
கடகம் வந்துற்ற போது
திருத்திய சேய் நாள் மண்ணைத்
தின்றிட செல்வம் மிஞ்சி
பொருத்தமும் புகழும் உண்டாய்
பூமியும் தன்னதாகும்'**

மேற்கண்ட பாடல் படிக்க எளியதுதான். ஆனால் அர்த்தம் ஆழமானதாகும். அதாவது பரணி, திருவோணம், விசாகம், அஸ்தம் ஆகிய நட்சத்திரங்களின், நான்காம் பாதம் அமைந்த செவ்வாய்க்கிழமை நாட்களில், கடகம் லக்னம் அமைந்த வேளையில் பூஜை செய்ய வேண்டும். அப்போது பிரசாதமாக ஒரு துளி மண்ணை (குறைந்த அளவு மட்டுமே) உட்கொண்டால், நமக்கென்று இந்தப் பூமியில் ஒரு இடம் சொந்தமாக அமையும் என்பது மட்டுமல்லாமல், எல்லாவித செல்வங்களும் ஒருவருக்கு வந்து சேரும் என்பது உறுதியாகும். அது மட்டுமின்றி நமது பூமி சம்பந்தமான எல்லாவித பிரச்சினைகளும் விலகி புகழ்பட வாழும் பூமி பாக்கியம் அடையப்பெறலாம்.

அதன் வழிபாட்டு முறைகளை இப்போது காணலாம்.

முதலில் நமது வீட்டின் (வாடகை வீடாக இருந்தாலும் பரவாயில்லை) தலை வாசலைச் சுத்தம் செய்து, கதவு மற்றும் நிலைகளில் மஞ்சள், சந்தனம் பூசி குங்குமம் இட்டு, மாவிலை தோரணம் கட்ட வேண்டும். பிறகு பூஜையறையில் ஒரு சிறிய கலசத்தில் பச்சரிசி அல்லது மஞ்சள் கலந்த நீரை நிரப்பி தேங்காய் வைத்து மாவிலையால் அலங்கரிக்க வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு ஆகியவற்றோடு, செந்நிற மலர்களான ரோஜா, செவ்வரளி, செம்பருத்தி, தாமரை போன்றவற்றுடன், அருகம்புல், வில்வ இலை, மரிக் கொழுந்து ஆகிய மூன்று மூலிகைகளும் அவசியம் பூஜையில் இடம் பெற வேண்டும். வீட்டின் வடக்கு அல்லது கிழக்குத் திக்குகளில் இருந்து எடுக்கப்பட்ட மண்ணை நன்கு சுத்தம் செய்து கொழுந்து மண்ணாக எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். (அதாவது ஒரு அடி ஆழத்தில் மண்ணை தோண்டி எடுக்க வேண்டும்). வாழைப்பழத்தைச் சிறு துண்டுகளாக நறுக்கி அதில், கொழுந்து மண்ணை மிகச் சிறிய அளவில் தூவி வைத்துக்கொள்ள வேண்டும்.

மஞ்சள் பிள்ளையார் பிடித்து வைக்க வேண்டும். அத்துடன் கணபதி, மகாலட்சுமி, சரஸ்வதி ஆகியோரின் படங்களுக்கு மலர்களால் அலங்காரம் செய்ய வேண்டும். குத்துவிளக்கில் பசு நெய் விட்டு தீபமேற்றி வைக்க வேண்டும். பிறகு கணபதி வழிபாட்டுடன் தொடங்கி தூப, தீப ஆராதனை செய்து பூஜையை முடிக்க வேண்டும். 'ஓம் அங்காரஹாய நமஹ' என்ற மந்திரத்தை 48 முறை சொல்லி பூமிகாரகனான செவ்வாயை மானசீகமாக வழிபட வேண்டும். மிகவும் முக்கியமாக மண் தூவப்பட்ட வாழைப் பழத்துண்டுகளை மேலே நாம் பார்த்த அந்தப் பூமி வசிய நேரத்திற்குள் வீட்டில் உள்ள அனைவரும் பிரசாதமாக உண்பதுதான் மிக முக்கியமாகும்.

அத்துடன் நமது குல தெய்வத்தையும் இஷ்ட தெய்வத்தையும் வணங்கி பூமி பாக்கியம் அமைய பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும். இந்தப் பூஜையால் நமக்கு நிலம், வீடு, மனை, தோட்டம் ஆகிய பூமி சம்பந்தமான சகல சிக்கல்களும் விலகி சவுபாக்கியமான வாழ்க்கைச் சூழல் நிச்சயமாக உண்டாகும். சுய ஜாதக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ரீதியாக வீடு, மனை யோகம் இல்லாதவர்களுக்கு இந்த முறை ஒரு விமோசனமாக அமைவது உறுதியாகும்.

பூமி லாபத்திற்கான இன்னொரு வழி மங்களகாரகனான செவ்வாய் வழிபாடாகும். செவ்வாய்க் கிழமைகளில் கீழ்க்கண்ட துதியைச் சொல்லி, பூஜையறையில் இரண்டு அகல் விளக்கில், செவ்வாயின் தானியமான துவரம் பருப்பை இட்டு நெய்யி னால் தீபமேற்றி வணங்க வேண்டும். அதற்கு முன்பு குல தெய்வ வழிபாடும் இஷ்ட தெய்வ வழிபாடும் செய்து கொள்ள வேண் டும்.

செவ்வாய் துதி...

‘தரணி கர்ப்ப ஸம்பூதம்
வித்யுத் காந்தி ஸமப்ரபம்!
குமாரம் ஸக்தி ஹஸ்தம் ச
மங்களம் ப்ரணமாம்யஹம்!!

செவ்வாய்க்கிழமை காலையில் விரதமிருந்து 24 வாரங்கள் வழிபாடு செய்து வந்தால் நிலம் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு விடிவு ஏற்படும். சொத்து சம்பந்தமான வம்பு வழக்குகள் அகல வும் இந்த வழிபாட்டை மேற்கொள்ளலாம்.

வாடகை வீட்டில் இருப்பவர்கள் சிலருக்குச் சொந்த வீடு கட் டுவதற்கு வசதி இருந்தும் அதற்கான நேரம், காலம் கூடி வராமல் தட்டிக் கொண்டே செல்லும். சொந்த வீடு கட்ட வேலையைத் தொடங்கினால் பலவித தடைகள் ஏற்படும். சுமூகமாக இருந்த விஷயங்கள் கூட சுணங்கத் தொடங்கும். இந்த நிலையில் இருப்ப வர்களுக்கு ஒரே ஒரு உபாயமே உள்ளது.

அது, பூமிகாரகனான செவ்வாயின் அதிதேவதையான முருகப் பெருமானின் திருவருளை நாடுவதேயாகும். செவ்வாய்க்கிழமை தோறும் காலையில் முருகப்பெருமானுக்கு, பால், இளநீர், தேன் ஆகியவற்றால் அபிஷேக ஆராதனை செய்து, மலர் மாலை சூட்டி நம்முடைய விருப்பங்களைப் பிரார்த்தனையாக சமர்ப்பிக்க வேண் டும். இவ்வாறு 12 வாரங்கள் செய்து வந்தால், எண்ணங்கள் யாவுமே கைகூடும்.

இந்த முறையை வீட்டிலேயே கூட கடைப்பிடிக்கலாம். முரு கனின் படத்திற்கு பொட்டிட்டு, நெய் தீபம் ஏற்றி, மலர் சாற்றி, தூப- தீபம் காட்டி, நைவேத்தியம் நிவேதனம் செய்து, பிரார்த் தனை செய்ய வேண்டும். கூடவே தேங்காய், பழம், வெற்றிலை, பாக்குடன் ஒரு இரண்டு ரூபாய் காசையும், ஒரு ரூபாய் காசை யும் பன்னீரில் கழுவித் துடைத்து, சந்தனம் குங்குமம் கொண்டு பொட்டிட்டு வைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் முருகனைப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரார்த்தித்து, அந்த இரு காசுகளையும் ஒரு மஞ்சள் துணியில் முடிந்து வைத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு 12 வாரங்கள் செய்த பிறகு, 24 காசுகளையும் முருகனின் சன்னிதானத்தில் உள்ள உண்டியலில் சேர்ப்பித்துவிட வேண்டும். இவ்வாறு செய்தால் நம்முடைய குழப்பமான மனநிலையை முருகப்பெருமான் தீர்த்து வைப்பார் என்பது நிச்சயம்.

ஜாதக ரீதியாக பித்ரு தோஷங்கள் அமையப் பெற்றவர்களும் வீடு, மனை வாயிலாக லாபம் அடைவதில் பலவிதமான சிக்கல்களைச் சந்திப்பார்கள். அவர்கள் பித்ரு பூஜை முறைகளை நியதியுடன் பின்பற்றினால் அதிலிருந்து விடுபட்டு விடலாம். பித்ரு பூஜையன்று கண்டிப்பாக அன்னதானம் செய்ய வேண்டும். அதனால் ஏற்படும் நன்மைகளைக் கணக்கிடவே முடியாது. ஒரே நேரத்தில் பலவிதமான நன்மைகளைச் செய்யும் ஒரு மகத்தான பூஜை முறையே பித்ரு பூஜையாகும். பித்ரு பூஜையை அவரவர்களது சக்திக்கு உட்பட்டுச் செய்வதே மிக உகந்ததாகும்.

ஜாதக ரீதியாக நான்காமிடமும், நான்கிற்குரியவனும், பூமிகாரகனான செவ்வாயும், வீட்டின் அழகான தோற்றத்திற்குக் காரணமாக விளங்கும் சுக்ரனும், எந்த விதத்திலாவது பாதிக்கப்பட்டிருந்தால் ஒருவருக்கு அமையும் வாடகை வீடு கூட பிரச்சினைக்குரியதாக மாறி, மனதிற்கு சங்கடங்களை உண்டாக்கும்.

இந்த நிலை மாறவும், மனதில் நிம்மதியும், அமைதியும் குடி கொள்ளவும் ஏதாவது ஒரு பழைய திருக்கோவிலின் கோபுரங்களுக்கு வர்ணம் பூசியோ, கோவிலின் உட்புற, வெளிப்புறச் சுவர்களுக்கு வெள்ளையும், காவி வர்ணமும் பூசி பராமரிப்பு செய்தாலோ மிகவும் நல்ல பலன்களை அனுபவ ரீதியாகக் கண்டு உணரலாம்.

இறைவன் உறையும் திருத்தலத்திற்கு நாம் சேவை, செய்வதென்பது இறைவனின் சித்தமிருந்தால் மட்டுமே ஒருவருக்குக் கிட்டும் நல் வாய்ப்பாகும். அது அனைவருக்கும் கிட்டாது. ஆழ்ந்த பக்தியுடன் கூடிய சுய விருப்பமே அதற்கு முதல் தகுதியாகும். இறைவன் உறையும் திருத்தலமான அவனது இல்லத்தை நாம் பராமரித்துச் செப்பனிடும்போது, நமது வீடு குறித்த விருப்பங்களை அவனே பூர்த்தி செய்து வைப்பான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

6. சந்தான பாக்கியம் தரும் மந்திரங்கள்

'ஒருவருக்கு அமையக்கூடிய சந்தான (குழந்தை) பாக்கியத்தின் மேன்மை பற்றி திருவள்ளுவரின் அற்புதமான மேற்கோள்களே இந்த இரு குறள்களும்.

'குழலினிது யாழினிது என்பர் தம்மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்'.

'அமிழ்தினும் ஆற்றல் அரிதே தம்மக்கள்
சிறுகை அளாவிய கூழ்'

20 வருடத்திற்கு முன்பிருந்த வாழ்க்கைச் சூழலில் நூற்றில் ஒருவருக்கே குழந்தை பாக்கியம் அமைவதில் சிக்கல்கள் இருந்தது. ஆனால் தற்போதைய சிக்கலான வாழ்க்கைச் சூழலில் அந்த எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளது என்பதே கவலையளிக்கும் உண்மையாகும். நாம் அந்த சிக்கலைப் பற்றி ஆராயாமல், சிக்கலில் இருந்து விடுபட்டு குழந்தை பாக்கியம் பெறக்கூடிய வழிபாட்டு முறைகளையே நாம் இங்கு காணவிருக்கிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'ஊர் சொல்ல நீ வாழ்ந்தாலும், பேர் சொல்ல ஒரு பிள்ளை வேண்டும்' என்பது ஊர் வழக்கு மொழியாகும். அத்தகைய சிறப்பு வாய்ந்த, முக்கியத்துவமும் கொண்ட மழலைச் செல்வத்தினைப் பெற்றுத் தரக்கூடிய நுட்பமான மந்திரங்களையே இங்கு அறிய விருக்கிறோம்.

ஒருவரது ஜாதக ரீதியாக லக்னம், லக்னாதிபதி, சந்தான ஸ்தானம், சந்தான ஸ்தானாதிபதி, புத்ரகாரகன் ஆகிய 5 நிலைகளிலும் அவருக்கு பாதிப்புகள் இருந்தால் மட்டுமே குழந்தை பாக்கியம் தாமதமாவதோ, அல்லது இல்லாமலிருப்பதோ ஏற்படும். ஜாதகத்தின் காமகாரகன் எனப்படும் சுக்ரன் பாதிப்படைந்திருந்தாலும் கணவன்–மனைவி தாம்பத்தியக் குறைபாடுகளால் குழந்தை பாக்கியம் தாமதப்படும்.

வியாழனாகிய குரு பகவான், புத்ரகாரகன் என்று போற்றப்படுகிறார். இவர், ஒருவரது ஜாதகத்தில் பாதிப்படைந்திருந்தாலும் குழந்தை பாக்கியக் குளறுபடிகளால் குழப்பம் ஏற்படும். ஜனன காலத்தில் ஒருவருக்கு அமையும் நவக்கிரக ஸ்தான அமைவுகள் யாவுமே அவரது வாழ்வியல் பதிவுகளின் தினசரி பக்கங்களாகும். நம்மால் அதில் மாற்றங்கள் எதுவும் செய்ய முடியாது. இருப்பினும் எல்லாம் வல்ல இறைவனை நாடுவதால் நலன்கள் பல நம்மை நாடிவந்து சேரும்.

முதலாவதாக நாம் காணவிருப்பது 'ஸ்ரீ சந்தான கோபால கிருஷ்ண' மந்திரமாகும். இது சிவபெருமானே தமது திருவாய் மலர்ந்தருளியது.

'ஓம் க்லாம் க்லீம் க்லூம்
தேவஹி ஸுத கோவிந்த வாஸுதேவ ஜகத் பதே
தேஹிமே தனயம் க்ருஷ்ணத்வாமஹம் ஸரணம் கத:
தேவ தேவ ஜகன்னாத கோத்ர விருத்திகாப்ரபோ
தேஹிமே தனயம் ஸீக்ரம் ஆயுஷ்மந்த்தம் யஸஸ்வினம்'

இந்த துதியை ஒரு மரப்பலகையின் மேல் கோபால கிருஷ்ணரின் படத்தை வைத்து நெய் தீபமேற்றி, பசும்பாலில் கற்கண்டுப் பொடியும் முந்திரி பருப்பும் சேர்த்து நைவேத்தியம் செய்து 11 முறை இந்த மந்திரத்தைச் சொல்லி வரவேண்டும். இவ்வாறு 108 நாட்கள் செய்து வந்தால் நாம் எதிர்பார்த்தது நடப்பது நிச்சயம். இந்த மந்திரத்தை ஒரு வளர்பிறை புதன்கிழமை காலையில் ஆரம்பித்துச் செய்யலாம். அல்லது வளர்பிறை புனர்பூசம் நட்சத்திரத்திலோ, திருவோணம் நட்சத்திரத்திலோ தொடங்கலாம்.

பூஜையை நிறைவு செய்த பின்பு, பூஜை செய்தவரே நைவேத்திய பாலைப் பிரசாதமாகத் தமது உள்ளங்கையில் விட்டு முத

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

லில் அருந்த வேண்டும். பிறகு மற்றவர்கள் அருந்தலாம். இந்தப் பூஜையைச் செய்யும்போது கிழக்கு முகமாக அமர்ந்து செய்வதே சிறந்ததாகும். மிக முக்கியமாக இந்தப் பூஜைக்கு முன்னர் ஒரு சங்கல்பம் செய்து கொள்வது நல்லது. பூஜையால் குழந்தை பாக்கியம் அடைந்து, அக்குழந்தைக்கு ஒரு வயது நிறைவடைந்த பிறகு, ஏதாவதொரு குழந்தை கிருஷ்ணனின் சன்னிதியில் குழந்தையின் எடைக்கு எடை கல்கண்டு தருவதாக நேர்ந்துகொள்ள வேண்டும். கற்கண்டு சாதமும் பிரசாதமாக வழங்க வேண்டும்.

இந்தப் பூஜையை செய்ய இயலாதவர்கள் கோவில்களில் நடத்தப்படும் சந்தான கோபால கிருஷ்ண பூஜையில் கலந்து கொள்ளலாம். அந்தப் பூஜையில் தம் பதிகளின் மடி மீது குழந்தை கோபால கிருஷ்ணனின் விக்ரகம் வைக்கப்பட்டு அதற்கு பூஜைகள் நடக்கும். அதை 6 முறை அல்லது 9 முறை செய்து விட்டாலே போதும். கண்ணனின் அம்சமோ அல்லது ராதையின் அம்சமோ அவர்களுக்கு குழந்தையாக வந்து பிறப்பதாக ஐதீகம்.

மேலும் ஒரு சாக்த மந்திரத்தைச் சந்தான பாக்கியத்தின் பொருட்டு இங்குக் காணலாம். இந்த மந்திரத்தை ஒரு வளர்பிறை ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் செய்ய வேண்டும். பூஜைக்கு ஸ்ரீ ராஜராஜேஸ்வரியின் திருவுருவப் படத்தைப் பயன்படுத்த வேண்டும். ஒரு வெள்ளி டம்ளரில் காய்ச்சிய பசும்பாலை வைத்து, அதில் 3 முந்திரி பருப்பினையும், கற்கண்டு பொடியைச் சேர்த்து எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். வழக்கம்போல் நெய் தீபம், தூபம், ஆரத்தி, நைவேத்தியம் என்ற முறையில் பூஜையைச் செய்து முடிக்க

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேண்டும். பூஜையின்போது கிழக்கு முகமாக அமர்ந்திருக்க வேண்டும். பூஜை தொடங்கிய நாளில் இருந்து உணவில் பசுநெய் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஒரு ஸ்படிக மாலை கொண்டு கீழ்க் கண்ட மந்திரத்தை 48 அல்லது 108 முறைகள் ஜபம் செய்ய வேண்டும்.

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி மந்திரம்
'ஓம் நம ஷக்தி ரூபாய ராஜ ராஜேஸ்வரி
மம க்ரஹே புத்ரம் குரு குரு ஸ்வாஹா'

இந்த மந்திரத்தால் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரியின் திருவருள் நமது உள்ளத்தில் உறைவதன் மூலமாக நமது இல்லத்திலும் நிறைந்து எண்ணியவை நிறைவேறும். வழக்கம்போல இங்கும் அசைவ உணவு சம்பந்தம் கூடாது.

திருக்கருகாவூரில் உள்ள ஸ்ரீ கர்ப்பரட்சாம்பிகையின் மேல் அமைந்த மந்திரம் இது. இந்த மந்திரமும் சந்தான பாக்கிய அனுபவ நலன்களைத் தரக்கூடியதாகும். இதை ஒரு குருபுஷ்ய நட்சத்திரத் தன்றோ (வியாழக்கிழமை வரும் பூச நட்சத்திரம்), பானுபுஷ்ய நட்சத்திரத்தன்றோ (ஞாயிற்றுக்கிழமை வரும் பூச நட்சத்திரத்தன்றோ) ஆரம்பித்துச் செய்ய வேண்டும். 48 தடவைகள் இந்த மந்திரத்தைத் தினமும் உச்சரித்து வருவதால் அன்னையின் அருளால் சந்தான பாக்கியம் கிடைக்கும்.

இதற்கும் வெள்ளி டம்ளரில் பசும்பால் நைவேத்தியம் செய்ய வேண்டும். பாலில் அரை ஸ்பூன் அளவு தேன் மட்டும் கலந்து கொள்ளவேண்டும். அரச மரத்தில் கிழக்குப் பக்கமாகச் செல்லும் கிளையில் இருந்து ஒரு முழுமையான அரச இலையைப் பறித்து வந்து அதை நீரில் சுத்தமாகக் கழுவிவிட்டு, அதில் சந்தனம் தடவிக் கீழே வைத்து, அதன் மேல் பசும் பாலுள்ள வெள்ளி டம்ளரை வைக்கவேண்டும். ஸ்படிக மாலை கொண்டோ, அல்லது ருத்ராட்ச மாலை கொண்டோ 48 முறை, 108 நாட்களுக்குச் செய்து வர வேண்டும்.

மந்திரம் பூர்த்தியான பிறகு பாலை, தம்பதியர் இருவருமே அருந்த வேண்டும். ஒவ்வொரு முறையும் பூஜை பூர்த்தியான பிறகு ஆல இலைகளைச் சேர்த்து வைத்திருந்து 108 ஆனவுடன் அதை ஒரு நதியிலோ அல்லது குளத்திலோ, கடலிலோ விட்டு விட வேண்டும். குழந்தை பிறந்தவுடன் திருக்கருகாவூர் வந்து நேர்த்திக் கடன் செய்வதாக பிரார்த்தனை செய்து கொள்ளவேண்டும். ஸ்ரீ கர்ப்பரட்சாம்பிகையின் திருவுருவப் படத்தைப் பூஜைக்கு வைத்துக் கொள்ள வேண்டும். அதைப் பஞ்சோபசார பூஜையாகவே செய்து முடிப்பதும் விசேஷமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதற்குரிய மந்திரம் வருமாறு:-

'ஓம் கர்ப்ப ரட்சாம்பிகையை ச வித்மஹே
மங்கள தேவதாயை ச தீமஹி
தந்நோ தேவி ப்ரஜோதயாத்'

இனி ஜாதக ரீதியாகக் கடைப்பிடிக்கக் கூடிய எளிமையான வழிமுறைகளைப் பார்க்கலாம்.

★ ஒருவரது லக்னம் மேஷமாக இருந்தால் அவர் ஞாயிற்றுக் கிழமை காலையில் கோதுமையில் செய்த இனிப்பைச் சிவ பெருமானுக்கு நைவேத்தியமாகப் படைக்க வேண்டும். கோது மையையோ, கோதுமை மாவையோ தானம் செய்து வந்தால் பூர்வ புண்ணிய பலம் பெருகுவதோடு சந்தான பாக்கியமும் உண்டாகும்.

★ ரிஷபம் லக்னமாக இருந்தால் அவர் புதன்கிழமைகளில் பெரு மாள் கோவிலில் பச்சைப்பயிறால் செய்யப்பட்ட இனிப்பு வகை களையும், பச்சை நிற வஸ்திரங்களையும் சமர்ப்பித்து அபிஷேக ஆராதனைகள் செய்து தானம் செய்ய வேண்டும்.

★ மிதுனம் லக்னம் அமையப்பெற்றவர்கள் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் அம்மன் சன்னிதியில் மொச்சைப் பருப்பும், சர்க்க ரைப் பொங்கலும் நைவேத்தியமாக படைத்து, சுத்தமான வெண்பட்டு வஸ்திரத்தையும் சமர்ப்பணம் செய்து வருவது அவசியம்.

★ கடகம் லக்னமாக இருந்தால், ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் வரும் ராகு காலத்தில் அம்பிகைக்குச் சிவப்பு நிற மலர் மாலை சமர்ப்பித்து, துவரம் பருப்பு சாதம் நிவேதனம் செய்து சிவப்பு நிறப் பட்டு வஸ்திரமும் உள்ளன்போடு தந்து அர்ச்சனை செய்ய வேண்டும்.

★ சிம்ம லக்னக்காரர்கள் குருவையே பூஜித்துவர வேண்டும். வியாழக்கிழமைகளில் காலையில் விரதம் அனுஷ்டித்து தட் சிணாமூர்த்தியின் சன்னிதியில் மஞ்சள் நிறப்பட்டு வஸ்திரம் சமர்ப்பித்து, வேக வைத்த சுண்டல் நிவேதனமும், வயதான வர்களுக்குத் தானமும் செய்ய வேண்டும்.

★ கன்னி லக்னமாகக் கொண்டவர்கள் சனிக்கிழமைகளில் ஆஞ்ச நேயருக்கு வஸ்திர சமர்ப்பணமும், எள்ளுப்பொடி கலந்த உளுந் துவடை நிவேதனமும் செய்து, ஆஞ்சநேயரின் வெண்ணெய் பிரசாதத்தை வீட்டிற்கு கொண்டுவந்து உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

★ துலாம் லக்னத்தவர், கன்னி லக்னத்துக்கான வழிமுறைகளையே பின்பற்ற வேண்டும்.

★ விருச்சிகம் லக்னம் கொண்டவர்கள், சிம்மம் லக்னத்துக்கான வழிமுறைகளையே பின்பற்றலாம்.

★ தனுசு லக்னத்தவர், கடகம் லக்னத்துக்கான வழிமுறைகளையே தொடரலாம்.

★ மகரம் லக்னத்தவர், மிதுனம் லக்னத்துக்கான வழிமுறைகளைப் பின்பற்றவேண்டும்.

★ கும்பம் லக்னத்தவர், ரிஷபம் லக்னத்துக்கான வழிமுறைகளைச் செய்து வரலாம்.

★ மீன லக்னத்தவர் திங்கட்கிழமையன்று அம்பிகை சன்னிதியில் வெண்பொங்கல் நிவேதனம், மல்லிகை மாலை சமர்ப்பணம் செய்தும், பச்சரிசி தானம் செய்தும், பிரார்த்தித்து வந்தால் நல்லவை யாவும் உள்ளம் மகிழ நம் இல்லம் வந்து சேரும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



7. உடல்நலம் காக்கும் உன்னத மந்திரங்கள்

நாம் அனைவருமே விதிவிலக்கில்லாமல் உடல் ஆரோக்கியத்தை முதன்மையாக விரும்புகிறோம். நமது உடல் ஆரோக்கியம் பாதிப்படையும் பொழுது நாம் ஆங்கில மருத்துவத்தையோ, சித்த வைத்தியத்தையோ, ஹோமியோபதி வைத்திய முறையையோ, ஆயுர்வேத சிகிச்சையையோ ஏதாவது ஒரு வைத்திய முறையைக் கடைப்பிடித்து, உடல் நலம் பெற விழைகிறோம்.

நமது உடல் சார்ந்த பிணிகள் அனைத்திற்கும் சிகிச்சை அளிக்கும் அளவிற்கு மருத்துவத்துறை இன்று பரிணாம வளர்ச்சி பெற்று விட்டது. இருப்பினும் மருத்துவ உலகத்தின் நுட்பமான பார்வைக்கும் பிடிபடாத பல்வேறு உடற்கூறு சார்ந்த பாதிப்புகளை இன்றளவும் விஞ்ஞான உலகம் சந்தித்துக்கொண்டுதான் இருக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒரு முக்கியமான, சிக்கலான அறுவை சிகிச்சை செய்ய ஒரு கை தேர்ந்த மருத்துவர் முடிவெடுக்கும்போது, அது பற்றி வேறொரு மருத்துவரின் கண்ணோட்டத்தில் பார்க்கும் முறையை ஆங்கிலத்தில் 'second opinion' என்பார்கள். அதாவது அறுவை சிகிச்சை பற்றி வேறொரு மருத்துவ நிபுணரின் கருத்தைக் கேட்டு அதன் படியும் அந்த மருத்துவ சிகிச்சையைத் தொடர்வது ஒரு குறிப்பிடத்தக்க முறையாக உள்ளது.

இப்பொழுது 'second opinion' என்பது கடவுளை மனமுருகிப் பிரார்த்திப்பது, திருக்கோவில்களுக்குச் செல்வது, புண்ணிய நதியில் தீர்த்தமாடுவது, தகுந்த ஹோமங்கள் செய்வது, நம்மைவிட மகத்தான மூல சக்தியிடம் நமது பிரச்சினையைக் கொண்டு செல்வது என்ற நிலையில் மானசீகமான மாற்றம் பெற்று விட்டது. அந்த வகையில் உடல் நலம் சார்ந்த சிக்கல்களுக்கு மந்திரங்களின் வாயிலாக ஒரு தீர்வின் ஆரம்பத்தையோ, அல்லது ஒரு நல்ல தீர்வையோ தரும் முறைகளையே இங்கு நாம் காண இருக்கிறோம்.

நமது வேத மந்திரமான 'த்ரையம்பக' மந்திரம் எனப்படும் 'மஹா ம்ருத்யுஞ்ஜய' மந்திரம் நோய்களைத் தீர்ப்பதில் மகத்தான சக்தியை உள்ளடக்கியது. ஸ்ரீ மார்க்கண்டேய மகரிஷியின் தவப்பயனாக நமக்குக் கிடைத்த மாபெரும் மந்திரம் இது. மரணத்தையே வெல்லக் கூடியது என்ற பொருளுடைய 'மஹா ம்ருத்யுஞ்ஜய' மந்திர வடிவத்தை காணலாம்.

<u>மஹா ம்ருத்யுஞ்ஜய மந்திரம்</u>

'ஓம் த்ரையம்பகம் யஜாமஹே
ஸுகந்திம் புஷ்டி வர்த்தனம்!
உர்வாருக மிவ பந்தனான்
ம்ருத்யோர் முக்ஷீய மாம்ருதாத்!!'

இம்மந்திரத்தை தினமும் 108 அல்லது 48 என்ற எண்ணிக்கையில் கூறி வந்தால், ஆரோக்கியமான வாழ்வை நிச்சயமாக அடையலாம். ஜபத்தின் எண்ணிக்கைக்கு ருத்ராட்ச மாலையைப் பயன்படுத்த வேண்டும். இதிலும் வழக்கம் போல அசைவ உணவைத் தவிர்க்க வேண்டும். இம்மந்திரத்தை காலை, மாலை உச்சாடனம் செய்து வருவது விரைவான பலன்களை அளிக்கவல்லது. இந்த மந்திரத்தைச் சுத்தத் திருநீற்றில் 48 முறை பிரயோகம் செய்து அணிந்து கொள்வது மிகவும் விசேஷமானதாகும். உடலின் எந்தப் பகுதி பாதிப்படைந்திருக்கிறதோ அந்தப் பகுதியில் மந்திர உச்சாடனம் செய்த விபூதியைப் பூசலாம். அத்தகைய விபூதி சர்வ

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

ரோக நிவாரணியாகச் செயல்படுவதால் உடல் முழுவதும் எங்கு வேண்டுமானாலும் பூசலாம்.

சிறிது விபூதியை வலது உள்ளங்கையில் வைத்துக்கொண்டு மேற்கண்ட மந்திரத்தை குறிப்பிட்ட அளவு ஜபம் செய்து விட்டு அந்தத் திருநீற்றினை வெள்ளி அல்லது செம்பு டம்ளரில் வைக்கப் பட்ட சுத்த ஜலத்தில் போட்டு அதை அருந்தி விடலாம். இதற்கு மிக நல்ல பலன் கிடைக்கும். ஆனால், திருநீறு சுத்தமான பசுஞ் சாணத்தில் தயாரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

இன்னுமொரு ம்ருத்யுஞ்ஜய மந்திரம் உண்டு. இதையும் மேற் கூறிய வழிமுறைகளால் உச்சாடணம் செய்து பயன்படுத்தலாம். அல்லது மந்திர ஜபமாகவும் செய்து வரலாம். இதுவும் நமக்கு நல்ல பலன்களைத் தர வல்லதாகும். மஹா ம்ருத்யுஞ்ஜய மந்திரம், ம்ருத்யுஞ்ஜய மந்திரம் ஆகிய இரண்டையும் ஒரு வளர்பிறை திங்கட் கிழமை அதிகாலையில் அல்லது வளர்பிறை பிரதோஷ காலத்தில் அல்லது திருவாதிரை நட்சத்திரம் அமைந்த காலை வேளையில் அருகிலுள்ள சிவாலயத்தில் கிழக்கு முகமாக அமர்ந்து ஜபத்தைத் தொடங்க வேண்டும்.

ம்ருத்யுஞ்ஜய மந்திரம்

'ம்ருத்யுஞ்ஜயாய ருத்ராய
நீலகண்டாய சம்பவே!
அம்ருதேஷாய ஸர்வாய
மஹாதேவாய தே நம!!'

நோய் தீர்க்கும் அரிய மந்திரங்களில் பின் வரும் மந்திரமும் மிக முக்கியத்துவம் பெறுகிறது. இந்த மந்திரம், மருத்துவக் கடவுளான தன்வந்திரி பகவான் மீது அமையப் பெற்றதாகும். இதனை ஜபம் செய்ய துளசி மணி மாலையைப் பயன்படுத்த வேண்டும்.

ஒரு வெள்ளி டம்ளரில் சுத்த ஜலம் சிறிது எடுத்துக் கொண்டு, வடக்கு அல்லது கிழக்கு முகமாக ஒரு ஆசனத்தில் அமர வேண் டும். சிறு தர்ப்பைக் குச்சியை வலது கை கட்டை விரலாலும் நடு விரலாலும் எடுத்து அதை அந்த ஜலத்தில் படுமாறு வைத்துக் கொள்ள வேண்டும். அந்த நிலையிலேயே தினமும் 24 அல்லது 48 முறை மந்திர உச்சாடனம் செய்வதன் மூலமாக அந்த ஜலம் மந்திர சக்தியைப் பெறுகிறது. பிறகு அந்த நீரை அருந்தினால், நமது உடலின் எதிர்ப்புத் திறன் படிப்படியாக உயர்ந்து நிச்சயமாக ஆரோக்கியம் மேம்படும். இம்முறையை நாம் மற்றவர்களுக்காகவும் செய்து நல்ல விளைவுகளைப் பெற்று மகிழலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ தன்வந்திரி பகவான் மஹா மந்திரம்

'ஓம் நமோ பகவதே வாசுதேவாய
தன்வந்த்ரயே அம்ருத கலச ஹஸ்தாய
ஸர்வாமய விநாஸனாய த்ரைலோக்ய நாதாய
ஸ்ரீ மஹா விஷ்ணவே நமஹ'.

பலர் ரத்த அழுத்த நோயால் சிரமப்பட்டுக் கொண்டுள்ளார்கள். அந்த நோய் தக்க மருத்துவச் சிகிச்சையாலேயே குணப்படுத்தப்படும். இருப்பினும் உடலிலும், மனதிலும் ஒரு சமநிலைப்பட்ட அமைதியை ஏற்படுத்துவதன் மூலமாக அதன் கடும் விளைவுகளைத் தவிர்த்துக் கொள்ளலாம். இதயத்தின் செயல்பாட்டை சரியாகவும், அமைதியாகவும் இயங்க வைக்கக் கூடிய ஒரு சாக்த மந்திரத்தை இப்பொழுது காணலாம்.

இந்த மந்திரத்தை அதிகாலை நேரமான பிரம்ம முகூர்த்தத்தில் ஜபம் செய்வது மிக மிக விசேஷமாகும். இதன் எண்ணிக்கைக்கு ஸ்படிக மாலையைப் பயன்படுத்த வேண்டும். 108 அல்லது 54 கொண்ட மாலையை 5 அல்லது 6 சுற்றுகள் கொண்ட எண்ணிக்கையில் வருமாறு ஜபம் செய்யலாம். அல்லது தொடர்ந்தாற்போல 35 அல்லது 45 நிமிடங்கள் ஜபம் செய்வதும் நல்லதே. வழக்கம் போல கிழக்கு முகமாக ஒரு விரிப்பில் அமர்ந்து கொண்டு அன்னை மஹா சக்தியான ஸ்ரீ லலிதா திரிபுர சுந்தரியை மானசீகமாகவோ அல்லது ஒரு திருவுருவப் படத்தைப் பார்த்தபடி உச்சாடனம் செய்வது மிக நல்லதாகும்.

'ஓம் லம் லலிதா தேவ்யை நமஹ'.

கட்டுக்கடங்காத உணர்வுகளின் எழுச்சியானது இதயத்தின் சமநிலையைப் பாதிக்கிறது. மேற்கூறிய மந்திரமானது அதன் சப்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வடிவமைப்பின் காரணமாக நமது உடல் மன நிலைகளில் நம்மால் உணரக்கூடிய அளவீட்டில் அமைதியை உண்டாக்கும் தன்மை பெற்றது. அதுவும் தேவர்களின் காலமான பிரம்ம முகூர்த்தத்தின் ஆழ்ந்த அமைதியில் அதைத் தியானிப்பதோ, ஜபம் செய்வதோ மிக நல்ல விளைவுகளை உண்டாக்கக்கூடியது.

பலருக்கு இரவில் தூக்கம் வராதது ஒரு பெரிய பிரச்சினையாகவே மாறி அன்றாட வாழ்வின் சமநிலை பாதிக்கப்பட்டு சிரமம் அடைவார்கள். அவர்களுக்கான ஒரு சிறப்பான மந்திரமே கீழ் வரும் மந்திரம். இதைப் பயன்படுத்த பெரிய வழிமுறைகள் எதுவுமில்லை.

தூங்குவதற்கு அரை மணி நேரம் முன்பாக டி.வி.யை நிறுத்தி விடுவது மிக அவசியம். காரணம் தொலைக்காட்சிப் பெட்டியின் மின்காந்த அலை இயக்கமானது நமது மத்திய நரம்பு மண்டலத்தைத் தூண்டுவதன் மூலமாக தூக்கத்திற்கு வேண்டிய உடல், மன அமைதிச் சூழல் பாதிப்படைகிறது. அத்தகைய சூழலில் மந்திரம் பலிதமாக அதிக நேரம் ஆகும். அதனால் டி.வி.யை நிறுத்திவிட்டு ஒரு 10 அல்லது 20 நிமிட நேரம் ஜபிப்பது விசேஷமானதாகும். இதை நமது படுக்கையில் படுத்தபடியே சொல்லுவதால் இன்னும் நல்ல உறக்கம் நமக்கு வாய்க்கும்.

‘ஓம் ஸூத்தே ஸூத்தே மஹா யோகினி மஹா நித்ரே ஸ்வாஹா’.

நிதானமாக எந்தவித அவசரமும் இன்றி கண்களை மூடியபடி மனதில் சொல்வதன் மூலமாக நல்ல உறக்கம் நமக்கு நிச்சயம் வாய்க்கும். ஆரம்பித்த முதல் நாளே எந்த மந்திரமும் பலிதமாகாது. நிதானமாக தொடர்ந்து முயற்சித்தால் மட்டுமே வெற்றிக்கனி நமது வசமாகும். ஆகவே தன்னம்பிக்கையுடன் தொடர்ந்து செயல்பட்டால் விளைவுகள் நம் விருப்பப்படி அமையும்.

ஜோதிட ரீதியாக சனி (saturn) என்ற கிரகமே ஒருவரது ஆயுள் மற்றும் உடல் நிலை சம்பந்தமான விஷயங்களைக் குறிப்பிடக் கூடியதாகும். அந்த வகையில் சனிக்கிரக ஸ்துதியைச் சொல்லி வருவதாலும் சனிக்கிழமைகளில் நல்லெண்ணெய் தேய்த்துக் குளித்து, விரதமிருந்து, திருக்கோவில் தரிசனம் செய்வதாலும் நமது ஆரோக்கியத்தை மேம்படுத்திக் கொள்ளலாம். சனிக் கிரகத்தின் மந்திரத்தை இப்போது காணலாம்.

‘ஓம் ஸம் ஸனைச்சராய நமஹ’.

ஒரு வளர்பிறை சனிக்கிழமை காலையில் இந்த மந்திரத்தைத் தொடங்க வேண்டும். இந்த மந்திரத்தைப் பயன்படுத்தும்போது சனிக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கிழமைகளில் நல்லெண்ணெய்க் குளியல் எடுத்துக்கொள்ள வேண்டும் . அதன் காரணமாக மத்திய நரம்பு மண்டலம் வலுப்பெறுவதோடு உடலும் சமச்சீரான தட்ப வெப்ப நிலையை அடைவதன் மூலமாக ஆரோக்கியமான வாழ்வுதனைப் பெறலாம். இன்னும் ஏராளமான மந்திர வழிபாட்டு முறைகள் இருந்தாலும் மேற்கண்டவை யாவுமே சற்று எளிய நடைமுறையைக் கொண்டிருப்பதால் விருப்பமுள்ள யாவருமே கடைப்பிடித்து வளமான வாழ்வுதனைப் பெற்றிடலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



8. பில்லி, சூனியம் விரட்டும் மந்திரங்கள்

நான்கு வேதங்களில் நான்காவது வேதமாகிய 'அதர்வண' வேதம் வாழ்வியலின் அகம் சார்ந்த புற வாழ்வியல் நெறிமுறைகளைப் பற்றி விரிவாகவும், நுட்பமாகவும், தெளிவாகவும் எடுத்துச் சொல்கிறது.

சாணக்கியரும் தனது அர்த்த சாஸ்திரத்தில் இந்த அகம் சார்ந்த புறவாழ்வியலை அரசாளும் மன்னர்களுக்குச் சொல்வதன் மூலம் பாதுகாப்பான வாழ்வாதாரங்களை அமைத்துக் கொள்ளும் விதங்களை நுட்பமாகவே தந்திருக்கிறார். இந்த இரு பழமையான நெறிமுறை வழிகாட்டுதல்களையும், ஆகம சாஸ்திரங்களையும் அடிப்படையாகக் கொண்டே பெரும்பாலும் பில்லி, சூனியம், ஏவல், வைப்பு, செய்வினை, இடுமருந்து போன்றவை செய்யப்படுகிறது.

'வினை விதைத்தவன் வினை அறுப்பான்' என்ற மொழி வழக்கு ஒன்று உண்டு. அன்று முதல் இன்றைய காலகட்டம் வரையில் பில்லி, சூனியம் சார்ந்த செயல் முறைகள் யாவுமே செய்பவன், செய்யப்படுபவன் ஆகிய இருவருக்குமே பாதிப்புகளை உண்டாக்கி வருகிறது என்பது யாவருமே அறிந்த உண்மையாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்தக் கலியுகத்தில் சாதாரணமாகவே பிரச்சினைகளுக்குப் பஞ்சமேயில்லை. இந்த நிலையில் இது போன்ற செயற்கையான துன்பங்களால் ஒரு சிலர் படும் அவதி, மற்றவர்களது பார்வையில் கேலிக் கூத்தாகவே தென்படுவது நடைமுறையில் உள்ள சங்கடமாகும். இத்தகைய அசாதாரணமான சூழலில் மேற்கண்ட சிரமங்களின் தீர்வுகளுக்கான சில வழிவகைகளையே நாம் இங்கு காண இருக்கிறோம்.

முதலில் காணவிருப்பது ஸ்ரீ லட்சுமி நரசிம்ம சுவாமியின் மூல மந்திரமாகும். இதை ஒருவர் குரு முகமாகப் பெற்று உச்சாடனம் செய்வது மிகவும் சிறப்பானதாகும். அப்படியில்லாவிடில் ஒரு ஸ்வாதி நட்சத்திர தினத்தன்றோ, அல்லது ஒரு பிரதோஷ தினத்தன்றோ, அல்லது கார்த்திகை மாதம் வரக்கூடிய ஏதாவதொரு ஞாயிற்றுக் கிழமையன்றோ ஸ்ரீ லட்சுமி நரசிம்ம சுவாமியின் சன்னிதியில் நெய் தீபம் ஏற்றிவைத்து 12 முறை பிரதட்சணம் வந்து நன்கு பிரார்த்தனை செய்து கொண்டு மந்திரத்தை உச்சாடனம் செய்ய தொடங்க வேண்டும். அன்றிலிருந்து தொடர்ந்து 108 நாட்கள் தினமும் 48 முறை வீட்டிலோ, லட்சுமி நரசிம்ம சுவாமி சன்னிதியிலோ உச்சாடணம் செய்து வந்தால் எந்தவிதத் துன்ப துயரமும் அணுகவே அணுகாது.

ஸ்ரீ நரசிம்ம மஹா மந்திரம்

'உக்ரம் வீரம் மஹாவிஷ்ணும்
ஜ்வலந்தம் சர்வதோமுகம்
ந்ருஸிம்ஹம் பீஷணம் பத்ரம்
ம்ருத்யும் ம்ருத்யும் நமாம்யஹம்'

இதை அவசரமில்லாமல் நிதானமாகச் சொல்ல வேண்டும். எண்ணிக்கைக்கு துளசி மாலையைப் பயன்படுத்தலாம். அசைவ உணவுப் பழக்கம் இருந்தால் அதை நிச்சயமாகத் தவிர்த்தே ஆக வேண்டும்.

இந்த மந்திரத்தை, சாத்வீக வேளையான சூரிய உதயத்திற்கு முன்பாகச் சொல்லி வருதல் விசேஷமாகும். மேலும் சிரமங்கள் கடுமையாக இருந்தால் வீட்டில் ஸ்ரீ லட்சுமி நரசிம்ம சுவாமியின் படத்தை வைத்து அதற்கு பானகம் நைவேத்தியம் செய்து, தூப, தீப ஆராதனை செய்து 24 முறை பிரதட்சண நமஸ்காரம் செய்து வந்தால் மிக நல்ல பலன்களை நடைமுறையில் பார்க்கலாம்.

இன்னொரு முறையானது ஸ்ரீ பைரவரின் வழிபாட்டு முறையாகும். நமக்கு உள்ளுணர்வில் ஏதோ முரண்பாடான உணர்வோ, தலை சுற்றலான உணர்வோ, அல்லது நமக்கு நடக்கும் விஷயங்களை நம்மாலேயே உணர முடியாமலிருப்பதோ, அல்லது காரணமற்ற

In Public domain, Digitization Muthulakshmi Research Academy



ஒருவித பய உணர்வோ, நடுக்கமான உடல் செயல்பாடுகள் நமக்கு இருந்தாலோ (தகுந்த மருத்துவச் சிகிச்சைக்குப் பிறகும்) குடும்பத்தில் மிகச் சாதாரணமாக, அடிதடி விவகாரங்களால் ரத்தக் காயங்கள் உண்டாகிற நிலைமையோ இருக்கும் பட்சத்தில் கீழ்கண்ட ஸ்ரீ பைரவ வழிபாட்டை மேற்கொள்வதன் மூலமாக பல சிரமங்களைத் தவிர்த்து விடலாம்.

சனிக்கிழமைகளிலோ, பிரதோஷ தினங்களிலோ, ஞாயிற்றுக்கிழமை ராகு காலங்களிலோ அல்லது செவ்வாய்க்கிழமைகளிலோ, மிக முக்கியமாக தேய்பிறை அஷ்டமி தினத்தன்றோ ஸ்ரீபைரவரின் சன்னிதியில் வெண்பூசணியில் நல்லெண்ணெய் விட்டு பஞ்சுத் திரியால் விளக்கேற்ற வேண்டும். பைரவர் சன்னிதிக்குச் சென்றது முதல் வீடு திரும்பும்வரை யாரிடமும் பேசாமல், எதுவும் சாப்பிடாமல் இருக்க வேண்டும். வழக்கம்போல அசைவ உணவுப் பக்கமே செல்வது கூடாது. பைரவருக்குரிய மந்திரங்கள் வருமாறு:–

'ஓம் பைரவாய நமஹ'

'ஓம் ப்ராம் பைரவாய நமஹ'

'ஓம் நமோ ருத்ராய கபாலியாய
பைரவாய த்ரைலோக் நாதாய
ஓம் ஹ்ரீம் பட் ஸ்வாஹா'

இவை பைரவருக்கான பல மந்திரங்களில் மூன்று மட்டுமே. பைரவருக்குரிய கால நேரங்களில், நமக்குச் சரியென்று படும் மந்திரத்தை அந்தக் குறிப்பிட்ட நாளில் இருந்து, தினமும் பைரவர் சன்னிதியில் 48 முறை ஜபம் செய்து வந்தால், துன்பங்களுக்குத் துன்பம் தரும் தூய சக்தி பெற்றவர்களாவோம். முக்கியமாக சனிக்கிழமைகளில் மந்திர ஜபம் செய்து வந்தால் கை மேல் பலன் காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நமக்கு வரக்கூடிய துன்பங்களை உடனடியாகத் தீர்க்கக் கூடிய சக்தி படைத்தவற்றில் மகான்களின் ஜீவ சமாதிகளும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. அத்தகைய ஜீவ சமாதிகளில் மகான்களின் உடல் நிலைகளை மட்டுமே சார்ந்திராத 'ஜீவ காந்த சக்தியலைகளின் அதிர்வுகள்' ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கும், ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்கு உட்பட்டும் தம்மை நாடி வருபவர்களுக்கு அருளாசியை வாரி வழங்கிக் கொண்டிருக்கின்றன.

அத்தகைய மகான்களின் சக்தியலைகள் பலம் பெறும் நாட்களான வியாழக்கிழமைகளிலோ, அல்லது அந்தக் குறிப்பிட்ட மகானின் ஜன்ம நட்சத்திர தினத்தன்றோ விரதமிருந்து, அங்கு

அஷ்ட கர்மங்கள்

எல்லாவித தேவதா சக்திகளுக்கும் எட்டு விதமான சக்திநிலை வெளிப்பாடுகள் உள்ளன. அவை, அஷ்ட கர்மங்கள் (எண் தொழில்கள்) என்று வழங்கப்படுகின்றன. அவை:

- ★ **மோகனம்** (ஒருவர் மீது நல்ல மதிப்பீடுகளை ஏற்படுத்துவது)
- ★ **வசியம்** (ஒருவரது விருப்பப்படி இன்னொருவர் செயல்படுதல்)
- ★ **ஸ்தம்பனம்** (ஒரு குறிப்பிட்ட செயல்பாட்டை நிறுத்தி விடுதல்)
- ★ **ஆகர்ஷணம்** (ஒரு பொருளையோ அல்லது ஆளையோ வரவழைத்தல்)
- ★ **உச்சாடனம்** (ஒரு இடத்திலிருந்தோ அல்லது ஒரு ஆளிடமிருந்தோ ஒரு குறிப்பிட்ட விஷயத்தை வெளியேறச் செய்தல்)
- ★ **பேதனம்** (ஒருவரது மனநிலைகளில் குழப்பத்தை ஏற்படுத்துவது)
- ★ **வித்வேடனம்** (ஒருவரின் மனநிலைகளில் கடும் பிரிவுணர்ச்சியை உண்டாக்கி அவரைப் பிறரிடமிருந்து பிரித்து விடுதல்)
- ★ **மரணம்** (ஒருவருக்கு மரணத்தையோ அல்லது அதற்குச் சமமான நிலைகளையோ உண்டாக்குவது)

இந்த எட்டில், 1 முதல் 4 வரையுள்ள நான்கும் நல்ல விளைவுகளைத் தரத்தக்க நிலைப்பாட்டிலும், 5 முதல் 8 வரையுள்ள நான்கும் தீய விளைவுகளைத் தரும் நிலைப்பாட்டிலும் அமைந்துள்ளன. அவை அந்தந்த தேவதா சக்திகளின் இயல்பான தன்மைகளைப் பொறுத்ததாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தீபமேற்றி தரிசனம் செய்வதோடு, நமது பிரார்த்தனைகளையும் செலுத்தி வந்தால் நமது குறைகள் யாவும் நீங்கப் பெறும்.

அன்னை ஸ்ரீ சாமுண்டேஸ்வரியை சரண் புகுந்து, வழிபட்டு நமது துயரங்களை நீக்கிக் கொள்வது இன்னொரு முறையாகும். சாமுண்டேஸ்வரியை, அதற்குரிய 'நவாக்ஷரி' மூலமந்திரம் கொண்டு ஜபம் செய்வதால் துன்பங்கள் விலகும். இந்த மந்திரத்தை ஒரு வளர்பிறை வெள்ளிக்கிழமையன்றோ, அல்லது வளர்பிறை செவ்வாய்க்கிழமைஅன்றோ ராகு காலத்தில் ஆரம்பித்துச் செய்ய வேண்டும். பிறகு தினமும் 108 முறை ஸ்படிக மாலை கொண்டு ஜபத்தை அந்தந்த நாளுக்குரிய ராகு காலங்களில் செய்து வர வேண்டும். அமர்வதற்கு ஒரு நல்ல மரத்தாலான ஆசனத்தைப் பயன்படுத்த வேண்டும். மஞ்சள் நிற ஆடையணிந்து கிழக்கு நோக்கி ஜபிப்பதே சிறந்ததாகும்.

<u>நவாக்ஷரி மூல மந்திரம்</u>

'ஓம் ஐம் ஹ்ரீம் க்லீம் சாமுண்டாயை விச்சே ஸ்வாஹா'

இதை முறையாக உபதேசம் வாங்கிய பின் ஜபம் செய்வதே நன்மையை விரைவாகப் பெற்றுத்தரும். அப்படியில்லாவிடினும் அருகிலுள்ள அம்பிகை சன்னிதியில் பூஜா கைங்கரியத்தில் ஈடுபட்டிருக்கும் சிவாச்சாரிய சுவாமிகளிடம் அதன் ஜபா முறை நியதிகளை வேண்டிக்கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

முக்கியமாக ஆபிச்சாரப் பிரயோக முறைகளைச் செயலிழக்கச் செய்ய ஸ்ரீ மகா ப்ரத்யங்கிரா தேவி மாதாவை பிரியமுடன் வழிபட்டு வருவது மிகச் சிறந்ததாகும். வீட்டில் அவளது படத்தை நமது பிரச்சினைகள் தீரும்வரை வைத்து வழிபட்டு விட்டு பிறகு பூஜை சம்பந்தமான அனைத்துப் பொருட்களையும் ஒரு நதியிலோ, கடலிலோ சேர்த்து விட வேண்டும். வீட்டில் மிக சுத்தமான ஒரு இடத்தில் வடக்கு நோக்கியபடி படத்தை வைத்து தூப, தீப, நைவேத்தியங்கள் செய்து கீழ்க்கண்ட மந்திரங்களால் அவளைப் போற்றித் துதிக்க வேண்டும். நைவேத்தியமாக பானகம், உளுந்து வடை, சர்க்கரைப் பொங்கல் ஆகிய ஏதாவது ஒன்றைச் சமர்ப்பிக்கலாம்.

மந்திரம் பின் வருமாறு:

'புத்தி முக்தி பலப்ரதாயை நம:
ஸகல ஐஸ்வர்ய தாரிண்யை நம:
நவக்ரஹ ரூபிண்யை நம:

ஒரு வளர்பிறை செவ்வாய், வெள்ளி, அல்லது ஞாயிற்றுக் கிழமைகளில் வரும் ராகு காலங்களில் பூஜையைத் தொடங்கிச் செய்ய வேண்டும். அவ்வாறு ஏதாவதொரு நாளில் தொடங்கி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விட்டு, ஒவ்வொரு செவ்வாய், ஞாயிறு, வெள்ளி ஆகிய தினங்களில் வரும் ராகு காலங்களில் மேற்கூறிய மந்திரத்தை *48* அல்லது *108* முறைகள் உச்சாடனம் செய்த பின்பு பூஜையை நிறைவு செய்தல் வேண்டும். *48* முறையோ அல்லது *108* முறையோ பிரச்சினைக்குத் தக்கபடி செய்து வர வேண்டும். பாதிக்கப்பட்டவருக்காக வேறொருவர் கூட பூஜை செய்து பலனை அவர் பெறும்படியும் செய்யலாம். முறையாகச் செய்து வருவது மிக அவசியம். காரணம் அதர்வண பத்ரகாளியான அவளது தெய்வீக சான்னித்தியம் மிகவும் சக்தி வாய்ந்ததாகும். அந்த தெய்வீக அருள் யாவருக்கும் வாய்க்கட்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

9. கணவன்-மனைவி ஒற்றுமைக்கு வழிகாட்டும் மந்திரங்கள்

வேத தர்ம ரிஷிகள் வாழ்வியலை, 'ப்ரஹ்மஸர்யம், க்ரஹஸ்தம், வானப்பிரஸ்தம், ஸன்யாஸம்' என்று நான்கு பகுதிகளாக நமக்கு நெறிப் படுத்திக் காட்டியுள்ளார்கள். அதாவது முதல் 24 வயது வரை கல்வி. 24 முதல் 48 வயது வரை குடும்பம். 48 முதல் 72 வயது வரை உலகியல் கடமைகளைச் செய்து முடித்து மன ரீதியான உணர்வுச் சமன்பாட்டை எல்லா விதங்களிலும் அடை தல். அதன்பின் சகலவித தொடர்புகளி லும் இருந்து மன ரீதியாகவோ, உடல் ரீதி யாகவோ விலகி நிற்றல் என்ற முறையில் அவர்கள் வழிப்படுத்தித் தந்துள்ளார்கள்.

பிறப்பு எவ்வாறு வரவேற்கப்பட்டதோ அதேபோல இறப்பும் அமைதியுடன் எதிர்பார்க்கப்பட்டது. அந்த வரிசை முறையின் நேர்த்தியான கட்டமைப்பு இன்றும் கூட நம்மால் மறுக்க முடியாத தாக உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வழக்கம் போல நவீனக் கல்வியால் விளைந்த, வாழ்க்கை முறையின் கட்டாய மாற்றங்களால், பழைய பயன்பாட்டு நெறிமுறைகள் சார்ந்த அத்தகைய வாழ்க்கை நெறிகள் ஒதுக்கப்பட்டுவிட்டன.

மேலைநாடு தந்த (அ)நாகரிக மோகத்தால் திருமண வாழ்வில் 'விட்டுக்கொடுத்தல்' என்ற இனிய அனுபவம் விடுபட்டு, சுய மரியாதை என்ற பெயரில் தமது மனம் போன போக்கில் செல்லும் கட்டுப்பாடற்ற, தன்னிச்சையான மனப்போக்கே தற்போது நிலவுகிறது.

ஒரு சாதாரணப் பிரச்சினைக்கு விவாகரத்து வரை செல்லக்கூடிய அவசரமான மனப்போக்கு தற்போது சாதாரணமாகக் காணப்படுகிறது. அதன் காரணம் அடிப்படை மனோநிலையின் வளர்ச்சியில் பங்கு கொள்ளாத கல்விமுறையும், வாழ்வியலின் முதிர்ந்த பண்பாட்டுக்கூறுகளை உதாசீனம் செய்யும் அரை வேக்காட்டு மனோபாவமுமே. அதை எந்தக் கல்விக்கூடங்களும் கற்றுத்தராது.

திருமணமான தம்பதிகளது வாழ்வில் கருத்தொருமைமிக்க இனிமை நிலவுவதற்கு இங்கு நாம் மந்திரப்பூர்வமான பல வழிகளைக் காணவிருக்கிறோம்.

முதலாவதாகக் காணவிருப்பது ஸ்ரீ தேவியின் மங்கள ஸ்துதியாகும்.

'ஸர்வ மங்கள மாங்கல்யே
ஷிவே ஸர்வார்த்த ஸாதகே
ஸரண்யே த்ரயம்பிகே
தேவி நாராயணி நமோஸ்துதே'

இதைப் பெரும்பாலும் பலர் அறிந்திருக்க வாய்ப்புள்ளது. எளிய மந்திரமானாலும் வலிய பலன்களைத் தரக்கூடியது.

ஒரு வளர்பிறை வெள்ளியன்று காலையில் ஆரம்பித்து, தினமும் தொடர்ந்து செய்து வர வேண்டும். அம்பிகையின் படத்தையோ, அல்லது மகாலட்சுமியின் படத்தையோ வைத்து நெய் தீபமேற்றி, தூப, தீப, நைவேத்தியம் செய்து மேற்கண்ட ஸ்துதியை 24 முறை மனதிற்குள் சொல்லி வந்தால் விரைவில் குடும்ப ஒற்றுமை நல்ல முறையில் அமையும்.

பல சிக்கல்கள் தாமாகவே விலகிவிடக் கூடிய நல்ல சூழ்நிலைகள் ஏற்படும். அதுமட்டுமின்றி மனதுக்குள் அடிக்கடி உச்சாடனம் செய்து வருவதால் ஒரு நல்ல அலையியக்கம் சொல்பவரைச் சுற்றி உண்டாகி மனதில் உற்சாகம் ஏற்படும்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

இன்னொரு மந்திர வழிபாட்டு முறை 'ப்ரஹ்ம யாமள தந்திரத்தில்' வருகிறது. அதை இங்குக் காணலாம். இதற்குக் காமாட்சி அம்மனின் படத்தையோ, புவனேஸ்வரியின் படத்தையோ அல்லது ராஜராஜேஸ்வரியின் படத்தையோ பயன்படுத்த வேண்டும்.

ஒரு வளர்பிறை வெள்ளிக்கிழமையன்று மாலை 6 மணியில் இருந்து 8 மணிக்குள் இதைச் செய்ய வேண்டும். ஒரு பித்தளைத் தாம்பாளத்தின் நடுவில் சிறிது பச்சரிசி மாவும், கற்கண்டு பொடியும் கலந்து வைத்து, அதைச் சுற்றிப் பதினொரு வெற்றிலைகளைத் தாமரை போலப் பரப்பி வைக்க வேண்டும்.

வெற்றிலைகள் ஒவ்வொன்றிற்கும் மஞ்சள், குங்குமம் கொண்டு பொட்டிட வேண்டும். தட்டின் இடப்புறமாக சர்க்கரை போடாத காய்ச்சிய பசும்பாலை ஒரு டம்ளரில் வைக்க வேண்டும்.

தட்டின் வலப்புறமாக மஞ்சள் நிறத் துணி கொண்டு திரி போட்ட நெய் தீபமேற்றி வைக்க வேண்டும். பச்சரிசியில் மஞ்சள் கலந்து அட்சதை தயார் செய்து கொள்ள வேண்டும். பின்னர்,

'ஓம் நமோ யதி வதீம்ஸ வஸீகா
வாக் விலாஸினி காமேஸி
மாங்கல்ய தாரிணி தேவி
ஸகல ஸௌபாக்ய யோகினி
ஸ்வயம் ஸித்தம் விஜயீ பவ'

இந்த மந்திர ஸ்துதியை 9 முறை உச்சாடனம் செய்ய வேண்டும்.

அப்போது நெய் தீபத்திற்கு அட்சதையைக் கொண்டு அர்ச்சனை செய்ய வேண்டும். மந்திர அர்ச்சனையை நிறைவு செய்த பின்பு கற்கண்டு பொடி கலந்த பச்சரிசி மாவை, நைவேத்தியப் பசும்பாலுடன் சிறிது கலந்து கணவன்– மனைவி இருவருமே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரசாதமாக அருந்தினால், குடும்பத்தில் மங்களகரமான சுப நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெறும். தம்பதியர் இருவருக்குள்ளும் அன்யோன்யம் வலுப்பெறும்.

மற்றொரு மந்திரம் 'ஸ்வயம்வர பார்வதி' மந்திரமாகும். இம்மந்திரத்தை பல விஷயங்களுக்காகப் பயன்படுத்திப் பலன் பெறலாம்.

ஒரு வெள்ளி அல்லது திங்கட்கிழமையில் சாயங்கால வேளையில் சங்கல்பம் செய்து கொண்டு மந்திர வழிபாட்டுப் பூஜையை ஆரம்பிக்க வேண்டும். தினமும் அதே நேரத்தில் செய்து வர வேண்டும்.

90 நாட்கள் தொடர்ந்து செய்து வர சவுபாக்கிய விருத்தி ஏற்பட்டு வாழ்வு வளம் பெறும்.

'ஓம் ஹ்ரீம் யோகினீம் யோகினி
யோகேஸ்வரி யோக பயங்கரி
ஸகல ஸ்தாவர ஜங்கமஸ்ய
முக ஹ்ருதயம் மம வசம்
ஆகர்ஷ ஆகர்ஷய நமஹ'

ஜோதிட சாஸ்திரம்

ஜோதிட ரீதியாக ஒரு ஜாதகத்தின் லக்னம் என்பது, அவரைக் குறிப்பிடும் என்றால் அதற்குச் சரியாக எதிர் ராசியானது ஜாதகரின் மனைவியையோ அல்லது கணவரையோ குறிப்பிடும். அப்படியென்றால் அது இன்னொரு துருவமாகக் கருதப்படும்.

துருவங்கள் இணைவதில்லை. ஆனால் அவை ஒன்றையொன்று ஈர்க்கின்றன. இதன் வாயிலாக ஜோதிட சாஸ்திரம் நமக்குத் தெரிவிக்கும் செய்தி யாதெனில் மாற்றுக்கருத்துக் கொண்ட வாழ்க்கைத் துணையுடன்தான் நாம் பயணம் செய்தாக வேண்டும் என்பதேயாகும்.

இதிலுள்ள முரண்பாடுகளை முதலில் ஏற்றுக் கொள்பவர்களே தமது பயணத்தை இனிமையாக்கிக் கொள்கிறார்கள். 'விட்டுக் கொடுப்பவன் கெட்டுப் போவதில்லை' என்ற சொல் வழக்கை இப்போது நினைவு கூர்வது மிகவும் பொருத்தமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இம்மந்திரத்தை முறையாகப் பயன்படுத்தும்போது நமது இல்லங்களில் நாம் விரும்பும் ஒற்றுமை நிச்சயமாக ஏற்படும். நல்லதை நினைத்து நல்லதைச் செய்பவர்கள், இறைவனையும் தொழுதால் இனிமையாக வாழ்வார்கள்.

அடுத்து வருவது அபிராமி பட்டர் அருளிய அபிராமி அந்தாதியின் இரண்டு ரத்தினங்களாகும். இவையிரண்டும் இல்லறம் சார்ந்த ஒருவரது தொல்லைகளை உடனே தீர்க்கும் வல்லமை பெற்றவை. இவற்றைத் தினமும் சுக்ர ஹோரையில் சொல்லி வந்தால் நல்ல பலன்களை உடனடியாகக் காணலாம்.

அதுவும் அம்பிகையின் சன்னிதியில் மனம் ஒருமித்துச் சொல்லி வந்தால் நல்ல பலன் கை மேல் வந்து சேரும். இல்லறம் இனிய நல்லறமாகும். அவற்றைக் கீழே காணலாம்.

<u>அபிராமி அந்தாதி</u>

'வருந்தா வகை என் மனத்தாமரையினில் வந்து புகுந்து
இருந்தாள் பழைய இருப்பிடமாக இனி எனக்குப்
பொருந்தாது ஒரு பொருள் இல்லை; விண் மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தானதை நல்கும் மெல்லியலே'.

'துணையும் தொழும் தெய்வமும், பெற்ற தாயும், சுருதிகளின்
பணையும், கொழுந்தும் பதி கொண்ட வேரும் பனி மலர் பூங்
கணையும் கருப்புச் சிலையும், மென்பாசாங்குசமும் கையில்
அணையும் திரிபுர சுந்தரி ஆவது அறிந்தனமே'.

இவை ஒரு மகானின் திருவாக்கிலிருந்து வெளிப்பட்டதால், இவை இயல்பாகவே மந்திர சக்தியைப் பெறுகின்றன.

கால, தேச, வர்த்தமானங்களைக் கடந்து பலன்களைத் தரும் மந்திர சக்தி பெற்ற ஸ்துதிகளில் அபிராமி அந்தாதியும் ஒன்று. பயன்படுத்தி நலன் பல பெற்று வாழ்வோர் இப்பாரினில் பாக்கியம் பெற்றவர்களாவர்.

அடுத்து வருவது ஸ்ரீ லட்சுமி நரசிம்ம சுவாமியின் ஸ்தோத்திரமாகும். இதை அவருடைய படத்தின் முன்பு பசும்பால் நைவேத்தியம் செய்து 24 முறைகள் சொல்லி வந்தால் நமக்குத் தெரிந்த பிரச்சினைகள், கண்ணுக்குத் தெரியாத பிரச்சினைகள் ஆகிய யாவற்றையும் ஒருங்கே நிவர்த்தியடைய வைக்கும். அசைவ உணவுப் பழக்கம் இருந்தால் நிறுத்திவிட வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ லட்சுமி நரசிம்ம சுவாமி ஸ்தோத்திரம்

'ஸிம்ஹ முகே ரௌத்ர ரூபிண்யாம்
அபய ஹஸ்தாங்கித கருணாமூர்த்தே
ஸர்வ வியாபிதம் லோக ரக்ஷகாம்
பாப விமோசனம் துரித நிவாரணம்
லக்ஷ்மி கடாக்ஷம் ஸர்வாபீஷ்டம்
அநேஹம் தேஹி லக்ஷ்மிந்ருஸிம்ஹ'

மிகவும் சக்தி வாய்ந்த இந்த ஸ்தோத்திரம், சம்சார சாகர துக்க நிவாரணம், இஷ்ட காரிய சித்தி, மனோதைரியம் ஆகிய நற்பலன்களை வாரி வழங்கக் கூடியதாகும். கருணைக் கடலாம் லக்ஷ்மிந்ருஸிம்ம ஸ்வாமியின் திருவளைப் பெற எளிய, தூய பக்தி மட்டும் தேவையானதாகும். அவனருளைப் பெற்றவர் யாவர்க்கும் உற்றவராகவே மற்றவரால் கருதப்படுவர். பொங்கும் அவனருள் யாவருக்கும் கிட்டட்டும்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy



10. சகல நன்மைகளும் வழங்கும் சாளக்ராம மந்திரங்கள்

நாம் வாழும் இந்த பூமி 'கர்ம பூமி' என்று அழைக்கப்படுகிறது. அதாவது நல்லது கெட்டது யாவுமே நமது செயல்களின் அடிப்படையில் தமது பலன்களைத் தவறாது தரக்கூடிய செயற்களமாக உள்ள இடமாகும். அதுவும் நமது பாரத நாடுதான் புண்ணிய பூமி என்று பெருமைமிகு பெயரைப் பெற்றிருக்கிறது. காரணம், நமது நாட்டில்தான் ஆன்மிகம் சார்ந்த வாழ்வியல் நெறிமுறைகள் பற்றிய உணர்வு ஒரு சிறிய குழந்தைக்கும் கூட உள்ளது.

நமது அறிவுசார் முன்னோர்கள் இறைவனது நிலைகளை ஐந்து விதமாகப் பிரித்துப் போற்றி வழிபட்டிருக்கிறார்கள். அவை ப்ரபவம், வ்யூஹம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை ஆகியனவாகும். இவற்றில் அர்ச்சை எனப்படும் சிலா வடிவ ரூப வழிபாட்டுமுறை சற்றே எளிதானதாகும். அதிலும் கலியுகத்திற்குப் பொருந்தும் வழிபாடாகச் சாளக்ராம வழிபாட்டைக் கூறலாம். சாளக்ராம வழிபாடு ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்திற்கு மட்டுமே உரித்தானதாக பலரும், மிகத்தவறாக நினைத்துக் கொண்டிருக்கின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சாளக்ராம மூர்த்த வழிபாடு இனம், மொழி, நாடு, கலாசாரம் ஆகிய எந்தவிதப் பாகுபாடும் இல்லாமல், மனித குலம் முழு மைக்குமான பொதுத்தன்மை பெற்றதாகும்.

'என்னை எந்தவொரு நிலையிலும் வழிபடலாம்' என்றே இறை வன் தனது கீதையில் இலக்கணம் வகுத்துத் தந்துள்ளான். அதற் கேற்றவாறே தன்னைச் சாளக்ராம வடிவத் திருமேனியாகவும் வெளிப்படுத்திக் கொண்டான்.

ஆழ்வார்கள் தமது பாசுரங்களில் பாடிப் பரவசம் அடைந்த அந்த சாளக்ராமத் திருமேனி பற்றிய ஒரு பாசுரத்தை இங்குக் காண லாம். இது பெரிய திருவாய் மொழியில் திருமங்கை ஆழ்வாரால் நமக்கு அருளிச்செய்ததில் ஒரு பாசுரம் மட்டுமே.

'உலவு திரையும், குலவரையும்
ஊழி முதலா எண்திக்கும்
நிலவும் சுடரு மிருளுமாய்
நின்றான்; வென்று விறலாழி
வலவன்; வானோர் தம் பெருமான்
மருவா வரக்கர்க் கெஞ்ஞான்றும்
சலவன்; சலஞ்சூழ்ந் தழகாய
சாளக்ராம மடை நெஞ்சே'

'சகல திக்கும் நின்று நிறைந்து, படர்ந்து பரவிப் பயன்தரும், தூயவர்தம் கமல நெஞ்சத்தமர்ந்து, எஞ்ஞான்றும் காத்தருளும் யாவர்க்கும் எம்பெருமானாம், அந்த சாளக்ராம மூர்த்தத்திலும் இருக்கும் இறைவனையே நாம் வணங்க வேண்டும்' என்றே ஆழ்வார்கள் திருவாய் மலர்ந்தருளி இருக்கிறார்கள். தினமும் சாளக்ராம பூஜை செய்து மகாவிஷ்ணுவின் ஏதாவதொரு திரு நாமத்தை உச்சாடனம் செய்து வந்தாலே அவனது திருவருளை அடைந்துவிட முடியும். மேலும் ஆபிச்சார (பில்லி, சூனிய) பிர யோக தோஷங்களுக்கும், பலவிதமான கிரக பாதிப்புகளுக்கும் (சனி, செவ்வாய், ராகு–கேது தோஷங்கள்) இந்தப் பூஜை முறை மிக நல்ல பலன்களைத் தரும். 'சாளக்ராமத்தின் தீர்த்தமும், நைவேத் தியமும் மிக, மிக அற்புதமானதாகும். அவை நம்மைப் பிறவிப் பிணியினின்று விடுபட வைக்கக்கூடிய தன்மை பெற்றவை' என்று கருட புராணம் அறுதியிட்டுக் கூறுகிறது.

சாளக்ராம காயத்ரி மந்திரத்தை இப்போது காணலாம்.

'ஓம் விஷமந் நாசாய வித்மஹே
விஷ்ணு வாஸாய தீமஹி
தன்னோ சிலா ப்ரஜோதயாத்'

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

இதை உபதேசம் பெற்றுத் தினமும் 27 முறை ஜபித்து, சாளக்ராம பூஜை செய்து வந்தால் சகல தோஷ நிவாரணம் ஏற்பட்டு வாழ் வில் பெரியோர்கள் மதிக்கும் நல்ல நிலையைப் பெறலாம். மேலும் சாளக்ராமத்தின் மூல மந்திரத்தை இங்கு காணலாம். இதை அனை வருமே உச்சாடனம் செய்து, துளசி, தீர்த்தம், நைவேத்தியம், தூப-தீபம் சமர்ப்பித்து வணங்கி வரலாம்.

'ஓம் நமோ பகவதே விஷ்ணவே
ஸ்ரீ சாளக்ராம நிவாஸினே
சர்வா பீஷ்ட பலப்ரதாய
சகல துரித நிவாரினே
சாளக்ராமாய ஸ்வாஹா'

இந்த மந்திரத்தை 27, 54, 108 என்ற எண்ணிக்கைகளில் துளசி மாலை கொண்டு ஜபம் செய்து வர வேண்டும். இந்த மந்திர மும் சர்வ தோஷ நிவாரணியாகச் செயல்படும் என்பதை நடை முறையில் நாம் நிச்சயமாகத் தெரிந்து கொள்ளலாம். சாளக்ராம பூஜையை விரிவாகச் செய்யக் கூடிய முறைகளும் உள்ளன. ஆனால், கால அவகாசம் அனைவருக்கும் சம அளவில் பொருந்தி வருவது இல்லை. அதனைக் கருத்தில் கொண்டு 5 அல்லது 10 நிமிடங்களில் செய்யக் கூடிய பூஜை முறைகளே இங்குக் கூறப் பட்டுள்ளது.

இறையருளை நேருக்கு நேர் உணரக்கூடிய விரிந்த மனமும், புரிந்த இதயமும் நமக்கு வேண்டுமெனில், பக்தியின் வழியில் மனம் பதப்படவேண்டும். நிதமும் அதன் வழிச் செல்லும் வழக்கம் அதில் பதிக்கப்பட வேண்டும். அதற்கான வழிகாட்டு மந்திரங்களில் கீழ் வரும் மந்திரமும் முக்கியமாக இடம் பெறுகிறது.

'ஓம் விஷ்ணு தேவாய வித்மஹே
வாசுதேவாய தீமஹி
தன்னோ விஷ்ணு ப்ரஜோதயாத்'

இந்த மந்திரத்தைத் தினமும் காலையில் குளித்து முடித்து, தூய ஆடைகளை அணிந்து, தூய ஜலத்தால், சாளக்ராமத்தை ஒரு சிறு செம் புத் தட்டில் வைத்து நீராட்டி, மென்மையான பட்டுத்துணியால் ஒற்றி யெடுக்க வேண்டும். பின்பு சுத்தமான சந்தனக் குழம்பு கொண்டு முழுவதும் பூசி விட வேண்டும். தொடர்ந்து திருமண்ணோ, குங்கு மமோ சாத்தி, பூக்கள் கொண்டு அலங்கரிக்க வேண்டும். சாளக்ராம மூர்த்தத்தைத் தரையில் வைக்கவே கூடாது. வெள்ளி அல்லது பித் தளை அல்லது செம்புத் தட்டில்தான் வைக்கவேண்டும். மஞ்சள் அல்லது வெண்பட்டு விரித்து அதில்தான் திருமேனியை இருக்கச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செய்ய வேண்டும். தீர்த்தத்திற்காக பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, ஏலக்காய், ஜாதிக்காய், சாதிப்பத்திரி முதலியவற்றைப் பொடியாகச் செய்து வைத்துக் கொண்டு சிறிது சுத்த ஜலத்தில் கலந்தால் அது தீர்த்தமாக மாறுகிறது.

மேலும் மந்திர ஜபமும் பூஜா முறைகளும் தீர்த்தத்தை நமக்கு நன்மை தரும் சக்தி படைத்ததாக மாற்றி, நம்முடைய பிரார்த்த

சாளக்ராமம் அறிவது எப்படி?



சாளக்ராம உபாசனாவைச் செய்ய விரும்புபவர்கள் தகுந்த சான்றோர்களை அணுகி அவற்றைப் பெற்றுப் பூஜை செய்வதே சிறந்ததாகும்.

நம்மிடமிருக்கும் சாளக்ராமம் உண்மையானதா? என அறிவதற்கு இரண்டு முறைகள் உள்ளன. முதலாவது, சாளக்ராமத்தின் எடைக்குச் சமமான பச்சரிசியை ஒரு தட்டில் சாளக்ராமத்துடன் ஒருநாள் இரவு முழுவதும் வைத்திருந்தால், மறுநாள் அந்த அரிசியின் எடை கூடியிருக்க வேண்டும். எடை கூடியிருந்தால் அது நல்ல சாளக்ராம மூர்த்தமாகும். இரண்டாவது, அதேபோல பாலில் போட்டு வைத்திருந்தாலும், மறுநாள் பாலின் எடை கூடியிருக்க வேண்டும். அவ்வாறு கூடியிருந்தால் அது உண்மையான சாளக்ராம மூர்த்தம் ஆகும். மேலும் சாளக்ராம மூர்த்தம் பற்றி கந்த புராணம், பத்ம புராணம், கருட புராணம், ஸ்ரீமத் பாகவதம், கவுதம புராணம், மற்றும் பாஞ்சராத்ர ஆகமமும், வேதங்களும் தெளிவாக விளக்கம் தருகின்றன.

நம் வீடுகளில் இருக்கும் சாளக்ராமம் பின்னமாகியிருந்தாலோ, பிளவு பட்டிருந்தாலோ, தங்கம், வெள்ளிக் கம்பிகளால் கட்டி பிறகு பூஜை செய்யலாம். அப்படி முடியாத நிலையில் அதைக் கடலிலோ, ஆற்றிலோ சேர்த்துவிட வேண்டும். சாளக்ராமத்தில் நூற்றுக் கணக்கான வகைகள் உள்ளன. அவை யாவற்றையும் வீட்டில் வைத்து வழிபட இயலாது. இல்ல வழிபாட்டிற்கென உள்ளவற்றையே நாம் பயன்படுத்த வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

னைகளை நிறைவேற்றித் தருகின்றன. பூஜையை முதலில் கணபதியை வழிபட்டு விட்டுப் பிறகு சரஸ்வதி, லட்சுமிதேவி, பார்வதி தேவி ஆகியோரையும் வணங்க வேண்டும். பிறகு குரு வணக்கம் செய்துவிட்டு நமக்கான மந்திர ஜபத்தை ஆரம்பித்துச் செய்து பூஜையை நிறைவு செய்யலாம்.

மகாவிஷ்ணுவின் சாந்நித்தியம் இயற்கையில் அமைந்த சாளக்ராம மூர்த்தியை, மகாலட்சுமி தாயாரின் சாந்நித்தியம் பொருந்திய வலம்புரிச் சங்கால் அபிஷேகம் செய்வது மிக மிக பொருத்தமானதாகும். ஒருவரது இல்லத்தில் இவ்விரண்டும் இருந்தால் அந்த இடம் இறைவனின் வாசஸ்தலமாகும். சகல தேவ, தேவியர்களும் அங்கே வாசம் செய்து அங்கு செய்யப்படும் பிரார்த்தனைகளை நிறைவேற்றித் தரத் தயாராக இருப்பார்கள்.

நமது பொருளியல் வளம் நமக்கு மன நிறைவாக அமைய வேண்டுமானால் கீழ்கண்ட மந்திரத்தால் மகாலட்சுமியைப் பூஜித்து வர வேண்டும். வழக்கமான பூஜையுடன் இந்த மந்திரத்தையும் சேர்த்து 27 அல்லது 48 அல்லது 108 ஆகிய எண்ணிக்கையில் தாமரைமணி மாலை கொண்டு ஜபம் செய்தால் வெற்றி உறுதியாகும்.

'ஓம் மஹா தேவ்யை ச வித்மஹே
சர்வ ஸித்யை ச தீமஹி
தன்னோ ஐஸ்வர்யதேவி ப்ரஜோதயாத்'

மஹாலட்சுமிக்குரிய பல காயத்ரி மந்திரங்களில் இதுவும் ஒன்றாகும். சாளக்ராமம், வலம்புரிச்சங்கு, தீர்த்தம், மந்திரம் ஆகியவற்றால் நமது பிரார்த்தனை இறையருளால் நிறைவேற்றப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சந்தான பாக்கியத்திற்காகக் கீழ்க்கண்ட மந்திரத்தை ஒரு குரு வாரத்திலிருந்து ஆரம்பித்துச் செய்து வர வேண்டும். சாளக்ராம பூஜையில் பசும்பால் நைவேத்தியம் செய்து இந்த மந்திரத்தை 27 முறை அல்லது 108 முறை ஜபம் செய்து பிறகு பாலைப் பிரசாத மாக அருந்திவிட வேண்டும்.

'ஓம் தத் புருஷாய வித்மஹே
ஸந்தான புத்ராய தீமஹி
தன்னோ விஷ்ணு ப்ரஜோதயாத்'

கல்வி, கேள்விகளில் நல்ல தேர்ச்சி பெற சிறப்பாக உதவக்கூடிய ஹயக்ரீவரின் மீது அமைந்த காயத்ரி மந்திரத்தைக் கீழே காண லாம். வழக்கமான சாளக்ராம பூஜைக்குப் பிறகு இந்த மந்திரத்தை 32 முறைகள் உச்சாடனம் செய்து தீர்த்தப் பிரசாதத்தை அருந்தி நிறைவு செய்ய வேண்டும். இதை ஒரு புதன்கிழமையில் இருந்து ஆரம்பித்துச் செய்ய வேண்டும். 90 நாட்கள் செய்து வந்தால் கல்வித் தடைகள் யாவுமே நீங்கிவிடும்.

'ஓம் அய வதனாய வித்மஹே
வித்யாதராய தீமஹி
தந்நோ ஹயக்ரீவ ப்ரஜோதயாத்'

ஹயக்ரீவரின் மீதமைந்த இந்த காயத்ரியை உச்சாடனம் செய்யச் செய்ய மனதின் கிரகிப்புத்திறன் படிப்படியாக வளர்ந்து கொண்டே வரும். வீட்டில் உள்ள மாணவ, மணிகளுக்குத் தாய், தந்தையரே அவர்களுக்காக பூஜை செய்து, தீர்த்தப்பிரசாதத்தை அவர்களுக்குத் தரலாம். நல்ல பலன்கள் ஏற்படும்.

நமது மனதில் கலக்கத்தை ஏற்படுத்தும் நோய், நொடிகள் யாவும் தீர்ந்து நலமான வாழ்வு பெற தன்வந்திரி பகவான் மீதமைந்த மந்திரத்தை உச்சரித்து வந்தாலே உடலின் ஆரோக்கிய நிலை நல்லவிதமாக மேம்பாடு அடைந்து, மகிழ்ச்சியான வாழ்வு தனைப் பெறலாம்.

மருத்துவக் கடவுளும், ஆரோக்கியம் அருளும் அமிர்த கலசத் தைத் தமது கரங்களில் தாங்கியிருக்கும் ஸ்ரீ தன்வந்திரி பகவானின் மீதமைந்த இரண்டு மந்திரங்களை இங்கே காணலாம். இந்த மந் திரங்களில் ஏதாவதொன்றைத் தினமும் 48 முறைகள், பசும்பா லும், துளசி தீர்த்தமும் நைவேத்தியமாக வைத்து, உச்சாடனம் செய்து அவற்றை அருந்தி வரவேண்டும். இந்த முறையால் இழந்த ஆரோக்கியம் மீண்டும் திரும்பும். இதை நமது பிரச்சினைக்குத் தக்கவாறு பயன்படுத்திப் பலனடையலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy.

'ஓம் வைத்ய ராஜாய வித்மஹே
அமிர்த கலச ஹஸ்தாய தீமஹி
தந்நோ விஷ்ணு ப்ரஜோதயாத்'

'ஓம் நாராயணாய வித்மஹே
மஹா ஔஷதாய தீமஹி
தந்நோ தன்வந்திரி ப்ரஜோதயாத்'

இந்த இரண்டில் எது நமக்கு பிடித்தமானதோ அந்த ஒன்றை மட்டும் உச்சாடனம் செய்தால் போதுமானது. அதன் மூலமாகவே நாம் விரும்பும் நல்ல விளைவுகளைப் பெற்று மகிழலாம். நாம் இது வரையில் சாளக்ராம மூர்த்தம் சார்ந்த மந்திர பூஜா முறைகளைப் பற்றிச் சில வழி வகைகளைப் பற்றிப் பார்த்தோம். சாளக்ராம வழிபாட்டில் எண்ணற்ற முறைகள் உள்ளன.

நாம் இங்கு கண்டவை சில மட்டுமே. இன்றைய அவசர உலகில் கடைப்பிடிக்கக் கூடிய எளிய முறைகளே இங்கு நாம் கண்டவையாகும். அதன் வாயிலாக நாராயணரின் அருளைப் பெற்று வாழ்வாங்கு வாழலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

11. நலம் பல புரியும் வலம்புரி சங்கு மந்திரங்கள்

இன்றைய நாகரிக உலகு தனது புறம் சார்ந்த வாழ்வியல் வழிமுறைகளில் மிகச் சிறந்த வளர்ச்சியைக் கண்டுள்ளது. விஞ்ஞான வளர்ச்சிகள் விண்ணையே தொட்டு விட்டன. நமது சூரிய மண்டலத்தைத் தாண்டிய புறவெளி மண்டலத்தின் விரிவு பற்றிய ஆய்வுகளும் மிகமிக முன்னேற்றமடைந்துள்ளன. இருப்பினும், நம் தலைக்கும் மேலே விரிந்த புற வெளி பற்றி நாம் அறிந்த அளவை விடவும், நமக்குள் இருக்கும் நமது அக வெளி பற்றி நாம் அறிந்த அளவு மிக வும் குறைவுதான் என்பதை நாம் பல சூழ்நிலைகளில் உணர்ந்திருக்கிறோம்.

தன்னையறிய நினைக்கும் கலையே பெரும் கலை என்று எல்லாக் கால கட்ட மகான்களாலும் அறுதியிட்டுக் கூறப்பட்டுள் ளது. ஆனால், நவீன மயமாக்கப்பட்ட வாழ்க்கையின் வேகத்திலும், சிக்கல்களிலும் சிக்கிய மனித சமூகத்தின் மிகப் பெரும்பாலானவர்க

In Public domain. Digitization Muthulakshmi Research Academy.

ளுக்குத் தன்னையறியும் ஆன்மிகம் பற்றி நினைப்பதற்கே நேரம் இல்லை என்பதே நடைமுறை உண்மை. அக நிலையின் மைய இயக்கம் பற்றி உள்ளுணர்வு ரீதியாக ஒவ்வொருவரும் உணர்ந் திருந்தாலும், அதை நடைமுறை வாழ்வில் செயல்படுத்துவதில் பலருக்குத் தடுமாற்றம் உள்ளதை உணர்ந்த நமது ஆன்மிகப் பெரி யோர்கள், இயற்கையிலுள்ள பலவிதமான பொருட்களை 'அருட் சாதனங்கள்' என்று நமக்குக் காட்டிச் சென்றுள்ளார்கள். அவற் றின் மூலமாக செய்யும் பூஜை, பிரார்த்தனை, வழிபாடு, ஜபம், தியானம் ஆகிய முயற்சிகள் நல்ல விளைவுகளைத் தருகின்றன.

அப்படிப்பட்ட பலவித சாதனங்களில், இங்கு நாம் காண இருக்கும் சாதனம் 'வலம்புரிச் சங்கு'. இது ஸ்ரீ லட்சுமி சங்கு என் றும் வழங்கப்படுகிறது.

வலம்புரி சங்கின் மகிமை

பாற்கடலில் மகாலட்சுமியுடன் தோன்றிய பெருமை பெற்றது வலம்புரிச் சங்கு. இதில் இடம்புரிச் சங்கும் உண்டு. வலம்புரிச் சங்கு, 'தட்சிணாவர்த்தி சங்கம்' என்று வழங்கப்படும். இடம்புரிச் சங்கு 'வாமாவர்த்த சங்கம்' என்று வழங்கப்படும். மகாவிஷ்ணுவின் இடது கரத்தில் இருப்பது வலம்புரிச் சங்காகும். 'சங்கநாதம்' பிரணவ நாதத்தைப் பிரதி பலிப்பதாகும். அதன் சப்த அலைகளால் சுற்றுச் சூழலில் உள்ள எதிர்மறை சக்திகள் விலகியோடக்கூடிய தன்மை யைப் பெற்றதாகும். தீய சூழ்நிலைகளை உண்டாக்கும் எதிர்மறை சக்திகள் வலம்புரிச் சங்கு இருக்கும் இடத்தில் தமது சக்திகளை வெளிக்காட்ட முடியாத அளவுக்கு அதிலிருந்து ஓம்கார ஸ்வரூப நாதம் தன்னியல்பாக வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கும். இதன் பொருட்டே பல முக்கிய நிகழ்வுகளில் சங்கநாதம் ஒலிக்கப்படுகிறது.

வலம்புரிச் சங்கு, சாளக்ராம மூர்த்தம், ருத்ராட்சம், விநாயகர் ஆகிய நான்கு தேவதா ஸ்ரூப நிலைகளும் எந்தவிதமான பிர திஷ்டா நியமங்களும் இல்லாமலேயே தன்னியல்பான தெய்வீகத் தன்மையை வெளிப்படுத்தக்கூடிய இறையம்சம் பெற்றவை. அதிலும் விசேஷமாக ஓம்கார ஸ்வரூபமான சங்கில் நாம் எந்தத் தேவதா மூர்த்தத்திற்கு அபிஷேகம் செய்கிறோமோ, அந்தத் தேவதா மூர்த்தம் தனது அருள்நிலையின் பூரணப் பிரகாசத்தை அடைந்து, பூஜையின் முழுமையான பலன்களை வாரி வழங்கக்கூடிய தன்மையைப் பெறும். இதன் அடிப்படையிலேயே நமது திருக்கோவில்களில் சங்காபிஷே கம் நடத்தப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இத்தகைய மகத்துவம் பெற்ற வலம்புரிச் சங்கின் வாயிலாக நமது நடைமுறை வாழ்வின் பல சிக்கல்களுக்கான தீர்வுகளைத் தரும் மந்திர முறையிலான வழிபாட்டு முறைகளை இங்கு நாம் காணலாம்.

'ஓம் பாஞ்சஜன்யாய வித்மஹே
பவமானாய தீமஹி
தன்னஸ் சங்க ப்ரஜோதயாத்'

இது சங்கிற்கான காயத்ரி மந்திரங்களில் ஒன்றாகும். இதைத் தினமும் ஸ்நானம் செய்த பிறகு 12 முறைகள் உச்சாடனம் செய்து தூப, தீப, நைவேத்தியம், ஆரத்தி என்ற முறைகளில் பூஜை செய்து வரலாம். சங்கை ஒரு மரப்பெட்டியில் மஞ்சள் பட்டு வஸ்திரம் அல்லது சிவப்பு வெல்வெட் துணி விரித்து அதில்தான் வைக்க வேண்டும். இல்லாவிடில், அதற்கான செம்பு அல்லது வெள்ளி ஸ்டாண்டில் அதைத் தென்வடலாக வைக்க வேண்டும். தினமும் காலையில் அதைச் சுத்த தண்ணீரால் கழுவிப் பொட்டிட்டு, மலர் தூவி, கற்பூர ஆரத்தி காட்டி மேற்கண்ட மந்திரத்தை உச்சரித்து வரலாம்.

மேலும் ஒரு நல்ல வலம்புரிச் சங்காக வாங்கி வந்து நமது கடைகள், வியாபார ஸ்தலங்கள், தொழிற்கூடங்கள், அலுவலகங்கள் ஆகிய இடங்களில் வைத்து தினமும் தூபமிட்டு, கற்பூர ஆரத்தி காட்டி வந்தால் நல்ல பலன்கள் நாளும் நம்மை நாடித் தேடி ஓடி வரும். வலம்புரிச் சங்கை வெள்ளிப்பூண் போட்டு வைத்திருப்பதே மிகவும் நல்லதாகும்.

வலம்புரிச் சங்கை நாம் ஒரு வளர்பிறையில் வரக்கூடிய நல்ல நாளில் வாங்கி, அதைச் சுக்ர ஹோரை அமைந்த வேளையிலேயே நமது வீட்டிற்குக் கொண்டுவர வேண்டும். நமது வீடுகளிலும், அலுவலகங்களிலும் நாம் வைத்திருக்கும் வலம்புரிச் சங்கானது நமது உள்ளங்கையில் அடங்கக்கூடியதாக இருக்கவேண்டும். மேலும் அது நல்ல வெண்ணிறமாகவும் இருக்க வேண்டும். பித்தளை அல்லது வெள்ளி ஸ்டாண்டிலோ, அல்லது வெள்ளித் தட்டிலோ தென்வடலாக வலம்புரிச் சங்கு வைக்கப்பட வேண்டும்.

முதன்முதலில் ஸ்ரீ லட்சுமி சங்கு எனப்படும் வலம்புரிச் சங்கை வீட்டிற்குக் கொண்டுவந்து அதைக் கீழ்கண்ட மந்திரத்தைச் சொல்லி நமது வீட்டில் என்றும் இருந்து, நமக்கு நன்மைகள் தரப் பிரார்த்தித்துக்கொள்ள வேண்டும்.

'ஓம் ஹ்ரீம் க்லீம் ஸ்ரீதர கரஸ்தாய
பயோநிதி ஜாதய ஸ்ரீதக்ஷிணாவர்த்த சங்காய
ஹ்ரீம் க்லீம் ஸ்ரீ கராய பூஜ்யாய நமஹ'

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாம் வாங்கி வந்த சங்கை, ஒரு நதிநீரை விட்டு சுத்தமாகக் கழுவி மஞ்சள், சந்தனம், குங்குமம், புஷ்பங்கள் ஆகியவற்றால் அலங்கரித்து, தூப தீபம் காட்டி, நெய் தீபமேற்றி மேற்கூறிய மந்திரத்தை 11 முறைகள் சொல்லி வணங்கிப் பிரார்த்தனை செய்து கொள்ள வேண்டும். பெரிய பூஜா முறைகள் எதுவும் செய்யாவிடினும் கூட தினமும் ஒரு ஊதுபத்தியாவது காட்டி மேற்கண்ட ஸ்துதியை இயன்ற அளவு சொல்லி வணங்கி வரலாம்.

'ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் ஸ்ரீம் ஓம் ஃபட்'

இந்த மந்திரத்தை ஒரு வளர்பிறை புதன்கிழமை இரவு 10 மணிக்குமேல், குளித்து முடித்து சிவப்பு நிறம் கொண்ட ஆடையணிந்து, நெற்றி யில் சந்தனம், குங்குமத்தால் பொட்டிட்டு, தெற்குப் பார்த்து அமர்ந்து பூஜையைத் தொடங்க வேண்டும். நாமும் சிவப்பு நிற விரிப்பின் மீதே அமர வேண்டும். ஒரு மரப்பலகை மீது சிவப்பு நிற விரிப்பை விரித்து அதன் மீது ஒரு பித்தளைத் தாம்பாளத் தட்டு வைத்து அதன் மத்தியில் குங்குமத்தால் ஸ்வஸ்திக் சின்னம் வரைந்து கொள்ள வேண்டும். அதன்மேல் ஒரு ஸ்ரீ மகாலட்சுமி யந்திரத்தையும், வலம்புரிச் சங்கையும் வைக்க வேண்டும். குங்குமம், அட்சதை, ரோஜா இதழ்கள் ஆகியன கொண்டு அவற்றை அலங்கரித்துப் பூஜை செய்ய வேண்டும். முதலில் விநாயகர் வழிபாடு, பிறகு குரு வணக்கம் ஆகியவற்றை முடித்துக்கொண்டு மேற்குறிப்பிட்ட மந்திரத்தை 1008 முறை ஜபம் செய்ய வேண்டும். ஜபம் செய்ய தாமரை மணி மாலையைப் பயன்படுத்த வேண்டும்.

புதன் இரவு, வியாழன் இரவு, வெள்ளி இரவு ஆகிய மூன்று நாட்களும் செய்து முடித்து விட்டு சனிக்கிழமை வரும் சுக்ர ஹோரையன்று ஸ்ரீ மகாலட்சுமி யந்திரம், வலம்புரிச் சங்கு ஆகியவற்றை நமது வியாபார ஸ்தலங்களிலோ, அலுவலகத்திலோ, தொழிற்கூடங்களிலோ, அல்லது நமது வீட்டின் பூஜையறையிலோ வைத்து தினமும் தூப தீபம் காட்டியும், மேற்கண்ட மந்திரத்தை 11 முறை உச்சாடனமும் செய்து வந்தால் பணம் பல வித வழிகளில் நிச்சயம் வந்து சேரும்.

மேலும் பணம் வரும் வழிகள் யாவும் விரிவடையும். முக்கியமாக நாம் ஜபம் செய்யப் பயன்படுத்திய தாமரைமணி மாலையை ஏதாவது நீர் நிலைகளில் சேர்ப்பித்து விட வேண்டும். இந்தப் பூஜையால் நமது பொருளாதார நிலையின் எல்லைகள் விரிவு பெற்று, மனதில் உற்சாகம் ஊற்றெடுத்து, உழைப்பின் வழி வந்த உயர்வுகளால் வாழ்க்கையின்தரம் சிறப்படையும்.

எளிதாகக் கடைப்பிடிக்க உகந்த மேலும் சில வழிமுறைகளை இப்போது காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆடி மாதம் வரக்கூடிய பூரம் நட்சத்திரத்தன்றோ, புரட்டாசி மாதம் வரக்கூடிய பவுர்ணமி யன்றோ, ஆனி மாதம் வரக்கூடிய வளர்பிறை அஷ்டமியன்றோ, அல்லது சித்திரை மாதம் வரக்கூடிய பவுர்ணமி தினத்தன்றோ, அல்லது இவையனைத்து நாட்களிலுமோ, இரவில் வலம்புரிச் சங்கில் பசும்பால் விட்டு ஸ்ரீ மகாலட்சுமியின் மீது அமைந்த ஏதாவது ஒரு ஸ்துதியையோ, மந்திரத்தையோ சொல்லி அந்தத் திருமகளை எளிய முறையில் பூஜித்து வந்தால் கூடப் போதும், நம்முடைய குறைகள் யாவுமே மெல்ல மெல்ல விலகி வாழ்வில் வசந்தம் மலய மாருதமாய் வீசத் தொடங்கும்.

சந்தான பாக்கியம் கிடைப்பது தாமதமாகும் காரணத்தால் மனம் கலங்கி நிற்கும் தம்பதிகளின் மனக்கவலை விலக அவர்கள், வலம்புரிச் சங்கின் வாயிலாகக் குரு பகவானைத் துதி செய்தால், சந்தான லட்சுமியின் அருளால், சந்தான பாக்கியத்தைப் பெற்று நிறை வாழ்வு எய்தலாம். அதாவது பஞ்சமி திதிகளில் காலை, மாலை ஆகிய இரு வேளைகளிலும் வலம்புரிச் சங்கில் சிறிது தேன் கலந்த பசும்பாலை வைத்து குருவின் ஸ்துதியை 48 முறை உச்சாடனம் செய்து, அந்தத் தேன் கலந்த பசும்பாலை கணவன், மனைவி இருவரும் பிரசாதமாக அருந்தி வந்தால் எண்ணிய எண்ணம் ஈடேறுவதோடு, மனக்குறைகள் யாவுமே மாயமாய் மறைந்து விடும் என்பது திண்ணம்.

ஜாதகத்தில் செவ்வாய் தோஷம் அமையப் பெற்றவர்கள் அந்தத் தோஷத்தின் வலிமை நிலைகளுக்கேற்றவாறு வலம்புரிச் சங்கு பூஜையைக் குறிப்பிட்ட காலத்திற்குச் செய்து வந்தால் தோஷ நிவர்த்தி அடையப் பெறலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அனைத்து விதமான செவ்வாய் தோஷங்களுக்கும் பொருந்தக் கூடிய ஒரு விசேஷமான வழிமுறையை இப்போது நாம் காண லாம். ஒரு வளர்பிறை செவ்வாய்க்கிழமை அன்றோ, அல்லது அவ ரவரது ஜன்ம நட்சத்திர தினத்தன்றோ மாலையில் ஆரம்பித்துச் செய்ய வேண்டும். 27 செவ்வாய்க்கிழமைகள் கணக்கு. அவ்வாறு 27 செவ்வாய்க்கிழமைகளில் வலம்புரிச் சங்கில் பசும்பால் விட்டு அதை சுப்பிரமணியரின் திருவுருவத்தின் முன்பு வைத்து, அவரது மந்திரங்களில் ஏதாவது ஒன்றை 108 முறை உச்சாடனம் செய்து, தூப தீப ஆராதனைகளுக்குப் பிறகு அந்தப் பசும் பாலை அவர்கள் மட்டும் அருந்திப் பூஜையை நிறைவு செய்யலாம். அன்று இரவு மட்டும் பால், பழம் அருந்தி விரதமிருக்க வேண்டும்.

இந்தக் கட்டுரையில் நாம் கண்ட வழிபாட்டு முறைகளைப் போல், வலம்புரிச் சங்கை வைத்து நாம் செய்யக்கூடிய மந்திர வழி பாட்டு முறைகள் இன்னும் நிறைய நடைமுறையில் இருக்கின்றன. நாம் கண்ட இந்த வழிமுறைகள் வாயிலாகவும் மறைபொருளாம் இறையருளை அடைந்து வாழ்வாங்கு வாழலாம். அந்நிலைக்கு திருவருள் நம்மையும் கூட்டி வைக்கட்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



12. பத்திரமான வாழ்வுக்கு உத்தரவாதம் தரும் ருத்ராட்ச மந்திரங்கள்

ருத்ரனின் அம்சமான ருத்ராட்சம், சிவபெருமானின் திருநயனங்களில் இருந்து வீழ்ந்த விழிநீரின் அருள் வடிவமாகக் குறிப்பிடப்படுகிறது. மா மரத்தின் இலைகளைப் போன்று உள்ள ஒரு வகை மரத்தின், பசுமை கலந்த நீல நிறம் கொண்ட பழங்களின் உள்ளேயுள்ள விதைகளே ருத்ராட்சமாகும். நமது நாட்டில் வங்காளக் காடுகள், அசாம் காடுகள், ஹரித்வார், டேராடூன், நேபாளம், மற்றும் தென்னிந்தியாவில் உள்ள மைசூர் காடுகள், திருவண்ணாமலை ஆகிய இடங்களிலும் ருத்ராட்சம் கிடைக்கிறது.

இவை வெள்ளை, சிவப்பு, மஞ்சள், கருப்பு ஆகிய நான்கு வண்ணங்களில் இருந்தாலும், நாம் பரவலாகப் பார்க்கும் பழுப்பு நிறமானவையே (கருப்பின் மங்கிய வடிவம்) அதிகமாகக் கிடைக்கின்றன. ஒரு மரத்தின் விதை வடிவம் என்பதையும் தாண்டி, அதில் பலவித சூட்சுமமான தெய்வீக சக்திகள் உள்ளன என்பதை பலர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தமது சுய அனுபவங்களிலும், பலர் தமது அறிவியல்பூர்வமான ஆய்வுகளிலும் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

ருத்ராட்சத்தின் ஒவ்வொரு முகத்திற்கும் ஒவ்வொருவிதமான பயனைத் தரத்தக்க சக்திநிலை வெளிப்பாடுகள் உள்ளன. அதில் ஏக முகம் எனப்படும் ஒரு முக ருத்ராட்சம் மிகவும் அரிதான ஒன் றாகும். அது பல வருடங்களுக்கு ஒரு முறையே தோன்றக்கூடிய, விலை மதிக்கமுடியாத ஒன்றாகக் கூறப்படுகிறது. சிவபெருமானின் பூரண அருளைத் தரக்கூடிய தன்மை பெற்றிருப்பது இந்த ஏக முக ருத்ராட்சம். ஒரு உண்மையான ஏக முக ருத்ராட்சத்தை ஒரு படி அளவுள்ள ஏதாவதொரு தானியத்தின் அடியில் இட்டால், அது தானாகவே மேலே கிளம்பி வரக்கூடிய தன்மை பெற்றதா கும் என்று ஒரு ஆச்சரியமான தகவலைப் பழைய நூல் ஒன்று தெரிவிக்கிறது.

ஒரு முக ருத்ராட்சம் நவக்கிரகங்களில் சூரியனுக்கு உரியது; சகலவிதமான பித்ரு தோஷங்களையும் விலக்கி நல்வாழ்வளிக்கும் தன்மை பெற்றது. எல்லா நலன்களையும் தரக்கூடிய இந்த ருத்ரா ட்சத்திற்கு உரிய மந்திரமானது ‘ஓம் ஹ்ரீம் நம’ என்பதாகும். சிவ மஹா புராணத்தில் ஒவ்வொரு வகை ருத்ராட்சங்களுக்கும் உரிய பீஜ மந்திரங்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரு முகங்களைக் கொண்ட, த்விமுக ருத்ராட்சம் அர்த்த நாரீஸ் வரருக்கு உரியதாகும். இதை அணிவதால் குடும்ப உறவு முறை களுக்குள் நல்ல, சுமூகமான போக்கு நிலவும். இது நவக்கிரகங்களில் சந்திரனுக்கு உரியதாகும். மனோகாரகனான, மாத்ருகாரகனான சந்திர பலம் ஒரு ஜாதகத்தில் மிக அவசியமானதாகும். மனம் எப் பொழுதும் சீரான நிலையிலிருக்க ஸ்திரத்தன்மை முக்கியம்.

மற்றவர்களோடு பழகும் தன்மையில் மேம்பட்டிருக்க வேண்டு மாயின் சந்திரனின் பலம் அவசியமாகிறது. மேலும் நமது உடலில் உள்ள நீர்த்தன்மையில் நன்மை தரத்தக்க விளைவுகளை ஏற்ப டுத்துவதில் இருமுக ருத்ராட்சம் சிறப்பு வாய்ந்தது. ஜாதகத்தில் சந்திர பலம் குறைந்து, மனோ ரீதியான சிக்கல்களால் பாதிக்கப் பட்டவர்கள் இருமுக ருத்ராட்சம் அணிவதால் நல்ல பலன்களைப் பெறலாம். இதன் பீஜ மந்திரமானது, ‘ஓம் நம’ என்பதாகும்.

மூன்று முகங்களைக்கொண்ட திரிமுக ருத்ராட்சம், அக்னி அம் சம் பெற்றது. நவக்கிரகங்களில் செவ்வாய்க்குரியது. விளையாட்டுத் துறையில் வெற்றிகளைக் குவிக்க விரும்புவோர் மும்முக ருத்ராட் சத்தை அணியலாம். இது மனதில் தைரியத்தையும், துணிவையும், தருவதோடு உடலியக்கங்களின் துடிப்பான செயல்திறனையும் மேம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

படுத்தும். ரியல் எஸ்டேட் தொழிலில் உள்ளவர்கள், தொழிற்சாலைகளில் பணி புரிபவர்கள் ஆகியோரது சுய வளர்ச்சியையும் உயர்த்தும். சுறுசுறுப்பு குறைந்தவர்களும் இதையணிந்து பயன் பெறலாம். இதன் பீஜ மந்திரம், 'ஓம் க்லிம் நம' என்பதாகும்.

நான்கு முகங்களைக் கொண்ட சதுர்முக ருத்ராட்சம், பிரம்மாவின் அம்சம் கொண்டது. நவக்கிரகங்களில் புதனுடைய அம்சத்தைப் பெற்றது. இதையணிவதால் சுவாசக் கோளாறுகள் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும். திக்குவாய் உள்ளவர்கள் நான்கு முக ருத்ராட்சத்தை அணிவதால், அவர்களது பேச்சுத்திறன் நிச்சயம் மேம்படும். கணிப்பொறித்துறையினர், மின்னியல் கருவிகள் சம்பந்தமான தொழில், அறிவியல் ஆய்வு சம்பந்தமான துறை, ஒரு நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்பில் இருப்போர் இதை அணிவதால் நற்பலன்களைப் பெறலாம். இதன் பீஜ மந்திரம், 'ஓம் ஹ்ரீம் நம'.

பரவலாகக் காணக் கிடைக்கும் பஞ்சமுக (ஐந்து முகம்) ருத்ராட்சம், சிவ அம்சம் பொருந்தியது. நவக்கிரகங்களில் குரு பகவானின் அம்சம் பெற்றதோடு, ஆழ்ந்த கல்வியறிவையும், மனதின் சமநிலையையும் தரும் தன்மையைப் கொண்டது. ரத்தத்தில் உள்ள கெட்ட கொழுப்பின் அளவைக் குறைக்கும் மருத்துவ குணம், ரத்த அழுத்தம் சம்பந்தமான உடற்பிணிகளையும் நீக்கக்கூடிய தன்மையையும் பெற்றதாக இந்த ருத்ராட்சம் விளங்குகிறது. நம்மைச் சுற்றி ஒரு பாதுகாப்புக் கவசம் போன்று அமைந்து காப்பாற்றக்கூடியது. இது நமது மனோ உட

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

லின் உயிரியல் தன்மையை ஒளிரவைக்கக்கூடிய காந்த ஆற்றலை உள்ளடக்கியதாகும். இதற்கான பீஜாட்சரமானது, 'ஓம் ஹ்ரீம் நம' என்பதாகும்.

சண்முக ருத்ராட்சம் எனப்படும் ஆறுமுகம் கொண்ட ருத்ராட்சம் கந்தக்கடவுளின் அம்சம் பொருந்தியது. நவக்கிரகங்களில் சுக்ரனின் அம்சம் பெற்றது. கலியுகம் சார்ந்த உலக வாழ்க்கை நலன்களைத்தரும் வல்லமை கொண்டது.

உடலில் ஜனனேந்திரியங்களின் செயல்பாட்டில் சம நிலையை உண்டாக்கி மனதின் வசீகர சக்தியை மேம்படுத்தக்கூடியது. இல்லற வாழ்வில் மகிழ்ச்சியான போக்கு நிலவச் செய்வதில் இது முக்கியப் பங்கு வகிக்கிறது. வெகுஜனத் தொடர்பு சாதனங்களில், தொழில் ரீதியாக சம்பந்தப்பட்டிருப்பவர்கள் இதை அணிந்து ஜனவசிய சக்தியைப் பெற்று நல்ல பலன்களை அடையலாம். இதற்கான மந்திரமானது 'ஓம் ஹ்ரீம் நம' ஆகும்.

சப்தமுக (ஏழு முகம்) ருத்ராட்சம் மகாலட்சுமியின் மங்கல சுபாம்சத்தைக் கொண்டது. நவக்கிரகங்களில் சனிபகவானுடைய சுப அம்சம் பொருந்தியது. அதாவது, சனி பகவானின் அலை வீச்சை சாதகமாகவும், நன்மைகள் தரும் விதமாகவும் மாற்றியமைக்கக் கூடியது. நுரையீரல் சம்பந்தமான பல கோளாறுகள் சரியாகவும், வறுமைத்துயர் நீங்கி வளமான வாழ்வை ஒருவர் பெறவும் இந்த ருத்ராட்ச மணி பெரும் துணை புரியக்கூடியது.

ஏழரைச்சனியின் காலம், அஷ்டமச் சனியின் காலம், அர்த்தாஷ்டமச் சனியின் காலம், சனி திசையின் காலம் ஆகிய சனிக்கிரகத் தொல்லைகளில் இருந்து விடுபட இந்த சப்தமுக ருத்ராட்சம் பெரும் துணை புரியும். இந்த வகை மணிகளை உடலில் அணிவதைவிட பூஜையறையில் வைத்துத் தினமும் பூஜிப்பதே நல்லது. நீண்ட காலமாகத் தொல்லை தந்துவரும் நோய் நொடிகளைத் தீர்க்க, இந்த மணியை முறையாகப் பயன்படுத்துவதன் மூலமாக பலன்களை நிச்சயம் அடையலாம். இதற்கான மந்திரம் 'ஓம் ஹம் நம' என்பதாகும்.

விநாயகப் பெருமானின் அம்சம் கொண்ட அஷ்டமுக ருத்ராட்சமானது எண்முக மணியாகும். நவக்கிரகங்களில் இது ராகுவின் அலைவீச்சைக் கட்டுப்படுத்தக்கூடிய வலிமையான, அலையியக்கக் காந்த மண்டல சுழற்சியினை உடையது. ருத்ராட்சங்களிலேயே மிக, மிகக் கவனமாகச் சோதனை செய்த பின்பே இதை வீட்டில் வைத்துப் பூஜை செய்ய வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உடலில் அணிவது பெரும்பாலும், இந்த மணியின் விஷயத்தில் தவிர்க்கப்படுகிறது. உளவியல் சிக்கல்களுக்குட்பட்டவர்களின் மன நலம் மேம்பட ஒரு குறிப்பிட்ட கால அளவிலும், ஒரு குறிப்பிட்ட முறையிலும் இதைப் பூஜை செய்து வருவது மிக, மிக நல்லதாகும். இந்த மணிகள் வாழ்வியலின் நூதனமான அனுபவங்களைத் தந்து, மனோ ரீதியான தனிப்பட்ட விளைவுகளால், ஒருவரை அறிவியலின் அடிப்படைகளுக்குட்படாத புதிரான விளைவுகளுக்கு உள்ளாக்கக்கூடிய அதீத சக்தியின் சுழற்களம் அமையப் பெற்றவையாகும். இந்த மணிக்குரிய மந்திரமானது 'ஓம் ஹம் நம' என்பதாகும்.

ருத்ராட்சத்தின் உண்மை தன்மை

ருத்ராட்சத்தின் சிறப்பு அதன் முகங்களேயாகும். இயற்கையாகவே அதன் மேற்பரப்பில், உருவாகும் நெடுக்கான கோடுகளே அதன் முகங்கள் எனப்படும். அவை ஒரு முகத்திலிருந்து, இருபத்தியோரு முகங்கள் வரையிலும் உள்ளன. (அதற்கும் மேற்பட்ட முகங்கள் இருப்பதாகவும் பல தகவல்கள் உள்ளன) ஒரு இலந்தைப் பழத்தின் அளவில் இருப்பது மத்தியமான தரம் உள்ளதாகும். அதிலிருந்து அளவு கூடக்கூட அதன் தரமும் கூடும். அதிலிருந்து அளவு குறையக்குறைய தரமும் குறையும்.

ருத்ராட்சம் போன்றே பத்ராட்சம் என்ற ஒரு விதை வடிவமும் ருத்ராட்சத்திற்கு மாற்றாக உள்ளது. (தென் மாவட்டங்களில் அவை விளைகின்றன) அவை நல்ல பலன்களைத் தராது. ருத்ராட்சம் உண்மையானதா? என்று கண்டறிய பல ஆய்வு முறைகள் உள்ளன. குறிப்பாக, உண்மையான ருத்ராட்சத்தை நீரில் போட்டால் அது மூழ்கும். மற்றவையாயின் மிதக்கும். கல்லில் உரைக்கும்போது தங்க நிறமான படிவுகள் கல்லில் பதிந்தால் அது உண்மையான ருத்ராட்சம்.

வேறொன்றாயின் அவ்வாறு படியாது. மேலும், இரண்டு செம்பு நாணயங்களுக்கு மத்தியில் ஒரு உண்மையான ருத்ராட்சத்தை வைத்தால், மின் தூண்டுதலின் காரணமாக அதில் சுழற்சி உண்டாகும். தாவர வகைகளிலேயே மின்சார சக்தி ஒரு குறிப்பிடத்தக்க அளவு உள்ளது ருத்ராட்சத்தில் மட்டும்தான். அதிலுள்ள நுட்பமான மின்னோட்டமானது நமது உடலிலுள்ள மின்சார சக்தியோடு மிக எளிதில் இணைந்து நல்ல உயிர்க்காந்தச் சூழலை உண்டாக்குவதால் பல நல்ல விஷயங்களை நாம் அனுபவ ரீதியாக உணரலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அன்னை பராசக்தியான ஆத்யா சக்தியின் அம்சம் கொண்டது நவமுக (ஒன்பது முகம்) ருத்ராட்சம். நவக்கிரகங்களில் கேதுவுக்கு ரியது. இதைப் பெரும்பாலும் சாக்த முறையிலான சக்தி சாதனை யின் நெறி நிற்போர், தமது சாதனையின் பூர்த்திக்காக விரும்பி அணிவர். இதை அணிந்தால் பொறுமையும், நிதானமும் மனதில் நிலைத்து நிற்பதோடு, மனதில் பயம் சார்ந்த உணர்வுகள் யாவும் விலகி விடும். மேலும், பிற மொழிகளில் நிபுணத்துவம் பெறவும், இலக்கண, இலக்கியம் சார்ந்த அறிவின் மேம்பட்ட நிலைக்கும் இந்த மணி பெரிதும் உறுதுணை புரிகிறது.

கேது கிரகத்தின் கெடுபலன்களான கீழே விழுந்து அடிபடு தல், கடும் எதிர்மறை எண்ணங்கள், கெட்ட கனவுகள், புரியாத உடல்நிலைக் கோளாறுகள் ஆகிய சங்கடங்களைச் சரியாக்கும் தன்மையை உடையது இந்த ருத்ராட்சம். இதற்கான மந்திரம், 'ஓம் ஹ்ரீம் நம' என்பதாகும்.

தசமுக (பத்து முகம்) ருத்ராட்சமானது மகாவிஷ்ணுவின் அம் சம் பொருந்தியது. தசாவதாரங்களையும் குறிப்பது போல பத்து முகங்களைக் கொண்டது. இதற்கான மந்திரம் 'ஓம் ஹ்ரீம் நம' என்பதாகும். இந்த மணி ஹரிஹரர்களின் திருவருளை ஒருங்கே பெற்றுத்தருவதாக நம்பிக்கை.

ஏகாதச ருத்ராட்சமானது பதினோரு முகங்களைக் கொண்ட தாகும். ருத்ர அவதாரமான ஆஞ்சநேயரின் அம்சம் பெற்ற இந்த மணி, மனதின் ஆற்றலைப் பன்மடங்காக ஆக்கக் கூடியது. பிரம் மச்சரிய விரதத்தில் நிலைபெற விரும்புவோர் இதனையணிந்து நற்பயன் பெறலாம். இதற்கான மந்திரம் 'ஓம் ஹ்ரீம் ஹம் நம' என்பதாகும்.

துவாதச ருத்ராட்சம் எனப்படும் பன்னிருமுக ருத்ராட்சம், சூரிய பகவானின் திருவருளைப் பெற்றுத்தரக்கூடியது. அரசுத் துறை சார்ந்த வேலைவாய்ப்பை எதிர்நோக்குபவர்கள், பணியில் உயர்வு பெற விரும்புவோர், ஆன்மிக பலம் வேண்டுவோர் இம்ம ணியை அணியலாம். இதன் மந்திரமானது 'ஓம் க்ரௌம் ஷௌம் ரௌம் நம'.

ருத்ராட்சத்தில் இன்னும் பலவகையானவை உள்ளன.

ருத்ராட்சத்தை நூலில் அணிவதாயின் சிவப்பு நிற நூலிலேயே அணிய வேண்டும். அல்லது செம்புக் கம்பியிலோ, தங்கக் கம்பி யிலோ, வெள்ளிக் கம்பியிலோ கோர்த்து அணியலாம். ஒரு வளர் பிறை திங்கட் கிழமையன்றோ, அவரவரது லக்னாதிபதியின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாளிலோ காலை நேரத்தில், ஒரு திருக்கோவிலில் பூஜை செய்து அணிய வேண்டும். அதற்கு முன்பாக ஒரு சிவனடியாரிடம் இருந்து வழிமுறைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு நல்ல நாளில் நமக்குகந்த ஏதாவது ஒரு ருத்ராட்சமணியை வாங்கி, அதை சுத்த ஜலத்தால் கழுவியபின்பு, காய்ச்சாத பசும் பால், தேன், கற்கண்டுப்பொடி, நெய், தயிர் ஆகிய ஐந்து வித (பஞ்ச அமிர்தங்கள்) பொருட்களையும் ஒன்றாகக் கலந்து அபிஷேகம் செய்ய வேண்டும். பிறகு சுத்தமாகத் துடைத்துவிட்டு, திருக்கோவிலுக்குச் சென்று அணிந்து கொள்ளலாம்.

தினமும் அணிவதற்கு முன்பாக நமது இஷ்ட தேவதா மந்திரங்களையோ, தீட்சை தரப்பட்ட மந்திரங்களையோ நிச்சயமாகச் சொல்ல வேண்டும். ருத்ராட்சம் எல்லாவித மந்திரங்களுக்கும் ஏற்ற விளைவுகளை நிச்சயம் தர வல்லது. சர்வ மந்திரங்களும் வசியம் ஆகக்கூடிய, சிறந்த காந்த ஈர்ப்பு மண்டலத்தைக் கொண்டது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

13. உயர்வு தரும் ஓம்கார மந்திரங்கள்

இந்த உலகம், நாம் காணும் தற்போதைய தோற்றத்திற்கு வருவதற்கு முன்னர், அதாவது அறிவியல் கூறும் பெரு வெடிப்புக் கொள்கைக்கும் முன்பு, சப்த ரூபமான ஓம்காரத்தில் ஒடுங்கி இருந்தது என்பதை ஏறக்குறைய அறிவியல் ஏற்றுக்கொண்டு விட்டது.

நமது சித்தாந்தங்கள், வேதாந்தங்கள் யாவுமே, ஒன்றே பலவாக மாறியிருக்கிறது என்றே முழங்குகின்றன. ஒரு பொருள் பலவாறாகப் பரிணமிக்க வேண்டுமானால் அது மிகவும் வலிமை வாய்ந்த அலையியக்க வடிவத்தை பெற்றிருக்க வேண்டியது அவசியம். அவ்வாறான சப்த ரூபமான அலையியக்கத்தைப் பெற்ற சூட்சும ஒலியின் ஸ்தூல வெளிப்பாடே 'ஓம்' என்ற மந்திரத்தின் சப்த ரூபமான வடிவமாகும்.

ஓம்காரம் வட்ட வடிவத்தில் அமைந்திருப்பதைக் காணலாம். உலக இயக்கங்கள் யாவும் வட்ட வடிவிலேயே அமைந்துள்ளதையும் நாம் காணலாம். நாம் வாழும் பூமி உட்பட, சூரிய மண்டலத்தின் கிரகங்கள் (அவற்றைச் சுற்றும் அதனதன் உப கிரகங்களையும் சேர்த்து) யாவுமே சூரியனை மையப்புள்ளியாகக் கொண்டுதான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுற்றி வருகின்றன. அந்த சூரியனோ, தமது மண்டலத்தோடு பிர பஞ்ச மைய வெளியை ஆதாரமாக வைத்து அதை மிகப்பெரும் சுற்றாகச் சுற்றி வருகிறது.

சூரிய மண்டலம் போல ஏராளமான மண்டலங்கள் வான் வெளியில் விரவிக் கிடக்கின்றன. யாவுமே காலம் தாண்டிய மிகப்பெரும் பர வெளியில் இன்னும் பரந்து விரிந்து கொண்டு தான் இருக்கின்றன என்பதும், அவற்றின் விரிவு பற்றி எதுவுமே அறுதியிட்டுக் கூற முடியவில்லை என்றும் அறிவியல் கூறுகிறது. காரணம் மனித அறிவின் எல்லைகள் யாவுமே அவனது தொடர் பறிவின் பார்வைக்குட்பட்டு, வரையறுக்கப்படும் சிறு அனுப வத்தின் வெளிப்பாட்டை மட்டுமே சார்ந்ததாகும். அதாவது புலன்களின் அனுபவத்தை மட்டுமே சார்ந்ததாகும். புலன்களோ குறிப்பிட்ட வரையறைக்குட்பட்டே இயங்கும்.

எனவே, காலம் ஒரு கருத்தாகக் கூட தோன்றாத கால ஆரம் பத்தில் இருந்து, இன்றுவரை உள்ள எல்லாவித தோற்றங்களுக்கும் பின்புலமாக உள்ள சப்த ரூபமாகவே, ஓம் என்பதைக் கூறலாம். அது இனம், மொழி, மதம், நாடு, மக்கள் ஆகிய எவற்றிற்கும் கட் டுப்படாததாகும். ஹான்ஸ் ஜென்னி (1941-1972) என்ற சுவிஸ் நாட்டு அறிவியல் அறிஞர், தமது அறிவியல் ஆய்வின் வெளிப்பா டாக ஒலியின் சப்தப் பரிமாணத்தைப் பார்வைக்குப் படமாகக் காட்டக்கூடிய ஒரு கருவியை வடிவமைத்தார். அது 'டோனோஸ் கோப்' [TONOSCOPE] என்று வழங்கப்படுகிறது. அதன் வழியே 'ஓம்' என்ற மந்திரத்தின் அதிர்வுகளைப் பதிவு செய்தால், அது 'ஸ்ரீ சக்ர' வடிவத்தில் வெளிப்படுவதைக் கண்டார். ஸ்ரீ சக்ர மத் தியில் எல்லா சவுபாக்கிய சக்திகளும் வீற்றிருப்பதாக நம்முடைய மகான்கள் அறுதியிட்டுச் சொல்லியுள்ளனர்.

மேலும், 'ஓம்' என்ற சப்த ரூபம், மனதின் பலவிதமான அடுக்கு களின் அதிர்வெண்களில் நல்ல விளைவுகளைத் தருவதாக கண் டறிந்துள்ளார்கள். அதை முறையாக உச்சாடனம் செய்யும்போது மன அழுத்தங்களுக்கு நல்ல மருந்தாக அமைகிறது. நம்முடைய இரண்டு காதுகளின் வெளிப்புற வடிவத்தைக் கவனித்தோமானால், அது 'ஓம்' என்ற தமிழ் எழுத்தின் வடிவம் போலவே தெரியும். சூட்சும சப்த ரூபமான ஓம்காரத்தைக் கிரகிக்கும் முகமாகவே, இயற்கையின் படைப்பாக, மனிதகுலம் முழுமைக்கும் கேட்கும் கருவியான காது படைக்கப்பட்டிருப்பது போலவே தெரிகிறது.

'ஓம்' என்ற மந்திரத்தைப் பிரித்தால், அது அ, உ, ம என்ற மூன்று எழுத்துக்களாகப் பிரியும். அது ஆங்கிலத்தில் A, U, M என்று வரும். அதாவது OM என்பது AUM என்று வழங்கப்படும். 'அகார

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதயே நமோ நம, உகார பதயே நமோ நம, மகார பதயே நமோ நம' என்று ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் தமது குமாரஸ்தவத்தில் அருமையாக எடுத்துக்காட்டுவார்.

பகவத் கீதையில் கண்ணனும்கூட, 'எவரொருவர் என் நினைவோடு ஓம் என்று உச்சரித்தவாறே உயிர் துறக்கின்றாரோ, அவர் எல்லாவற்றிலும் மேலான கதியை நிச்சயம் அடைகிறார்' என்று உறுதி கூறுகிறார். திருவாசகம், 'உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யா...' என்று சப்த ஸ்வரூப இறைவடிவைத் தொழுது மகிழ்கிறது. திருமூலரோ, நான்கு வரிகளில் எட்டு முறை ஓம்காரத்தைப் பற்றிக் கூறுகிறார். கீழே அப்பாடல் வருகிறது.

'ஓமெனு ஓங்காரத்துள்ளே ஒரு மொழி
ஓமெனு ஓங்காரத்துள்ளே உருவம்
ஓமெனு ஓங்காரத்துள்ளே பல பேதம்
ஓமெனு ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே'

என்று ஓம்காரத்தின் பரிமாணத்தைத் திருமந்திரம் அழகுற மொழிகிறது. கந்தரனுபூதி தந்த அருணகிரிநாதரும், நான்முகன் அறியாத ஓம்கார தத்துவத்தை, ஐந்து முகம் கொண்ட பரமேஸ்வரனே, ஆறுமுகம் கொண்ட தம் தனயனிடம், சிஷ்ய பாவத்தோடு கேட்டருள் செய்த மேலான பரம தத்துவத்தை எண்ணி, எண்ணி வியப்பதை இவ்வாறு நம்மிடமே வினவுகிறார். 'நாதா குமர நம என்று அரனார், ஓதாய் என ஓதியது எப்பொருள்தான்.....' (கந்தரனுபூதி).

நம்முள்ளிருக்கும் நம்மை நமக்கே காட்டுவதில் ஓம்காரமே ஒரு தனிச் சிறப்பைப் பெறுகிறது. இது ஏதோ ஒரு பெரிய ஆன்மிக சாதனையின் கஷ்டமான வழிமுறையோ என்றுதான் பெரும்பாலானோர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது அவ்வளவு கஷ்டமான விஷயமல்ல. சாதாரணமாக நமது அன்றாட வாழ்வில் சில நிமிடங்களை ஒதுக்கினாலே போதும். பலவித நன்மைகள் நம்மை நாடிவரும். அப்படிப்பட்ட 'ஓம்' எனும் மந்திரத்தைப் பயன்படுத்தும் ஓரிரு வழிமுறைகளை இங்கே காணலாம்.

ஓம் மந்திரத்தை நாம் உச்சரிக்கச் சிறந்த நேரம் காலை 5 மணி முதல் 7 மணி வரை ஆகும். சூரிய உதயத்தோடு உலக இயக்கங்கள் யாவுமே ஆரம்பமாகும் இனிய தருணம் மேற்கண்ட இரண்டு மணி நேரமாகும். அந்த நேரத்தில் ஏதாவது ஒரு 20 முதல் 30 நிமிடம் வரையிலான காலகட்டத்தைத் தேர்வு செய்து, தினமும் அந்த நேரத்திலேயே ஓம்கார ஜபத்தைச் செய்ய வேண்டும். (அவ்வாறு இயலாவிடில் மாலையில் 5 முதல் 7 மணி வரையுள்ள

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மூன்று குண மந்திரங்கள்

மந்திர சாஸ்திரம், மந்திரங்களை மூன்றுவிதமாகப் பகுத்துக் காண்கிறது. அவை, சாத்வீக குண மந்திரங்கள், ரஜோ குண மந்திரங்கள், தமோ குண மந்திரங்கள் ஆகும். அமைதியையும், சாந்தத்தையும், மங்கள சவுபாக்கியங்களையும் தமது தோற்றத்திலும், குணத்திலும் கொண்ட தேவதா மூர்த்திகளின் மேல் அமைந்த மந்திரங்கள் சாத்வீக குணங்கள் கொண்டவையாகும்.

உக்கிரமான தோற்றமும், ஆயுதங்களைக் கைகளில் கொண்டிருப்பதும், துஷ்ட நிக்ரஹ ஸிஷ்ட பரிபாலன, சம்ஹார நிமித்த காரணமான அவதாரத் தோற்றங்களின் மேல் அமைந்த மந்திரங்கள் ரஜோ குண மந்திரங்கள் ஆகும். தமோ குண மந்திரங்கள் கீழ் நிலை தேவதாமூர்த்திகளான, சிறு தேவதைகளின் மேல் அமைந்தவையாகும். ஓம்காரமோ பூரண ஞானம் சார்ந்த மந்திரமாகும். மந்திர சாஸ்திர ரீதியாக அதற்கு பலவிதமான வரையறைகள் இருக்கின்றன. இந்த விஷயத்தில் நமது அணுகுமுறையை அறிவியல் ரீதியானதாக அமைத்துக்கொள்வதே நமக்குப் பல நன்மைகளைத்தரும்.

நேரத்தையும் பயன்படுத்தலாம். முடியுமானால் காலை, மாலை ஆகிய இரு நேரங்களையும் பயன்படுத்துவது மிகவும் நல்லது). அமர்வதற்கு, ஒரு நல்ல கெட்டியான துணியினாலான விரிப்பைப் பயன்படுத்தலாம். கிழக்குப் பார்த்து நாம் அமர்வதே நல்லதாகும். சுகாசனத்திலோ, அல்லது சித்தாசனத்திலோ அமர்ந்து கொள்ள வேண்டும். கைகளை சின் முத்திரை, அல்லது ஆதி முத்திரையில் வைத்துக் கொள்ள வேண்டும். இரு கை விரல்களையும் சேர்த்தபடியும் வைத்துக் கொள்ளலாம். நன்றாக சிரமமில்லாமல் நிமிர்ந்து அமர்ந்து கொள்ளுதல் நல்லது. அப்படி முடியாதவர்கள் சுவரில் சாய்ந்தோ, அல்லது ஒரு நாற்காலியில் கால்களைத் தொங்கவிட்டபடியோ அமர்ந்து கொள்ளலம்.

அப்படி வசதியாக அமர்ந்து கொண்டு மூச்சை 6 முதல் 8 தடவைகள் நன்றாகவும், மெதுவாகவும் உள்ளிழுத்து, நிதானமாக வெளியே விட வேண்டும். மூச்சை எந்த இடத்திலும் நிறுத்தக் கூடாது. மூச்சை உள்ளிழுத்து வெளிவிடுவதை எவ்வித அவசரமும் இல்லாமல் மெதுவாகச் செய்யவேண்டும். மூச்சு பெரும்பாலும் உள்ளிழுப்பது குறைவாகவும், வெளியில் விடுவது அதிகமாகவுமே இருப்பதை அனுபவத்தில் காணலாம். உள்ளிழுக்கும் மூச்சு ஆக்சி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஜன் (பிராண வாயு) ஆகும். வெளிவிடும் மூச்சு கார்பன்டைஆக்சைடு (கரியமில வாயு) ஆகும். உள்ளே செல்லும் பிராண வாயு 'அமிர்த கலை' எனப்படுகிறது. வெளியே வரும் கரியமில வாயு 'விஷ கலை' எனப்படுகிறது.

இன்றைய நாகரிக வாழ்வில் நமது உடலில் விஷக் கலையே அதிகமாகி விட்டது என்பதையே, நாம் வெளியில் விடும் மூச்சு நீண்டதாக அமைந்து வெளிக்காட்டுகிறது. நாம் உள்ளிழுக்கும் காற்றிலுள்ள பிராண வாயுவே நமது ரத்தத்தின் சிவப்பிற்குக் காரணமான ஹீமோகுளோபின்களுக்கு மிகவும் தேவையானதாகும். அவ்வாறு, 6 அல்லது 8 முறைகள் மூச்சை நன்கு இழுத்து விடும்போது நமது உடல் அமைதியும், ஏற்புடைய தன்மையும் பெற்றதாக அமையும். ரத்தமும் புத்துணர்வு பெற்றதாக இருக்கும்.

அதன்பின்பு கண்களை மெதுவாக மூடிய நிலையில், நமது கவனத்தை எவ்வித அழுத்தமுமில்லாமல் புருவ மத்தியில் நிறுத்தி, ஓம் உச்சரிப்பைச் செய்யவேண்டும். மூச்சு உள்ளிழுக்கும்போது ஒரு முறையும், வெளியில் விடும்போது ஒரு முறையும் உச்சரிக்கலாம். எந்த இடத்திலும் மூச்சை நிறுத்தக் கூடாது. மூச்சைத் தானாக, அதன் போக்கில் விட்டு விட வேண்டும். மூச்சின் மீது கவனம் செலுத்தாமல் ஓம் மந்திரத்தின் மீது கவனம் வைக்க வேண்டும். தலை கனமாக இருப்பதுபோலவோ, தூக்கம் வருவது போலவோ இருந்தால் கண்களைத் திறந்து கொள்ளலாம். அல்லது எதுவும் செய்யாமல் அமைதியாகச் சிறிது நேரம் அமர்ந்திருந்துவிட்டுப் பிறகு தொடரலாம். மிகவும் மெதுவாகவே நமது எல்லாவித செயல்பாடுகளையும் அமைத்துக் கொள்ளவேண்டும். முதலில் 20 நிமிடத்தில் ஆரம்பித்துப் படிப்படியாக, மெல்ல மெல்ல நேரத்தை அதிகப்படுத்திக் கொள்ளலாம். அதிகபட்சமாக 30 நிமிடம் வரை செய்தாலே போதுமானது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்தப் பயிற்சிக்குப் பின்னர் நமது மூளையின் அலையியக்கம் நமது அக இயற்கையான ஆழ்மனதின் செயல்திறனை மேம்ப டுத்துவதாகவே அமையுமாதலால், நமது குறிக்கோள்களை அந்த சமயத்தில் நாம் சிந்தனை செய்யும்போது ஆழ்மனம், அதை நிறை வேற்றுவதற்கான காரண காரிய வழிவகைகளைப் புற இயற்கையில் அமைத்துக் கொள்கிறது என்பது ஆன்மிக மனோதத்துவமாகும். இவை யாவுமே ஓரிரு நாட்களிலேயே நடந்து விடுபவை அல்ல. மெதுவாக, ஆனால் நிச்சயமாக, அது நம்மை நமது இலக்கை நோக்கிச் செலுத்துவது உறுதியாகும். மேலும், உடல், மன ரீதியான சமநிலையை நாம் பெறுவதால், பலவிதமான சிக்கல்களில் இருந்து நாம் விடுபட அது உறுதுணையாக இருக்கும்.

ஓம்காரப் பிரயோகத்தில் இன்னொரு வழிமுறையை இப்போது காணலாம். அதாவது தினமும் மூன்று நேரங்களில் ஓம் என்ற பிரணவத்தை உச்சாடனம் செய்யவேண்டும். காலை 6 மணி, மதியம் 12 மணி, மாலை 6 மணி ஆகியவையே அந்த நேரங்க ளாகும். இதற்கு நாம் பிரத்தியேகமாக எதுவும் செய்ய வேண்டி யதில்லை. எந்தவிதமான வேலையில் நாம் ஈடுபட்டிருந்தாலும், ஒரு 2 நிமிடங்களுக்கு, சரியாக அந்தந்த நேரங்களில் ஓம்காரத்தை மானசீகமாக உச்சரிக்க வேண்டும். 48 முறையோ, 27 முறையோ உச்சாடனம் செய்யவேண்டும். செய்தபின்பு தொடர்ந்து, விட்ட வேலைகளை ஆரம்பிக்கலாம்.

இன்னும் விசேஷமாக, முடிந்தபோதெல்லாம் ஓம், ஓம் என்று மனதில் ஓம்காரத்தை ஒலிக்கச் செய்யலாம். அதன் மூலமாக பல வெற்றிகளைப் பெறலாம். மேற்கூறிய எல்லா வழிவகைகளையும் ஒரு அமாவாசையன்று ஆரம்பித்துச் செய்ய வேண்டியது மிக முக்கியமாகும். சூரிய, சந்திரர்கள் இணையும் நாளில் தொடங்கிச் செய்யும்போது, இயற்கையான சாதக நிலைகள் நம்மை நாடி வரு வதற்கு ஏதுவாக இருக்கும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



14. சகல நன்மைகளையும் தரும் சிவ மந்திரங்கள்

மந்திர சாஸ்திரம் மிகவும் நுட்பமான செயல் திட்ட வரையறைகளைக் கொண்ட சூட்சுமமானது. அதில், பல் வேறு தேவதா ரூபங்களின் வடிவங்கள், சப்த வடிவில் அடங்கியுள்ளது. அதை சப்த பிரம்மம் என்றே வழங்குவார்கள். (ஒலி வடிவமான நாதம்). அதில் அந்தந்த தேவதா மூர்த்திகளின் பீஜாட்சரங்கள் உட்பட, அவற்றின் மேலமைந்த பல்வேறு ஸ்துதிகள், ஸ்தோத்திரங்கள், பாமாலை கள், அர்ச்சனைகள், மகான்களின் மங்களா சாசனங்கள் ஆகிய யாவுமே அடங்கியிருக்கும். அவற்றைப் பயன்படுத் துவதற்கான சட்ட திட்ட நடைமுறைகளும், எவரெவர், எந்தெந்த நேரங்களில் அவற் றைப் பயன்படுத்துவது என்ற விரிவான வழிமுறைகளும் அதில் அடங்கியிருக்கும்.

'பழையன கழிதலும் புதியன புகுதலும்.....' என்ற முறையில் தற்கால நாகரிக நடைமுறைக்குப் பொருந்தும்படியாக அதிலும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பலவிதமான நுட்பமான வழிவகைகள் தற்போது வழக்கத்தில் உள்ளது. நமது ஆன்றோர் பெருமக்கள், நாகரிகம் வளர்ந்த சமூக அமைப்பிற்கேற்பவும், பெரும்பாலான மக்கள் பின்பற்றுவதற்கு ஏற்பவும் எளிய முறையில் அவற்றை வடிவமைத்துள்ளார்கள். பழைய முறையின் மீது அமைக்கப்பட்ட புதிய வழித்தடம் என்றே அதைக் கூறலாம். அவற்றில் உள்ள பல வகை மந்திரங்களுக்கு, ஒரு சரியான வழிகாட்டியின், வழிகாட்டுதல் நிச்சயமாக வேண்டும். அவை, அந்த அளவு ஆழ்ந்த, நுட்பமான சக்தியின் வெளிப்பாட்டைத் தன்னில் அடக்கியுள்ளவையாகும். மேலும், அதன் தொடர்ந்த பயன்பாட்டு முறைகளில், சரியான ஆரம்பமும், ஒரு தேர்ந்த வழிகாட்டுதலும் நிச்சயம் அவசியமாகும். அதில் சில விதிவிலக்கானவையும் உள்ளன. அவற்றை விரும்புவோர் அதைத் தமது நலன்களுக்காகப் பயன்படுத்துவதில் தடைகளேதுமில்லை. அந்த வரிசையில் சிவபெருமானின் திவ்ய மந்திர வடிவத் திருநாமங்களில் சிலவற்றை நாம் இங்கு காணலாம்.

'சிவ சிவ என்றிடத் தீவினை மாலும்
சிவ சிவ என்கிலார் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தேவருமாவர்
சிவ சிவ என்னச் சிவ கதி தானே'

என்று திருமந்திரம் 'சிவ சிவ' என்பதன் மகத்துவத்தைப் பற்றிப் பேசுகிறது. அது காரணப் பஞ்சாட்சரம் என வழங்கப்படும். ஸ்தூல சரீரம், சூட்சும சரீரம், காரண சரீரம் ஆகிய மூன்று வித தேக அமைப்புகள் நமக்கு உண்டு. ஸ்தூல சரீரமான இந்தப் பரு உடலுக்குள் சூட்சும சரீரமும், சூட்சும சரீரத்துக்குள் காரண சரீரமும் அடங்கியுள்ளன. இதில் சிவ சிவ எனும் மந்திரமோ, நமது காரண சரீரத்தின் மீதுள்ள பிறழ் பதிவுகளை நீக்க வல்லது என்பதை ஞானியர் தெளிவான முறையில் எடுத்துச் சொல்லியுள்ளனர். ஆனால், அது சூட்சுமமான காரணப் பஞ்சாட்சரமாக இருப்பதால், லவுகீக லாபங்களை அதில் நாம் எதிர்பார்க்க முடியாது. அது, சாதாரண உலகியல் ஆசாபாசங்களுக்கு அப்பாற்பட்ட, ஞான நிலைக்கு ஒருவரை இட்டுச் செல்லக்கூடியதாகும். அதாவது, உலகியல் குறிக்கோள்களைப் பூர்த்தி செய்த ஒருவருக்கு இந்த மந்திரம் மிகவும் பொருத்தமானதாகும்.

'வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றுஅது
வேண்டாமை வேண்ட வரும்'

– என்ற வள்ளுவத்தின் வழி நிற்கும் அனைவருக்கும் இது தகும்.

அதாவது, துறவு என்ற பெருநெறி பூண்ட பெருமக்களுக்கும், மிக வயதானவர்களுக்கும் இது இறைநிலையின் வாயிற்கதவுகளுக்கு அரு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கில் கொண்டு சேர்க்கும் வல்லமை பெற்றதாகும். இந்த மந்திரத்தின் மிக அருமையான பயன்பாட்டு வடிவமாக, கலியுகக் குழப்பங்களைக் களையும் முகமாக, இம்மந்திரத்தை இல்லற வாழ்வில் உள்ளோரும் பயன்படுத்திப் பலன்கள் பலவும் பெற்றிட வேண்டினால், அதன் முன்னும், பின்னும் பிரணவத்தைச் சேர்த்து, 'ஓம் சிவ சிவ ஓம்' என்று அமைத்து, காலையும், மாலையும் 108 முறை ஜபித்து மேன்மை அடையலாம்.

அடுத்து, 'நமசிவய' என்னும் ஸ்தூல பஞ்சாட்சரமாகும். இதை, பிரணவமான ஓம்காரத்தோடு சேர்த்துச் சொல்வதே மரபாகும். (ஓம் நமசிவய) பக்தியுணர்வும், இறையன்பும் வாய்க்கப் பெற்ற நல்லோர்களுக்கு இது அமிர்தம் போன்றதாகும் என்பதே அருளாளர்களின் துணிந்த முடிவாகும். சித்தர் பெருமக்கள் இந்த மந்திரத்தைப் பஞ்ச பூதங்களின் ஒருமித்த வெளிப்பாடாகவே உணர்ந்தனர். இந்த மந்திரத்தில் சித்தி அடைவதால் பஞ்ச பூதங்கள் கட்டுப்படுவது மட்டுமல்லாமல், ஐம்பொறிகளும் நமது கட்டுக்குள் அடங்கி நிற்கின்றன. பஞ்சபூதங்களின் மீதான அதன் ஆளும் அமைப்பைக் கீழே காணலாம்.

'ந' என்ற எழுத்து நிலத்தைக் குறிக்கக் கூடியதாகும்.
'ம' என்ற எழுத்து நீரைக் குறிக்கக்கூடியதாகும்.
'சி' என்ற எழுத்து நெருப்பைக் குறிக்கக் கூடியதாகும்.
'வ' என்ற எழுத்து காற்றைக் குறிக்கக் கூடியதாகும்.
'ய' என்ற எழுத்து ஆகாயத்தைக் குறிக்கக் கூடியதாகும்.

சிவமகா புராணத்தின் வாயு ஸம்ஹிதையில் உள்ள உத்தர பாகத்தின் ஆரம்பத்தில், ஐந்து அட்சரங்களுக்கும் உரிய நிறங்களும், அவற்றிற்குரிய ரிஷிகளும், சிவ பரம்பொருளின் எந்தெந்த முகத்திற்கு எந்தெந்த அட்சரங்கள் என்றும் தெளிவாக விளக்கப் பட்டிருக்கின்றன. 'ந' என்ற எழுத்து, கிழக்கு நோக்கிய முகத்திற்கு உரியது. இதன் நிறம் மஞ்சள். ரிஷி, கவுதம மகரிஷி ஆவார். 'ம' என்ற எழுத்து தெற்கு நோக்கிய முகத்திற்குரியது. இதன் நிறம் கருப்பு. ரிஷி, அத்திரி மகரிஷி ஆவார். 'சி' என்ற எழுத்து மேற்கு நோக்கிய முகத்திற்கு உரியதாகும். இது புகையின் நிறம் உடையது. ரிஷி, விஸ்வாமித்திர மகரிஷி ஆவார். 'வ' என்ற எழுத்து வடக்கு நோக்கிய முகத்திற்கு உரியதாகும். இது பொன்னிறமான நிறத்தையுடையது. இதன் ரிஷி, ஆங்கீரஸ மகரிஷியாவார். 'ய' என்ற ஐந்தாவது எழுத்து மேல் நோக்கிய திருமுகத்திற்கு உடையதாகும். இது சிவந்த நிறம் கொண்டது. இதனுடைய ரிஷி, பரத்வாஜ மகரிஷியாவார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமசிவாயவே'

என்று திருஞானசம்பந்தரின் நமச்சிவாயப் பதிகம் உள்ளம் உருக, நமசிவய மந்திரத்தின் பெருமையை உயிரும் உருக விவரிக்கிறது. இந்த மந்திரமானது, வேதம் நான்கினும் மெய்ப்பொருளாகும் நாதனான சிவபெருமானின் திருமேனிக்கு அபிஷேகம் நடக்கும் காலங்களில் ஓதப்படும், 'ஸ்ரீ ருத்ரத்தின்' நடுநாயகமாக விளங்கும் மகத்தான மந்திரமாகும். (யஜுர் வேதத்தின் நான்காம் காண்டத்தில் உள்ள, ஸ்ரீ ருத்ரம் 11 அனுவாகங்களைக் கொண்டது. இதில் 5-வது அனுவாகத்தில் நம சிவய என்று அழகாகக் குறிப்பிடப்படுகிறது). தினமும் காலை, மாலை ஆகிய இரு வேளைகளிலும், குளித்து முடித்தோ, அல்லது கை கால்களைச் சுத்தம் செய்தபிறகோ, திருநீறு அணிந்து, ருத்ராட்ச மாலை கொண்டு 27 அல்லது 54 அல்லது 108 முறை ஜபம் செய்து வருவது மிக நல்ல பலன்களைச் செய்யும்.



கூடுதலாக ஜபம் செய்யுமுன் சுவாசத்தைச் சீர்படுத்திக் கொண்டு (சரியான, நிதானமான, அமைதியான சுவாச நிலையினைக் கைக்கொள்ள

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேண்டும்) கிழக்கு முகமாக, ஒரு மரத்தாலான ஆசனத்தில் அமர வேண்டும். முதுகெலும்பை நிமிர்த்தி வைத்து, நேராகவும், சவுகரியமாகவும் நமக்கு உகந்த ஆசனத்தில் அமரலாம். வீட்டிலோ, அல்லது ஏதாவது ஒரு திருக்கோவிலிலோ, பசுமாடுகள் பராமரிக்கப்படும் கட்டுத்தாரைகளிலோ, ஆற்றங்கரைகளிலோ, மலையுச்சியிலோ, யாருமற்ற அமைதியான வனப்பகுதிகளிலோ நம்முடைய ஜபத்தை வைத்துக் கொள்ளலாம்.

வேகமாகவோ, மிக மிக மெதுவாகவோ, அவசர அவசரமாகவோ, மனக்குழப்பத்துடனோ, பயத்துடனோ, உடல்நிலை சரியில்லாத சமயத்திலோ ஜபம் செய்வது கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும். ஜபம் செய்ய மிகவும் சரியான காலம் காலை, மாலை

மந்திரம் என்பது...

ஒரு மந்திரத்தை உச்சரிப்பதற்கு முன்பு பலவித தொடக்க நிலை செயல்பாடுகள் அவசியமாகின்றன. பலவித நியதி, நியமங்களும் தேவைப்படுகின்றன. அதன்பிறகே அதன் பயன்கள் நடைமுறைக்கு வரும். ஒரு சாதாரணச் சொல்லிற்கும் மந்திரத்திற்கும் உள்ள வித்தியாசம் அது பயன்படுத்தப்படும் விதத்தில்தான் உள்ளது. சாதாரணமாக நாம் சொல்லும் சொற்கள் காற்று என்ற ஊடகம் வாயிலாகவே நம் காதுகளை அடைகிறது. அது சொல்பவருக்கும், அதைக் கேட்பவருக்கும் இடையில் உள்ள ஒரே தொடர்பு மட்டுமே. ஆனால், மந்திரங்கள் பஞ்சபூதங்களோடும் தொடர்புபடுத்தப்படுகின்றன.

அதாவது, சாதாரண ஜபம் என்றால் ஒரு தீபம் ஏற்றி வைத்து, அந்த மந்திரத்திற்குரிய தேவதாமூர்த்தியை வணங்கிய பின்பு, ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் ஜபம் செய்ய வேண்டும் என்பதே முறையாகும். அதுவே ஒரு யாகமாகவோ, ஹோமமாகவோ இருந்தால், ஒரு குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட எண்ணிக்கையில் அக்னி வளர்க்கப்பட்டு, மந்திர உருவுடன் அக்னி பகவானுக்கு ஆகுதியும் அளிக்கப்படும். இவ்வாறு பஞ்சபூதங்களோடு தொடர்புபடுத்தப்படும் ஒரு சொல் மந்திரமாகிறது. அல்லது, இயற்கையிலேயே உள்ள சப்த அதிர்வுகளைக் குறிப்பிட்ட அலையியக்கத்திற்கு உட்படுத்தி, அதன் அதிர்வெண்ணிக்கைகளால் புற இயற்கையிலும் அவ்வெளிப்பாட்டை உணர வைப்பதும் மந்திரமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆகிய இரு வேளைகளிலும், 5.30 மணி முதல் 6.30 மணிவரையில் உள்ள சூரிய உதயாஸ்தமன காலங்களாகும்.

நாம் காணும் அடுத்த மந்திரம், 'சிவய நம' எனும் சூட்சுமப் பஞ்சாட்சரம் ஆகும். இதிலும் பிரணவத்தைச் சேர்த்து, 'ஓம் சிவய நம' என்றே உச்சரிக்க வேண்டும். சிவபெருமானின் ஐந்து முகங்க ளிலிருந்தும் ஓம் என்ற பிரணவம் உதித்தது. அதாவது, வாமதேவ (வடக்கு) முகத்திலிருந்து 'அ'காரமும், சத்யோஜாத (மேற்கு) முகத் திலிருந்து 'உ'காரமும், அகோர (தெற்கு) முகத்திலிருந்து 'ம'காரமும், தத்புருஷ (கிழக்கு) முகத்திலிருந்து 'பிந்து' எனப்படும் நாதத்தின் தொடக்கப்புள்ளியும், ஈசான (மேல் நோக்கியது) முகத்திலிருந்து நாதமாகிய முழுமையான சப்த ரூபமும் தோன்றின. இவ்வாறு 'ஓம்' என்ற மகத்தான பிரணவத்தோடு, சிவய நம என்று (சிவனை நமஸ்கரிக்கின்றேன்) சேர்த்து முழுமையான மந்திரஸ்வரூபமும் உருவானது.

'அவ்வும், உவ்வும், மவ்வுமாய் அமர்ந்ததே சிவாயமே' என்று சிவ வாக்கியர் மிக அழகாக எடுத்துக்கூறுவார்.

'சிவாய நம என்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒரு நாளுமில் லையே' என்ற உத்திரவாதத்தை மிகவும் உறுதியாக நம்முன் வைப் பவர் அவ்வையார் ஆவார்.

'சித்தம் ஒருக்கிச் சிவாய நம என்று இருக்கினல்லால்
அத்தன் அருள் பெறலாமோ அறிவிலாப் பேதை நெஞ்சே...'
என்று திருநாவுக்கரசப் பெருமான் தமது நெஞ்சத்திற்கே அதை எடுத்துச் சொல்கிறார்.

'மாணிக்க வாசக!' என்று அந்த சிவபெருமானாலேயே அழைக்கப்பட்ட பாக்கியம் பெற்ற திருவாதவூராரோ,

'திருவாய் பொலியச் சிவாய நம என்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீ பாதிரிப் புலியூர் அரனே'
என்று உளமுருகப் பிரார்த்திக்கிறார்.
திருமூல நாயனாரோ, 'திரிமலம் நீங்கிச் சிவாய வென்றோதும்.....'
என்று அம்மந்திரத்தின் பயன்பாட்டுத் திறனைக் குறிப்பிட்டுக் காட்டுகிறார்.

அடுத்ததாக நாம் காணவிருக்கும் மந்திரம், சிவனின் திருவரு ளையே நாடிப், பாடிப், பணிந்து, உள்ளம் உருகி, உயிர் நிறைந்து, உணர்வில் அந்த ஏகனையே நிறுத்த விரும்புவோர்க்கென்றுள்ள மந்திரமாகும். இது, ஸ்ரீ ருத்ரத்தின் மிக நுட்பமான வடிவமே என் றால் அது மிகையானதன்று. வேண்டுதல், வேண்டாமை என்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எதுவுமற்ற நிலையானாலும், வேண்டுதல்களே வாழ்வின் ஒருபகுதியாக ஆகிவிட்ட நிலையென்றாலும் எவருக்கும் நல்ல நிலையை அடைய வைக்கும் வல்லதோர் மந்திரமே இதுவாகும்.

அது, **'ஓம் நமோ பகவதே ருத்ராய'** எனும் மந்திரமாகும். ஸ்ரீ ருத்ரனின் சிறப்பான ஏகாதச அமைப்பில் இது வருவதை நாம் காணலாம். முக்கியமாக இதை, சதுர்த்தசி திதி, அமாவாசை திதி, பிரதமை திதி ஆகிய மூன்று நாட்களிலும் உபவாசமிருந்து 108 முறை ஜபம் செய்வதால் சிவபெருமானின் பூரண அருளையும், சதுர்த்தசி திதி, பவுர்ணமி திதி, பிரதமை திதி ஆகிய மூன்று நாட்களிலும் உபவாசமிருந்து, 108 முறை ஜபம் செய்வதால் அம்பிகையின் திருவருளையும் நாம் நிச்சயமாகப் பெற்று வாழ்வியல் நலன்களை அடைந்து மகிழலாம்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy



15. பலன் தரும் நாராயணர் தாரக மந்திரங்கள்

ஒரு பொருளை, நாம் கண்களால் காணும் தோற்றமும், அதன் உண்மையான தோற்றமும் வேறு வேறு என்று அறிவியல் கூறுகிறது. அதாவது, நாம், நமக்கு எதிரில் எந்தப் பொருள் இருந்தாலும், அதன் கடந்த கால வடிவத்தை மட்டும்தான் இயல்பாகக் காண முடிகிறது. நிகழ்காலம் என்ற சிந்தனை வந்ததும் அது கடந்த காலமாகி விடுகிறது. நமக்கு முன்னுள்ள எதிர்காலத்தின் வழியாகவும் ஒரு பொருளைப் பார்க்கமுடியாது. அதாவது ஒரு சாதாரணக் கருங்கல்லுக்குள் அடங்கியுள்ள அழகிய சிற்பத்தை நாம் காணவியலாது. அது காலத்தின் ஆழத்தில் புதைந்துள்ளது.

பொருட்களின் முப்பரிமாணத் தோற்றங்களையே நாம் உள்வாங்க முடிகிறது. ஆனால், இடம், பொருள், காலம் ஆகிய மூன்று பரிமாணங்களுக்கும் பின்னால் உள்ள ஒரு வஸ்துவை நம்மால் காணவோ, உணரவோ முடியுமா என்ற கேள்விக்கு நமது ஆன்மிகம் பதில் தருகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதாவது, ஒரு மையப்புள்ளியை ஆதாரமாகக் கொண்டு சுழலும் ஒரு பொருளின் திசைவேகம், அதன் மையத்தை நோக்கிச் செல்லச் செல்ல குறைந்து கொண்டே வரும். மேலும் செல்லச் செல்ல அது, இறுதியில் சலனங்கள் ஏதுமற்ற ஒரு மையப் புள்ளியில் போய் முடியும். புள்ளிக்கு எவ்வித பரிணாமமும் கிடையாது. அந்தப் புள்ளியைப் போன்று நம்முள்ளும் ஒரு சலனமற்ற வெட்டவெளியின் பிரகாசமான, காலங்களைச் சாராத, ஒரு புள்ளி உள்ளது என்று ஆன்மிகம் அறுதியிட்டுக் கூறுவதோடு, அதை எவ்விதப் பாகுபாடுமில்லாமல் யாவரும் அடைந்து மகிழப் பல வழிவகைகளையும் வகுத்துக் கூறியுள்ளது. புற அறிவின் வளர்ச்சிதான் அறிவியல் என்றால், அக அறிவின் தேடலே ஆன்மிகம் என்று எளிதாகக் கூற முடியும். அறிவுசார் உலகு எப்போதுமே, சடங்குகளையும், வழிபாடு நெறிமுறைகளையும் சார்ந்திருக்கக் கூடிய அகவியலாம் ஆன்மிகத்தை ஏற்றுக்கொள்வதில்லை.

'ஓராமல் ஓர் பொருளுமுண்ணாமல் உள்வெளியிற் பாராது பார்த்திருக்கப் பாராய் பராபரமே' என்ற ஆன்மவியலின், அக நோக்குத் தத்துவக் கூறுகள் அறிவியலின் அகண்ட ஆராய்ச்சிப் பார்வைக்குப் பொருந்துவதில்லை. ஆனால், அந்த வழியில்தான் ஆன்மிகப் பயணத்தின் பலவிதமான தடவழிகள் அமைந்துள்ளன. அதன் பலவிதமான வழிகளில் நமது கால்கள், ஸ்ரீமன் நாராயணனுடைய மந்திரங்கள் என்ற தனிவழியில் இப்போது பயணப்பட உள்ளது. இதில், ஸ்ரீமன் நாராயணனுடைய ஒரு சில முக்கியமான, தவறாது பலன் தரும் தாரக மந்திரங்களைப் பார்க்கவிருக்கிறோம்.

'மூலம் ஆகிய ஒற்றை எழுத்தை
மூன்று மாத்திரை உள் எழ வாங்கி
மேலை வண்ணனை மேவுதிர் ஆகில்
விண்ணகத்தில் மேவலும் ஆமே'

என்று பெரியாழ்வாரின் பாசுரம் அருமையாகக் குறிப்பிடும். இந்தப் பாசுரம் அஷ்டாட்சர மகா மந்திரத்தை உச்சரிக்கும் விதம் பற்றியே குறிப்பிடுகிறது. அதாவது, 'ஓம் என்ற ஒற்றை எழுத்தை மூன்று நொடிகள் உள்வாங்கி பின், நாபிக்கமலத்திலிருந்து அஷ்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

டாட்சர மகாமந்திரத்தின் உட்பொருளான நாராயணனின் நாமத்தை உச்சாடனம் செய்தால், அவனது வசிப்பிடத்தில் நமக்கும் ஓர் இடமுண்டு' என்பதே அதன் அர்த்தமாகும்.

'குலம் தரும் செல்வம் தந்திடும்
அடியார் படுதுயர் ஆயின எல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும்பருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும்
பெற்ற தாயினும் ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்'

என்று 'பெரிய திருமொழி' தந்த திருமங்கையாழ்வார், நம்மிடம் அவரது ஆச்சரியத்தைப் பகிர்ந்து கொள்கிறார். அவரது, மகிழ்ச்சிக்கு காரணம் இல்லாமல் இல்லை. பெருமாளே தமது உளம் உவந்து, அவரது வலக் காதில் ஓதிய திருநாமம் ஆயிற்றே!.

ஆண்டாளின் தந்தையான, 'பெரியாழ்வார்' தமது பல்லாண்டில் கீழ்க்கண்டவாறு பாடுகிறார்.

'பல்லாண்டென்று பவித்திரனைப் பர மேட்டியை சார்ங்கமென்னும்
வில்லாண்டான்தன்னை வில்லிப்புத்தூர் விட்டுச் சித்தன் விரும்பிய சொல்
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் நமோ நாராயணாவென்று
பல்லாண்டும் பரமாத்மனைச் சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே'

என்று 'முன்னைப் பழமைக்கும் பழமையான' இறைவனை வாழ்த்துவதில் பெரும் மகிழ்வு கொள்வதோடு, அந்த மந்திரத்தை மனமுருக உச்சரித்தவர்களும், அவனருகில் இருந்து பல்லாண்டு பாடும் மிகப்பெரிய பாக்கியத்தைப் பெற்று தமது பிறவிப்பயனையும் துய்ப்பர் என்றே உறுதி செய்கிறார்.

ராமானுஜரின் வாயிலாக உலகோர் யாவருக்கும், கோபுர உச்சியிலிருந்து அருளப்பட்ட மகா மந்திரமே **'ஓம் நமோ நாராயணாய'** எனும் மந்திரம். அசைவம் தவிர்த்து, துளசி மாலை கொண்டு, காலை மாலை இரு பொழுதும், 108 முறை உச்சாடனம் செய்து வரலாம். ஒரு வளர்பிறை ஏகாதசியன்றோ, திருவோண நட்சத்திர நாளிலோ, அல்லது ஒரு புதன்கிழமை அதிகாலையிலோ, அவரவரது ஜென்ம நட்சத்திரத்திற்கு உகந்த நாட்களிலோ, திருமாலின் திருக்கோவிலில் இருந்து ஜபத்தை ஆரம்பித்துச் செய்து வரலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அடுத்து நாம் காண்பது துவாதஸ அட்சரங்கள் (பன்னிரண்டு எழுத்துக்கள்) கொண்ட **'ஓம் நமோ பகவதே வாசுதேவாய'** என்ற தாரக மந்திரமாகும். ஆன்மவியலுக்கு அஷ்டாட்சரம் என்றால், உலகியலுக்கு துவாதஸாட்சரம் ஆகும். இம்மந்திரம், இம்மையில் கர்மவினைகளின் பிடியிலிருந்து விடுபட்டு, வாழ்வியல் சவுபாக்கி யங்களைப் பெற விரும்பும் யாவருக்குமே உகந்ததாகும். நாம் யாவ ரும் சிறுவனான துருவனைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்போம். மனவுறுதியும், இறையின் மகத்தான சக்தியில் நம்பிக்கையும் கொண்ட ஒருவரது வயது எதுவாகயிருந்தாலும், முயற்சியைச் சரியான பாதையில் அமைத்துக் கொண்டால் இறையருளால் நிச்சயம் வெற்றியடைவார் என்ற பேருண்மையை துருவனின் வர லாறு உணர்த்தும். ஒருவரது உயர்வுக்கு உறுதுணையான மந்திரம் இதுவாகும்.

காலையும், மாலையும் 108 முறைகள் இந்த மந்திரத்தை, மெல்ல மெல்ல உரு ஏற்றுவதன் மூலமாகத் திருமகளின் அருட்பார்வை நம்மீது பட்டு, சகல வித வெற்றிகளையும் அடைய வழிவகை செய்யும்.

துருவனை உயர்த்திய மந்திரம்

சுகப்பிரம்ம மகரிஷி அருளிய ஸ்ரீமத் பாகவதத்தில், துருவனின் வரலாறு எடுத்துக் காட்டப்படுகிறது. சுவாயம்புவ மனு வம்சத்தில் உதித்த மன்னன், உத்தானபாதர். அவருக்கு சுருசி, சுநீதி என்று இரண்டு மனைவியர் உண்டு. அவர்களில் சுருசியின் மீதும் அவளது மகனான உத்தமன் மீதும் தனிப்பட்ட பிரியத்தை மன்னன் வைத்தி ருந்தான். மன்னனின் அருகில் சுருசியும், உத்தமனும் எப்போதும் இருப்பார்கள். சிறுவனான உத்தமன் எப்போதும் சிம்மாசனத்தில் வீற்றி ருக்கும் மன்னனின் மடிமீதே, அமர்ந்து விளையாடிக் கொண்டிருப்பான். ஒருநாள் அதைக் கண்ட சிறுவனான, சுநீதியின் மகன் துருவனுக்கும் மன்னனின் மடி மீது அமர்ந்து விளையாடும் ஆசை வந்துவிட்டது.

துருவன், மன்னனின் மடிமீது ஏறி விளையாட முயற்சி செய்தபோது, சுருசி அதைத் தடுத்ததோடு அல்லாமல், அவனுக்கு அந்த உரிமை கிடையாது என்று கடிந்து, அவனை விரட்டிவிட்டாள். அழுதபடியே சென்ற துருவன் தன் தாயிடம் நடந்தவற்றை கூறினான். அரசுரிமை யின் மீதுள்ள சுருசியின் ஆசையே தம் மகன் விரட்டப்பட்டதற்குக் காரணம் என்று சுநீதி அறிந்து கொண்டாள். 'அரசுரிமையை விடவும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அடுத்து நாம் காணவிருக்கும் மந்திரம் நமது மனதின் ஆற்றலை அதிகப்படுத்தும் சக்தி படைத்த, ஸ்ரீ நரசிம்மரின் மீதமைந்த மகா மந்திரமாகும். இதன் ஆற்றலைச் சுவைத்தவர்களே உணர்வார்கள். ஜனன காலத்தில் லக்னமோ, அல்லது சந்திரனோ பாவக்கிரகங்களின் பார்வைகளாலோ, சாரங்களினாலோ, சேர்க்கைகளினாலோ, ஆகாத ஸ்தானங்களில் அமர்ந்திருந்து அந்தக் கிரகங்களின் திசா புக்திகள் நடைமுறையில் இருந்தாலோ, மேற்கூறிய அமைப்புகளில் பிறந்தவர்களுக்கு கோச்சாரத்தில் முக்கியக் கிரகங்கள் சாதகமற்ற நிலைகளில் அமர்ந்திருந்தாலோ, அவர்கள் வாழ்வில் பலவிதமான, எதிர்பாராத துன்பதுயரங்கள் வாட்டிவதைக்கும்.

அந்த அசுப அனுபவங்களால் மனதின் சமநிலை கெட்டு, பல சமயங்களில் பலர், தவறான முடிவுகளுக்குத் தள்ளப்படும் விபரீதங்களும் நடைபெறுகின்றன. அது போன்ற சமயங்களில் நம்முடைய வாழ்வைக் காப்பாற்ற, ஒரு மஹா சக்தியின் அனுக்ரகமே நம்முடைய முக்கியத் தேவையாகும். அது போன்ற சமயங்களில் நம்மையும், நமது உடைமைகளையும் காப்பாற்றக்கூடிய மகா சக்திகளில் நரசிம்மரின் சக்தி மிக முக்கியத்துவம் பெறுகிறது.

மிகப்பெரிய பதவியை அடைய வேண்டுமெனில், ஸ்ரீமன் நாராயணனைத்தான் பிரார்த்தித்துக் கேட்கவேண்டும்' என்று தம் மகனிடம் சுநீதி கூறினாள். நாராயணனின் நாமத்தையும், அதைக்கொண்டு பிரார்த்தனை செய்யும் முறையையும் மகனுக்குச் சொல்லிக் கொடுத்தாள்.

துருவன் கற்பூர புத்தியுடையவனாதலால், அதைத் தவமாகச் செய்யக் காட்டிற்கே சென்றுவிட்டான். நாரத மகரிஷியின் கண்ணில் பட்ட அவன் தனது நிலைப்பாட்டைக் குறிப்பிட்டான். துருவனின் மனவுறுதி நாரதருக்கு ஆச்சரியமளித்தது. அவர் துருவனுக்கு,



'ஓம் நமோ பகவதே வாசுதேவாய'

– என்ற மந்திரத்தை உபதேசம் செய்தார். பிறகு, துருவன் தமது உறுதியான தவத்தினால் குறுகிய காலத்தில், ஸ்ரீமன் நாராயணனின் தரிசனத்தைப் பெற்றான். அதன் மூலம் அரசனாக ஆனதோடு அல்லாமல், சப்தரிஷி மண்டலத்தைவிடவும் மகத்துவம் வாய்ந்த துருவ மண்டலத்தின் துருவ நட்சத்திரமாகவும் பதவியைப் பெற்று பெரும் புகழ் அடைந்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**'ஓம் நமோ நாரஸிம்ஹாய
வஜ்ர தம்ஷ்ட்ராய வஜ்ரிணே!
வஜ்ர தேஹாய வஜ்ராய
நமோ வஜ்ர நகாய ச!!'**

முதலில், ஒரு லட்சுமி நரசிம்ம சுவாமியின் சன்னிதியில் மாலை வேளையில் இம்மந்திரத்தை 18 தடவைகள் உச்சாடனம் செய்து ஆரம்பிக்க வேண்டும். ஒரு சுவாதி நட்சத்திரத்தன்று மாலையில் பழங்கள், புஷ்பங்கள், வாசனை திரவியங்கள், தேங்காய், பழம், பசுநெய், வஸ்திரம் ஆகியவற்றைச் சமர்ப்பித்து, அர்ச்சனை, ஆரா தனைகளால் வழிபாட்டைத் தொடங்கி, நமது குற்றங்குறைகளைத் தீர்த்து நல்வழிகாட்டும்படி மனமுருகி வழிபட்டு விட்டு, பிறகு வழிபாட்டை வீட்டில் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால், தீராத கஷ்டங்கள் தீரும். வாராத நல் வாய்ப்புகள் வந்து நம் வாசலில் வணங்கி நிற்கும். வீட்டில் நரசிம்மரின் படத்தை வைத்து நெய்தீ பம் ஏற்றி பூஜை செய்து மந்திர துதியை 18 முறை உச்சரித்து வர வேண்டும்.

நமது அடுத்த மந்திரம், நல்ல திருப்பங்களைத் தந்தருளும் திருப் பதி திருமலை திருவேங்கடவனின் மீதமைந்த அரிய மந்திரமாகும். இதை ஒரு வளர்பிறை திங்கட் கிழமையன்றோ, அல்லது ஒரு திரு வோண நட்சத்திரத்தன்றோ, அல்லது வளர்பிறை ஏகாதசியன்றோ அதிகாலையில் ஆரம்பித்துச் செய்யவேண்டும். முடிந்தவர்கள் நிச்சயம் ஒரு குரு முகமாக உபதேசம் பெற்றுச் செய்வது உத்த மம். முதலில் பிள்ளையாரையும், குல தேவதையையும் மனதார வணங்கிவிட்டு, இந்த மந்திரத்தை துளசிமணி மாலை கொண்டு தினமும் காலையில் 108 முறை ஜபம் செய்து வர வேண்டும்.

**'ஓம் ஹ்ராம் ஹ்ரீம் க்லீம்
ஓம் நம ஸ்ரீ வேங்கடேசாய'**

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்கும் திருமலை வேங் கடவனின் திருவருளைப் பெறும் பலவித வழிகளில் இந்த மந்தி ரமும் ஒன்று. காலை, மாலை இரு வேளைகளிலும் 108 முறை ஜபம் செய்வதோடு, ஒவ்வொரு தமிழ் மாதத்திலும் வரும் முதல் திங்கட்கிழமைகளில், மலையேறிச் சென்று அவனது தரிசனத்தை யும் பெற்று வந்தால், சர்வ நிச்சயமாக ஒருவரது பொருளாதார நிலையில் திருப்திகரமான நல்ல மாற்றங்கள் உண்டாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

16. பக்திக்கு முக்கியமாகும் சக்தியின் மந்திரங்கள்

'அதைச் செய்ய உனக்குச் சக்தி யிருந்தால் செய். இல்லையேல், சிவனேயென்று இரு'. இந்த வாக்கியத்தை நாம் அன்றாட வாழ்க்கையில் பலமுறைகள் பேசியும், கேட்டும் இருப்போம். அதாவது, ஒரு செயலைச் செய்து முடிக்க வேண்டு மென்றால் 'சக்தி' என்ற செயல்திறன் தேவையாக உள்ளது. அது, உடல் திறனையோ, மன திறனையோ குறிப் பிடக்கூடிய ஒரு சாதாரணச் சொல்லாக இருந்தாலும்கூட, அதன் உள்ளார்ந்த அர்த்தம் இயற்கைக்கும் நமக்கும் உள்ள ஒத்திசைவையின் அளவீட் டையே குறிக்கிறது.

அந்த ஒத்திசைவு மனிதர்களுக்கிடையேயானாலும் சரி, அணுவுக்குள் சுற்றும் மூலக்கூறுகளுக்கு இடையேயானாலும் சரி, அல்லது உலக நாடுகளுக்கிடையேயானாலும் சரி, எல்லாவற்றிற்கு மான ஒரு நிச்சயத் தேவையாகவே அது உள்ளது. அந்த ஒருங்கி ணைப்புத் திறனை உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும், ஆன்மிக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ரீதியாகவும் நம்முடைய ஆன்மிகச் சடங்குகள் எவ்வாறு கொண்டு செல்கின்றன என்பதை ஆன்மிக அறிவியல் நோக்கில் இங்கு நாம் பார்க்க இருக்கிறோம்.

நமது ஆன்மிகத்தில் இறையை பெண்மையின் போற்றத்தக்க வடிவத்தில் வணங்கக் கூடிய முறையை 'சாக்த நெறி' என்று குறிப் பிடுவார்கள். **'ஸர்வம் சக்தி மயம் ஜகத்'** என்று சாக்த நெறி பூரிப் புடன் குறிப்பிடும். ஒரு 'அணுவுக்குள் எலக்ட்ரான், நியூட்ரான், புரோட்டான்' என்று மூன்று விதமான துகள்கள் அடங்கியிருப்ப தைப்போல், சத்வம், ரஜஸ், தமஸ் என்று மூன்றுவித சக்திகளின் ரூபங்கள் வழிபாட்டில் உள்ளன. அவை படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முக்குண இயல்பு களால் வடிவம் பெற்றவை. சரஸ் வதி, லட்சுமி, பார்வதி என்ற அவர்களை வழிபடுமுறைகளில் பலவிதம் பரவி நிறைந்துள்ளது.



ஒரு குறிப்பிட்ட காலத்தில் பொங்கல் வைப்பது, முடியிறக்கம் செய்வது, அலகு குத்துவது, அக்னிச் சட்டி எடுப்பது, தீ மிதிப் பது, என்று வழிபாட்டின் பல வித வடிவங்கள் வாழ்வின் ஒரு பகுதியாகவே ஆகியிருக்கின்றன. ஆனால், இவை யாவும் பண் படாத மன எழுச்சியின் முரண் பாடான வெளிப்பாடுகள் என்றே நவீன கால நாகரிகப் புதுமை வாதிகள் மேலோட்டமாக வாதிட்டு வருகின்றனர். தற்கால வாழ் வில் உள்ள சிக்கலான பலவித வாழ்வியல் பிரச்சினைகளுக்கு மத்தியில் ஒருவர் தமது நேரத்தையும், பொருளையும், சக்தியையும் பயன்படுத்துகிறாரென்றால் அவ்விஷயம் அவருக்கு தனிப்பட்ட வெற்றியைத் தரும் என்ற நம்பிக்கையின் ஆழமான பின்னணி அதிலுள்ளது என்பதை நாம் உணரலாம்.

சாக்த மந்திரங்களில் நாம் காணும் முதலாவது மந்திர ஸ்துதி **'ஸ்ரீ லலிதா சஹஸ்ர நாமம்'**. இது, பதினெண் புராணங்களில் ஒன் றான பிரம்மாண்ட புராணத்தில் வருகிறது. அதில் ஹயக்ரீவருக்கும், அகத்தியருக்கும் இடையே நடந்த உரையாடலில் விளைவாக 'ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமம்' என்ற மகத்தான 'சாக்தக் கனி' நமக்கு கிடைத்தது. ஸ்ரீ லலிதா திரிபுர சுந்தரியை வெள்ளிக்கிழமைகளிலோ,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அல்லது அஷ்டமி திதிகளிலோ, தசாங்க தூபமிட்டு, பால்பாயசம் நிவேதனம் செய்து, தாம்பூலம் முதலான பொருட்கள் சமர்ப் பித்து, மந்திரத்தைப் பாராயணம் செய்து வந்தால், சகலவிதமான நன்மைகளும் இல்லத்தில் துள்ளி விளையாடும்.

'அமுதத்தை உண்ட தேவர்களோ அடிக்கடி துன்ப, துயரங்க ளுக்கு ஆளானார்கள். ஆனால், அவர்களைத் தவிக்கவைத்த, ஆலகால விஷத்தை உண்ட சிவபெருமானோ நித்ய கல்யாணசுந்த ரேஸ்வரராக, திருநீலகண்டராகப் பொலிவுடன் விளங்க அன்னை உமாதேவியின் பதிபக்தியே காரணம்' என்று ஆதிசங்கரர் தமது சவுந்தர்ய லஹரியில் குறிப்பிடுவார். அத்தகைய மங்களகரமான சவுபாக்கிய காரணியான லலிதாம்பிகையை, அவளது மந்திரம் கொண்டும் எளிய முறையில் பெண்கள் பூஜித்து வரலாம். இந்த மந்திரம் சகல நன்மைகளையும் குடும்பத்தினர் அனைவருக்கும் தர வல்லது. மந்திரம் வருமாறு:-

'ஓம் ஹ்ரீம் லலிதாம்பிகாயை நம'

இந்த மந்திரத்தைச் சுமங்கலிப் பெண்கள் யாவருமே வீட்டிலோ, கோவிலிலோ தினமும் 27 முறைகள் ஜபித்து வருவது குடும்பத் தில் சகல சவுபாக்கியங்களையும் ஏற்படுத்தும். மேலும், அவர்க ளது வாக்கில் ஒரு அபூர்வமான வசிய சக்தியையும் உண்டாக்கி வைக்கும். 12 வயதுக்கு மேற்பட்ட பெண் குழந்தைகள் யாவருமே இதை உச்சாடனம் செய்வதால் தோற்றத்தில் ஒரு பொலிவும், கல்விக் கேள்விகளில் நல்ல தேர்ச்சியும் உண்டாகும்.

அடுத்து, வருவது அன்னை மூகாம்பிகையின் தெய்வீகத்தன் மையை நமது அனுபவப்பூர்வமாக உணர வைக்கக்கூடிய அற்புத மான மூல மந்திரமாகும். இதில் ஐம் என்ற பீஜமானது மாயையை விலக்கி, உள்ளதை உள்ளவாறே உணரவைக்கக் கூடிய உன்னதமான ஸாரதாவித்யா மகா சக்தியின் பீஜாட்சரமாகும். அது நான்கு முறைகள் இதில் பிரயோகிக்கப்பட்டிருப்பது நாம் கவனிக்க வேண் டிய ஒன்றாகும். இதன் வடிவமைப்பு பூரண ஞான நிலையை வழங்கும் தன்மையானது.

'ஐம் கௌரி ஐம் கௌரி ஐம்
பரமேஸ்வரி ஐம் ஸ்வாஹா'

சர்வஞானபரமேஸ்வரியான உலக அன்னையின் மூலமாக, சகல ஞானமகா காரணாதிகளின் தோற்றமாக உள்ளவற்றின் உண்மை யான இயல்பை நமது ஞானக் கண்களுக்குக் காட்டியருளும் நன் மந்திரமே இது. இந்த ஜகத்ஜனனியின் அரிய மந்திரத்தைப் புதன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அல்லது வியாழக்கிழமைகளில் ஆரம்பித்துத் தினமும் 32 முறைகள் ஜபம் செய்துவர கல்விக்கேள்விகளில் சிறப்புறுவதை உணரலாம்.

அடுத்து நாம் காணவிருப்பது ஸ்ரீ துர்க்கா பரமேஸ்வரியின் மீதமைந்த, துயர் நீக்கும் உயர் மந்திரமாகும்.

'ஓம் தும் துர்காயை நமஹ'

அர்த்தம் மிகுந்த நேர்த்திக்கடன்கள்

■ பொங்கல் வைப்பதின் நோக்கம், ஒரு விருப்பம் நிறைவேறியதன் வெளிப்பாடேயாகும். மேலும், தெய்வ காரியத்தை மையமாக வைத்து, யாவரும் தெய்வத்தின் குழந்தைகளே என்று உணர்வுப்பூர்வமாகப் பங்கு கொள்வதால், சமூக ஒற்றுமை வளர அது ஒரு காரணமாகிறது. பொங்கல் பொங்கி வழிவது போன்று, வாழ்வில் இனிமை நிறையட்டும் என்ற ஆன்மிக மனோதத்துவத்தின் வெளிப்பாடே இந்நிகழ்வு.

■ அலகு குத்துவது நமது பார்வைக்கு வேண்டுமானால் மிகவும் அதிர்ச்சியைத் தரலாம். ஆனால், சம்பந்தப்பட்டவர்கள் அதை வலியுடன் தாங்கக் கூடிய அவசியத்தின் பின்னால் என்ன காரணம் இருக்க முடியும் என்ற கேள்வி எழலாம். வாழ்வில் நிற்கதியாக நிற்கும் ஒரு குடும்பத்தலைவனின் அல்லது ஒரு தனிமனிதனின் துயரமான காலங்களில், சக மனிதர்களின் அன்பும் ஆதரவும் அற்ற நிலையில், வாழ்வை முடித்துக்கொள்ள நினைக்காமல், ஏதாவதொரு சக்தி நம்மை மீட்காதா? என்ற ஆழ்ந்த மன ஏக்கத்தின் வெளிப்பாடான தமது பிரார்த்தனை நிறைவேறியதன் காரணமே இருக்க முடியும். தொழில் நுட்ப வளர்ச்சியில் முன்னணியில் இருக்கும் மலேசியா, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, மொரீஷியஸ் ஆகிய நாடுகளில் தைப்பூசத் திரு விழாவன்று காவடி, பால்குடம், அலகு குத்துதல் போன்ற சடங்குகள் உண்டு. மலேசியாவின் பினாங்கு மாநிலத்தில் தைப்பூசம் அன்று பொது விடுமுறையாகும்.

■ அடுத்து தீ மிதித்தல் என்ற சடங்கு அம்மனின் திருவிழாவில் பல இடங்களில் பிரசித்தம். தீ மிதித்தலுக்கு முன்பு 21 நாட்களோ, 12 நாட்களோ, அல்லது ஒரு வாரமோ தீ மிதிப்பவர்கள் காலில் செருப்பு அணியக்கூடாது. உணவு, உடை, உறக்கம் ஆகிய அன்றாட வாழ்வு முறைகளிலும் மனதிற்குக் கட்டுப்பட்டான நெறிமுறைகளைப் பழக்கப் படுத்துகின்றனர். அதன் வழியாக உடலும் மனமும் சமச் சீர்மையைப் பெறுகின்றன. குளிப்பது, பேசுவது ஆகிய யாவிலும் பலவிதமான வரைமுறைகள் நடைமுறையிலுள்ளன. தீ மிதித்தலின்போது நமது காலின் கீழ் பகுதிகளில் உள்ள நரம்பு முனைகள் மின்தூண்டுதல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்ற இந்த மந்திரம், சர்வ ரோக நிவாரணியாகச் செயல்படும் சக்திபடைத்த அன்னையின் ஆற்றல் மிக்கதாகும். அதுவும் ராகு காலங்களில் இதன் சக்தி பூரணமாக வெளிப்படும். சகலவித சர்ப்ப, விஷ தோஷங்களையும் இம்மந்திரம் துடைத்தெறியக்கூடியது. உபவாசமிருந்து முறையாக உச்சாடனம் செய்

களைப் பெறுகின்றன.

■ பஞ்சபூத மயமான நமது உடல் பஞ்சபூத சக்திகளின் நேரடித் தொடர்பில் இருப்பது அந்த விரத காலத்தில் மட்டுமே. அதாவது, செருப்பணியாமலிருப்பது நிலத்தின் தொடர்பாகும். தினமும் இருமுறை குளிப்பதும், திரவ ஆகாரங்களே அதிகம் எடுத்துக் கொள்வது நீரின் தொடர்பாகும். காற்று, ஆகாயம் இவையிரண்டும், உண்ணா நோன்பிலும், மவுன விரதத்திலும் அடங்குகிறது.

■ முடியிறக்குதல் (மொட்டை போடுதல்) என்ற விஷயத்தில் பல விதமான காரணகாரிய நுட்பங்கள் அடங்கியுள்ளன. அதை ஒரு புதிய ஆரம்பத்தின், தொடக்கமாகக் கொள்ளலாம். ஒரு குழந்தையின் ஒற்றைப்படை வயதுகளில் முடியிறக்குவது மரபாகும். மயிர்க்கால்களின் உறுதி பலப்படுவது ஒரு காரணமாக இருந்தாலும், சூழ்நிலையில் இருக்கும் தெய்வீகத்தன்மையை மூளையின் நரம்பு இயக்கங்களின் வாயிலாக உடல் முழுவதும் பரவ வழிவகை உண்டாவதே முக்கியக் காரணமாகும். முதலில், முதல் முடி அவரவரது குலதெய்வத்தின் சன்னிதியில் எடுப்பது வழக்கமாகும். ஒருவரது குலதெய்வமாகத் திகழும் தெய்வமூர்த்தமே அவர்களது பூர்வபுண்ணிய பலன்களைக் குறைவின்றித் தரும் சக்தி படைத்ததாகும். பிறகுதான் அவரவரது இஷ்டதெய்வமோ, வழிபடு தெய்வமோ வழிபாட்டில் பங்குபெறுகின்றன. ஒருவரது பிறந்த நேரத்திற்கு உகந்த ஒரு நல்ல நாளில்தான் முடியிறக்கம் செய்ய வேண்டும்.

■ அங்கப்பிரதட்சணம் செய்வது என்பது ஒருவருடைய உடலின் ஆறு ஆதார சக்கரங்களும் ஒரே நேரத்தில் கருவறைக்கருகில் உள்ள சக்தி மண்டலத்துக்குள் பூமி மூலமாகத் தொடர்பு கொள்ளும் நிலையாகும். ஏழாவது சக்கரமான சஹஸ்ராரமோ, கருவறையில் வீற்றிருக்கும் தெய்வ திருஷ்டியில் நேரடியாகப் படக்கூடிய வாய்ப்பைப் பெறுகிறது. ஒரு பொருளின் ஈரத்தன்மையானது அதன் மின் ஈர்ப்புத் திறனை அதிகப்படுத்தக்கூடியதாகும். ஈர உடையிலோ அல்லது ஈர நிலத்திலோ ஒருவர் அங்கப் பிரதட்சணம் வருவதற்கான முக்கியக் காரணம் அதுவேயாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வோர்கள் வாழ்வின் எதிர்மறை அனுபவங்கள் யாவும் அவர் இருக்கும் திசைப்பக்கம் கூட வாராது. செவ்வாய் மற்றும் வெள் ளிக்கிழமைகளில் வரக்கூடிய ராகு காலங்களில், அன்னையின் திருக்கோவிலில் அவள் திரு முன்பு அமர்ந்து 27 அல்லது 108 முறைகள் ஜபம் செய்பவரது வாழ்வில் பூர்வகர்ம தோஷத்தால் வரும் சகல சங்கடங்களும் நிச்சயம் விலகி விடும். கூடுதலாக 54 அல்லது 108 எலுமிச்சம்பழத்தை இந்த மந்திரத்தைச் சொல்லிய படியே, ஒரு சிவப்பு அல்லது மஞ்சள் நூலில் மாலையாகக் கோர்த்து ராகு காலங்களில் தேவியின் திருக்கழுத்தில் செவ்வரளி மாலையுடன் சேர்த்து அணிவித்தால் வம்பு, வழக்குகள் யாவும் வந்த வழியே திரும்பி ஓடியே போய் விடும்.

அடுத்து ஸ்ரீகாளி தேவியின் அம்சத்தை உபாசனை செய்து நலம் பெறும் வகையில் அமைந்த ஒரு மந்திரத்தைக் காணலாம். இது ராகுவின் நட்சத்திரங்களிலும், ராகு காலங்களிலும் பிறந்தவர்க ளுக்கு மிகவும் நலம் புரியும்.

'ஓம் ஸ்ரீ மஹா காளிகாயை நமஹ'

இதைத் தினசரி வழிபாட்டில் பூஜை புனஸ்காரங்களோடு இணைத்துச் சொல்லி வரலாம். அல்லது தனிப்பட்ட வழிபா டாகவும் செய்து வரலாம். புஷ்பம், தூபம், தீபம், நைவேத்தியம், மந்திரம், ஆராதனை என்ற வகையில் வழிபாட்டை அமைத்துக் கொள்ளலாம்.

அன்னை மகாசக்தியின் வழிபாட்டு முறைகளையோ, மந்திரங்க ளையோ சொல்ல முயன்றால் அது கடல்நீரை ஒரு குவளையில் அள்ளுவதாகவே அர்த்தம். எனவே இங்கு நாம் கண்டவற்றை அணுவினும் நுண்ணியதாகவே கருத வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

17. தொல்லைகளை நீக்கும் பிள்ளையார் மந்திரங்கள்

நாம் மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளிலும் வெற்றி காணவே விரும்புகிறோம். இதில் எவரும் விதி விலக்கல்ல. அதற்காக இறைவன் துணையை நாடுவது பொதுவானது. அவ்வாறு காரியவெற்றிக்கு உதவும் வழிபாடுகளின் முதன்மையானது பிள்ளையார் வழிபாடு. அதனால் தான் எந்தச் செயலையும் 'பிள்ளையார் சுழி' போட்டு தொடங்குவதுண்டு. நமது திருக்கோவில் வழிபாடுகள் யாவுமே பிள்ளையாரில் இருந்தே தொடக்கம் பெறுகின்றன.

நமது நாட்டில் அதிகமாகத் தென்படும் தெய்வத் திருவுருவம் அநேகமாக பிள்ளையாராகத்தான் இருக்கும். அரசமரம், ஆலமரம், ஆற்றங்கரை, தெருமுனைகள், தெருக்களின் சந்திப்புகள், வீடுகளின் முன்புறங்கள், வியாபார ஸ்தலங்களின் வரவேற்பறைகள் ஆகிய எல்லா இடங்களிலும் காட்சி தருவது, விக்னங்களை விலக்கும் விநாயகரே !.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நமது முயற்சிகளின் வெற்றிகளைத் தவறாமல் தரும் முழுமுதற் கடவுளாக வணங்கப்படுகிறார்.

இங்கு நாம் பிள்ளையாருக்குரிய ஒரு சில முக்கியமான மந்திரங்கள் சார்ந்த வழிபாடுகளைக் காண இருக்கிறோம்.

காரியத்தொடக்கத்தில்சொல்லும் மந்திரம்

கணபதிக்குரிய மந்திரங்களில் **'ஓம் கம் கணபதயே நம'** என்ற மந்திரம் மிகவும் முக்கியமாகும். இந்த மந்திரம் கணபதி உபநிஷத்தில் வருகிறது.

அரையணாவில் பிள்ளையார்...

உலக நாடுகள் பலவற்றில் பிள்ளையார் வழிபாடு உள்ளது. குறிப்பாக பத்தாம் நூற்றாண்டிலேயே பர்மா, வியட்நாம், கம்போடியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் கணபதி வழிபாடு இருந்துள்ளது. மேலும், திபெத் நாட்டில் தாந்திரீக பூஜைகளுக்குரிய 'தாந்த்ரிக் கணேஷ்' என்ற பிள்ளையார் வழிபாடு உண்டு. ஜப்பான் நாட்டில் மட்டும் இருநூற்றுக்கும் மேற்பட்ட பிள்ளையார் கோவில்கள் உள்ளன. மேலும் மேற்கத்திய நாடுகள் பலவற்றிலும், நமது மக்களால் விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்பட்டு வருகிறது.

நம்மை ஆண்ட ஆங்கிலேயர்கள் 1839-ம் வருடத்தைய 'அரையணா காசில்' பிள்ளையாரின் படத்தை வெளியிட்டு பெருமைப் படுத்தியுள்ளார்கள்.

அதிக மதிப்பெண் பெற உதவும் மந்திரம்

மாணவ-மாணவியர்களின் ஞாபக சக்தி மேம்படவும், தேர்வுகளில் உயர்ந்த மதிப்பெண்கள் பெறவும் உதவ எளிய மந்திரம் ஒன்று உள்ளது. அது:-

'ஓம் ஸ்ரீ கணேசாய நமஹ'

தேர்வு காலங்களில் விநாயகரின் திருவுருவின் முன்பு, நெய் தீபமேற்றி, மானசீகமாக 27 முறைகள் இந்த மந்திரத்தை உச்சாடனம் செய்துவிட்டு ஏதாவது ஒரு இனிப்புப் பண்டத்தைப் பிரசாதமாக சாப்பிட்டுவிட்டுச் சென்றால் இறை அருளால் அதிக மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெறலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரயாணங்களின் தொடக்கத்திலும், கல்வி கற்க தொடங்கும் போதும், நம்முடைய சகல தொழில் ஆரம்பத்திலும், நம் வீட்டு சகல வித விசேஷங்களின் தொடக்கத்திலும் இந்த மந்தி ரத்தைப் பிள்ளையார் வழிபாட்டின்போது நிச்சயமாக உச்சரிக்க வேண்டும்.

நன்றாக வேரூன்றும் அருகம்புல்லை விநாயகருக்கு மாலையாகச் சூட்டினால், அந்த அருகு எவ்வாறு தழைத்து வளர்கிறதோ, அதே போல நமது பிரார்த்தனையின் பலனும் நமக்கு நல்லவிதமாகக் கிடைக்கப்பெறும் என்பது உறுதியாகும்.

ஒவ்வொரு சங்கடஹர சதுர்த்தியன்றும் பிள்ளையார் சன்னிதியில் மேற்கண்ட மந் திரத்தை 108 முறைகள் உச்சா டனம் செய்து வந்தால் நமது சங்கடங்கள் நிவர்த்தியாவது நிச்சயம்.

தடைகள் விலக மந்திரம்

நம்மில் பலருக்கு ஏதாவ தொரு முக்கியமான காரியத் திற்காக வெளியில் செல்லும் போதே, அந்தக் காரிய வெற்றி குறித்து சந்தேகம் வரும்படி யான சம்பவங்களோ, சூழ் நிலைகளோ அமைந்து மனதில் சோர்வும், சலிப்பும் ஏற்படுத் தும். அது போன்ற தருணங்க ளில் கீழ்வரும் கணநாதரின் மந்திரத்தை அவரது திருமுன்பு சொல் லியபடியே சிதறு தேங்காய் உடைத்தால், அது சிதறுவது போலக் காரிய விக்கினங்களும் சிதறி விலகியோடும்.

அதற்கான மந்திரம், **'ஓம் விக்ன நாசனாய நமஹ'** என்பதாகும்.

நினைத்தது நடைபெற...

பல தருணங்களில் நாம் நன்கு திட்டமிட்டுச் செய்யும் காரி யங்கள் கூட தடை, தாமதங்களால் மனச் சங்கடங்களை உண் டாக்கும். எல்லாவழிகளும் அடைபட்டு, உதவி செய்ய ஒருவரும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இனி இல்லை என்ற மன அழுத்தம் உண்டாகும் தருணங்களில் நமக்கு உதவக் கூடிய ஒரு மந்திரத்தை 'ஸ்ரீ கணேச புராணம்' குறிப்பிட்டுக் காட்டுகிறது. அந்த மந்திரம்:-

'ஓம் வக்ர துண்டாய ஹும்'.

சூழ்நிலைகளில் உள்ள எதிர்மறை சக்திகளை விலக்கக் கூடியதும், விஷயங்கள் ஒருமுகமாகச் செல்லக்கூடிய அருள் வழிப்பாதையைக்

பிள்ளையாரின் திருநாமங்கள்

மிகச் சுலபமான வழிபாட்டு முறைகளைக் கொண்ட பிள்ளையாருக்கு பல்வேறு வகையான திருநாமங்களும், திருத்தோற்றங்களும் உண்டு. அவற்றில் சந்தான கணபதி, சுவர்ண கணபதி, நவநீத கணபதி, ஹரித்ரா கணபதி, மஹா கணபதி, உச்சிஷ்ட கணபதி ஆகியவை குறிப்பிடத் தக்கவையாகும்.

அவருக்கு கணாதிபதி, கணேசன், விக்னேஷ்வரன், பூதநாதன், கஜமுகன், விநாயகன், லம்போதரன் என்று பல்வேறு விதமான திரு நாமங்களும் உண்டு.

சித்தி, புத்தி என இரு தேவியர்களும், சேமம், லாபம் என்ற இரு புதல்வர்களும் உண்டு.

பிரம்ம வைவர்த்த புராணத்தில் உள்ள கணேச காண்டம், பிருகு முனிவரின் பெயரால் வழங்கப்படும் பார்க்கவ புராணம், கணேச கல்பம், கணேச சாரசந்திரிகா, முத்கல புராணம், ஹேரம்ப உபநிஷத் உள்ளிட்ட பல நூல்களில் பிள்ளையாரின் மகத்துவம் பற்றி நாம் அறியப் பல தகவல்கள் கொட்டிக் கிடக்கின்றன.

ஆத்திச்சூடி தந்த அவ்வைப்பிராட்டியார் ஒரு மிகச் சிறந்த கணபதி உபாசகி ஆவார். கணபதி அருளின் மகத்துவத்தால் தமது இனிய இளமையை, முதிர்ந்த முதுமையாக மாற்றியருளப் பெற்றவராவார். ஞானத் திருவுருவம் பிள்ளையாரைத் தமது 'ஆக்ஞா சக்ர' மையத்தில் தியானித்து மிகச்சிறந்த பக்திஞான யோகரத்தினமான 'விநாயகர் அகவல்' தந்தவர் அவ்வைபிராட்டி. சகல ஞான சித்திப்ராப்தம் ஏற்பட வேண்டுமானால் விநாயகர் அகவல் பாராயணம் செய்து வந்தால் போதும் என்பது, காஞ்சி மகா பெரியவரின் உறுதியான கருத்தாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விநாயகர் வழிபாடு

எல்லா இடங்களிலும் காணும் பிள்ளையாரின் திருமூர்த்தத்திற்கு, பிரதிஷ்டா நியதி நியமனங்கள் எதுவும் இல்லாமலேயே, அதன் பிரத்தியேகமான வடிவமைப்பின் காரணமாக, பிராண சக்தியைத் தாமாகவே கிரகித்துக் கொண்டு, அருள் புரியும் மகத்துவம் உண்டு என்பது மகான்களின் கருத்தாகும்.

அவ்வடிவம் ஓம்காரத்தின் ஸ்தூல வடிவமேயாகும். ஒரு பிள்ளையாரின் திருமேனி உள்ள அரச மரத்தின் நிழல் எதுவரை விழுகிறதோ, அதுவரையில் பிள்ளையாரின் அருள் வட்டம் விரிந்து, வருகின்ற யாவருக்கும் தன்னுடைய இன்னருளைப் பொழிகிறது என்பது பெரும்பாலும் வெளியில் தெரியாத தெய்வீக உண்மையாகும்.

பிரசித்தி பெற்ற ஷண்மதங்களில் பிள்ளையாரை வழிபடும் 'காணபத்யம்' என்ற முறையும் ஒன்றாகும். அவர்கள் கணபதியையே முழுமுதற் கடவுளாக வழிபடுவார்கள். அந்த கணபதியின் பீஜாட்சரம் 'கம்' என்பதாகும்.

நாம் சாதாரணமாகப் பேச்சு வழக்கில் உபயோகப்படுத்தக் கூடிய 'கம்மென்று நீ இருந்தால் போதும்' என்பதிலுள்ள 'கம்' என்ற பதமே கணபதிக்கு உரிய பீஜாட்சரம் ஆகும். மகாராஷ்டிரா மாநிலத்தில்தான், காணபத்யம் அதிகமாக நடைமுறையில் இருந்து வருகிறது. ஆவணி மாதம் வரும் விநாயக சதுர்த்தி, அங்கு 'கணேஷ் சதுர்த்தி' என்ற பெயரில் மிகவும் பிரசித்தியுடன் கொண்டாடப்படுகிறது.

காட்டக்கூடியதுமான மகத்தான சக்திநிலையின் நுட்பமான மந்திர வடிவம் இது.

பக்தி நிறைந்த இதயத்துடன் பிள்ளையாரின் சன்னிதியில் அமர்ந்து இந்த மந்திரத்தை 108 முறைகள் உச்சாடனம் செய்து, நமது பிரார்த்தனையைச் சமர்ப்பித்தால் அந்தப் பானை வயிற்று யானை முகத்தோன் அனைத்தையும் நாம் நினைத்தபடியே நடத்தி வைப்பான்.

மன அமைதிக்கு வழிகாட்டும் மந்திரம்

மனதின் சமநிலையையும், அமைதியையும் ஸ்திரப்படுத்த உதவும் ஒரு இனிய மந்திரம், **'ஓம் சுமுகாய நமஹ'** என்பதாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எப்போதெல்லாம் மனம் தமது அமைதி நிலையை இழக்கிறதோ, அப்போதெல்லாம் இம்மந்திரத்தை மானசீகமாக ஸ்ரீ விநாயகரின் திருவுருவத்தோடு நினைத்து வந்தாலே மனம் அமைதி பெறும் என்பது திண்ணம்.

செல்வ வளம் பெருக...

செல்வ வளமும், உலகியல் நலமும், ஆன்மிக பலமும் தரவல்ல ஒரு முக்கியமான மந்திரம், '**ஓம் ஹ்ரீம் ஸ்ரீம் க்லீம் நமோ பகவதே கஜானனாய**' என்பதாகும்.

இம்மந்திரத்தை ஒரு வளர்பிறை செவ்வாய்க்கிழமையன்று சூரிய உதயத்திற்கு முன்பாக ஆரம்பித்துச் செய்ய வேண்டும். தினமும், சூரிய உதயத்திற்கு முன்பாகவே 108 முறைகள் 108 நாட்களுக்குச் செய்து வந்தால் நம்மை நாடி வந்து நலம் பல புரியும் உலகியல் வெற்றிகள் நம்மை நாடித் தேடி ஓடி வருவது உறுதி.

எளிய மனமும், தூய இதயமும், பிறர் துன்ப துயரங்களைத் தமது துன்பமாகவே எண்ணி, உதவும் நல்ல மனம் படைத்தவர்களே, இக் கலியுகத்தில் இறையருளை நேருக்கு நேர் உணரக் கூடிய பாக்கியம் பெற்றவர்களாவார்கள். 'பிடித்து வைத்தால் பிள்ளையார்' என்ற மிக எளிய தெய்வீக வெளிப்பாடு உடைய பிள்ளையார், பிள்ளை மனம் கொண்ட வெள்ளை உள்ளத்தவர்களின் வேண்டுகோளினை உடனே ஏற்று அருள்புரிவார் என்பது சர்வ நிச்சயமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



18. அறுபடை ஆண்டவனின் அற்புத மந்திரங்கள்

அழகன் என்றால் முருகன் என்று பொருள் என்பதை தமிழ்கூறு நல்லுலகம் நன்கறியும். உருவான ஜோதியில் திருவான முருகன், அருளில் கற்பகத் தருவான பெருமையைப் பல நூல்கள் வியப்புடன் விவரிக்கின்றன. மற்றவை தவிர்த்து 'கந்தனைக் கற்றவர் வாழ்வில் பெற்றவை யாவும், மற்றவருக்கும் நற்றுணையாகும்' என்பதே கந்தனடியார்களின் வாழ்வியல் மைய நோக்காக பரவலாகக் காணப்பட்டு வருகிறது.

அன்றைய அகத்தியர் முதல் இன்றைய அறுபடை பக்தர் வரையிலுள்ள யாவரும், அடி முடியறியா ஜோதி வடிவினனின் அறுகதிர் வடிவேலனது இன்னருள் பொழியும் தண்மலர்த் தாமரைப் பொற்பாதங்களையே வேண்டி விரும்பி, வணங்கி வழிபட்டு வாழ்வெனும் பெருவழியில் பக்தி நடம் புரிந்து வருகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'முருகனை மிஞ்சிய தெய்வமில்லை, மிளகை மிஞ்சிய வைத்தியமில்லை' என்பது முருகனின் புகழ்பாடும் ஒரு எளிய சொல் வழக்காகும். பார் புகழ் பகவத் கீதையின் மாதவனும் '**ஸேநாநீநாம் அஹம் ஸ்கந்த**' (படைத் தலைவர்களில் நான் கந்தன்) என்று தனது மருகனாம் முருகனை பெருமைப்படுத்துகிறார். 'குன்றிருக்கும் இடமெல்லாம் குமரனிருக்கும் இடம்' என்ற வழக்குக்கேற்ப குமரனாம் முருகன் குன்றுதோராடும் தனிப்பெரும் தன்மையை எய்தியவன். தொல்காப்பியம் கூறும் குறிஞ்சி நிலக் கடவுளாக போற்றப்படும் பெருமை பெற்றவன். குறிஞ்சி– மலையும் மலை சார்ந்த இடமுமாகும்.

குமரக்கடவுளாகிய முருகனையே முழுமுதற்கடவுளாக எண்ணி வழிபடும் பக்தி நெறிமுறை 'கௌமாரம்' ஆகும். சரவணப் பொய்கையில் உதித்ததனால் சரவணனாகவும், கார்த்திகை பெண்களால் வளர்க்கப்பட்டதால் கார்த்திகேயனாகவும், கங்கையால் தாங்கப்பட்டதால் காங்கேயன் எனவும் பல திருநாமங்கள் முருகப்பெருமானுக்கு உண்டு.

உலக நாடுகள் பலவற்றிலும் முருகர் வழிபாடு இருக்கிறது. அதிலும், தென்கிழக்காசிய நாடுகளில் முருகர் வழிபாடு மிகவும் பிரசித்தம். குறிப்பாக மலேசியாவிலுள்ள பத்து மலை முருகன் கோவில் தைப்பூசத் திருவிழா வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. காவடி, கரகாட்டம், அலகு குத்துதல், திருமுடி காணிக்கை என்று பல்வேறு வகைகளில், இறையின் வெளிப்பாட்டை உய்த்துணர, பக்தியின்வழி மனம் கனிந்து வழிபாடுகளைச் சமர்ப்பித்து, வாழ்வில் பெருநலன்களைப் பெற்று மகிழ்கிறார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அழகன் முருகனை வழிபட சஷ்டி திதியும், செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளும், கார்த்திகை மற்றும் விசாகம் நட்சத்திரங்களும் மிகவும் உகந்தவையாகும். விசாகம் ஆறு நட்சத்திரங்களின் தொகுப்பு ஆகும். வைகாசி விசாகம் குமரனின் திருஅவதார நட்சத்திரமாகும். சிவனாம் சூரியன் கிருத்திகையிலும், அம்பிகையாம் சந்திரன் விசாகத்திலும் அமைந்த பவுர்ணமி புண்ணிய தினமே வைகாசி விசாகமாகும். விசாகம், குரு பகவானின் நட்சத்திரம் என்பது குறிப்பிடத்தக்கது.

அறுபடை வீடுகளும்... ஆறு சக்கரங்களும்...

ஓம்காரத்தின் சூட்சும உட்பொருளை பிரம்மதேவருக்கு கர்ணாம்ருதமாகத் தந்தருள் செய்த சிவசுதனின் மகத்துவம் சிவப்பரம் பொருளுக்கும் எட்டுகிறது. ஓம்கார ரூபனே அதுபற்றிச் சொல்லும் இனிமையை அனுபவிக்க வேண்டியும், குழலினும், யாழினும் இனிய திருவாய் மொழியுடைய குமராம்ருதம் பருகவேண்டியும், தம்மின் தம்மக்கள் உயர்வுகாணும் தந்தையின் உள்ளத்தோடும், அதைத் தோடுடைய செவியனாக ஓம்காரக் கர்ணாம்ருத ஆனந்த ரசத்தைப் பருகவும் திருவுளம் பூண்டு, உபதேசத் திருவிளையாடலைச் சிவம் நடத்தியருள்கிறது.

தன் தொடர்ச்சியாக நந்திதேவருக்கு ஓம்காரத் தத்துவம் உபதேசமாகிறது. நந்திதேவரின் மூலம் அது சிவயோக முனிவருக்குக் கிட்டுகிறது. அவரிடமிருந்து பதஞ்சலி முனிக்குக் கிடைக்கிறது. பின்பு திருமூலர் உள்ளிட்ட சித்தர்கள் என அது மிகப்பெரிய வட்டமாகி, திருக்கயிலாய பாரம்பரியம் என்று விரிகிறது. முருகனே மூலப்பரம் பொருள் என்னும் கவுமார தத்துவத்தின் ஆதிகுரு சாட்சாத் அந்த முருகப்பெருமானே ஆவான்.

ஆயிரக்கணக்கான ஸ்தலங்களில் அவன் எழுந்தருளியிருந்தாலும் அறுபடை வீடுகளே அவனுக்குப் பிரதானம். அந்த அறுபடை வீடுகளும் மனித உடலில் உள்ள ஆறு ஆதார சக்கரங்களைக் குறிப்பிடுவதாக ஒரு ஆன்மிக யோக ஞானக் கண்ணோட்டம் உண்டு. மூலாதாரச் சக்கரமாகத் திருப்பரங்குன்றமும், ஸ்வாதிஷ்டானமாகத் திருச்செந்தூரும், மணிபூரகமாகப் பழனியும், அனாஹதமாகச் சுவாமி மலையும், விசுத்தியாகத் திருத்தணிகையும், ஆஜ்ஞா சக்கரமாகப் பழமுதிர்சோலையும் குறிப்பிடப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெரும்புலவர் நக்கீரர் தமது திருமுருகாற்றுப்படையில் முருகனின் ஆறு முக்கியமான வழிபடும் தலங்களைப் பற்றி குறிப்பிட்டு, பாட்டுடைத் தலைவனான முருகனின் திருவருளை நாட நம்மை வழிப்படுத்துகிறார். அவ்வாறு நம்மை ஆற்றுப்படுத்தும் விதமாக (வழிப்படுத்தும் விதமாக) அமைந்ததே திருமுருகாற்றுப்படையாகும். ஆறுவித ஆற்றுப்படை வீடுகள் என்பதே அறுபடைவீடுகள் என்றானது. ஸ்கந்தன் என்ற பதம் இணைந்தவன் என்றே பொருள் தரும். சிவமான தமது தந்தையின் நெற்றிக் கண்களில் உதித்த ஆறு பொறிகளின் ஏக ஜோதி ஸ்வரூபமாக இணைந்தவன் என்பதால் இப்பெயர் வந்தது.

முருகப்பெருமான் புகழ்பாடும் புராணம் ஸ்கந்த புராணம். அவனது லோகம் ஸ்கந்த லோகம். அவனது விரதம் கந்த சஷ்டி விரதம். அவன் தம் தாய் தந்தையரோடு இருக்கும் திருமூர்த்த ரூபம் சோமாஸ்கந்தம் என்பதாகும்.

முருகனின் அருளைத் தவறாது தருவதில் **'ஓம் ஸரவணபவ'** என்ற ஷடாட்சரம் மிக முக்கியமான இடத்தைப் பெறுகிறது. வைகாசி விசாக நாளன்று இம்மந்திரத்தை முருகனது சன்னிதியில் இருந்து ஆரம்பித்து ஜபம் செய்து வரலாம். செல்வம், கல்வி, முக்தி, எதிரிகளை வெல்லுதல், ஆரோக்கியம், பயமின்மை ஆகிய அறுவகை வரங்களோடு ஞானமும், இக பர சுக சவுக்கியங்களும் பெற்று உலகில் உயர்வுற, வாழ்வு நலம் அடைய விழைவோர் உச்சரிக்க வேண்டிய நன்மந்திரம் இதுவாகும்.

மேலும், 'ஸ்கந்த குரு கவசம்' என்ற மகத்தான ஸ்தோத்திரம் வாயிலாக, ஓம் ஸ்ரீ ஸ்கந்தாஸ்ரம் ஸ்ரீமத் சாந்தானந்த ஸ்வாமிகளால் நமக்கு உபதேசமாகவே தரப்பட்ட ஒரு மகத்தான மந்திரத்தை இங்குக் காண உள்ளோம். இந்த மந்திரத்தை கந்தனுக்குரிய ஒரு நாளில் அவனது திருக்கோவிலில் இருந்து தொடக்கம் செய்து கொள்ளலாம். இம்மந்திரம் மும்மலங்களையும் அகற்றி சித்த சுத்தியையும், ஆத்ம ஞானத்தையும், இக, பர நலன்களையும் ஒருங்கே தர வல்லது.

'ஓம் ஸௌம் ஸரவணபவ.. ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் க்லௌம் ஸௌம் நமஹ'

– என்ற மந்திரமே அதுவாகும்.

நமக்கு சமீப காலத்தைய மகான் ஒருவரால் தரப்பட்ட இந்த மந்திரமானது கலியுகத்தின் நம்ப முடியாத அதிசயங்களில் ஒன்றாகும்.

காரணம், ஒரு மந்திரத்தை குருமுக உபதேசம் பெற இயலாத சூழ்நிலையின் நிர்பந்தங்கள் பலரைத் தவிக்கவைக்கும். அதே சம

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யம் அவர்களது மனக்குறை நீங்கும் வண்ணமாக உபதேசமாகவே அம்மகானால் அருளப்பட்ட இம்மந்திரம் ஒப்புயர்வற்ற ரத்தினம் போன்றதாகும் என்றால் அது மிகையன்று.

மேலும், மந்திரங்கள் ப்ரவ்ருத்தி வகையைச் சேர்ந்ததானாலும், நிவ்ருத்தி வகையைச் சேர்ந்ததென்றாலும் அதற்கே உரிய ஒலிய மைப்பின் ஏற்ற இறக்கங்களோடு அதைச் சரியான உயிராற்றலோடு, உச்சாடனம் வாயிலாக ஒலி வடிவமாக மாற்றும்போது, அவை புறவெளியிலும் அதிசூட்சும அலையியக்க வடிவைப் பெறுகின்றன. ஒரு பொருளோ, அல்லது ஒரு குறிப்பிட்ட செயலோ வெளிப் படுத்தும் அலையியக்க வடிவம் சூட்சுமமாக இருந்தாலும் ஸ்தூலப் பொருட்களையும் அது பாதிக்கிறது என்றே அறிவியலின் ஒலியியல் விஞ்ஞானம் ஆய்வுகளின் மூலம் உறுதி செய்கிறது.

ஒலியின் அலைவடிவம் 20 ஹெர்ட்ஸ் என்ற அளவுக்கு கீழே போனாலும், அல்லது 20,000 ஹெர்ட்ஸ் என்ற அளவுக்கு மேற்பட் டாலும் நம்முடைய காதுகளுக்கு அவை எட்டாது. நமது மகரிஷி

பக்தர்களைக் காக்கும் கந்தசஷ்டி கவசம்

முருகனைக் குறித்துத் துதிக்கப்படும் துதிகளில் பிரசித்தி பெற்றது ஸ்கந்த சஷ்டி கவசமாகும். ஸ்ரீ தேவராய சுவாமிகளால் இயற்றப்பட்ட இந்த ஸ்துதியின் அமைப்பால் உடல், மனம் ஆன்மா என்ற மூன்று நிலைகளிலும், ஆன்மிக அலையியக்கப் பாதுகாப்பு வளையத்தை அமைத்து வைக்கக் கூடியது. காரணம் முருக பக்தி யில் முதிர்ந்த ஞானக் கவியாக இருந்த அவரது உடற்பிணியின் கடும் சிரமம் விலக வேண்டி முருகனின் திருவருளை வேண்டிப் பிரார்த்திக்கும் முகமாக இது அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், உலகோர் யாவருக்கும் பொருந்தும் விதமாகவே அவரால் அமைத் தருளப்பட்டுள்ளது.

நாம் வழக்கமாகக் கேட்கும் கந்த சஷ்டி கவசம் திருச்செந்தூர் முருகனின் மீதானதாகும். ஆனால், முருகனது அறுபடை வீடு களுக்கும் சஷ்டி கவச ஸ்தோத்திரங்களை அவர் தந்துள்ளார். கலியின் விபரீதமான உடல், மன சங்கடங்களுக்கு மாற்றுவழி மருத்துவமாகவே அவரது கவசங்கள் அமைக்கப்பட்டுள்ளது. பயன் படுத்திப் பயன்பெறுவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கள் மந்திர வடிவங்களை அமைத்த விதத்தில் சர்வ நிச்சயமாக ஒலியியல் நுட்பம் அடங்கியுள்ளது என்பதில் நமக்கு யாதொரு சந்தேகமுமில்லை.

சந்தான பாக்கியத்தைப் பெற விரும்பிய தம்பதியர் சஷ்டி விரதம் அனுசரிக்கும் வழக்கம் உண்டு. அவர்கள் கீழ்கண்ட ஸ்துதியைத் தினமும் 6 முறையோ 12 முறையோ உச்சாடனம் செய்து வந்தால் சத் சந்தான பாக்கியம் கிடைக்கப் பெறுவார்கள்.

'அருவமும் உருவமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரம்மமாய் நின்ற ஜோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரெண்டும் கொண்டே
ஒரு திருமுருகன் வந்து ஆங்கு உதித்தனன் உலகம் உய்ய..'

முருகனது திருவருள் விலாசத்தை எவ்வளவு வேண்டுமானாலும் சொல்லிக்கொண்டே போகலாம். ஞானமும், யோகமும், வீரமும், அழகும் கலந்த அந்தக் கந்தவேல் மயில்வாஹனத் திருமுருகன் வேண்டியோர் வேண்டியதைத் தருகின்ற கற்பகத் தரு என்பதை எவ்விடத்தும் உள்ள அவனது பக்தர்கள் உள்ளுணர்ந்துள்ளார்கள். அந்தக் கந்தவேல் அருளால் யாவும் மங்களமாக அமையட்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



19. ஆதவனின் அருளைத் தரும் மந்திரங்கள்

உதிக்கின்ற செங்கதிரோன் என்று கவியுவமையாகக் கூறும் பெருமை படைத்த சூரியனின் அருட்பார்வையாம் கதிரொளியை, ஒருசில நாட்கள் மட்டும் நமது நிலவுலகு பெறாமலிருந்தால்...? அதனால் வரும் குழப்பங்களை நம்மை விடவும் நம்மைச் சுற்றியுள்ள மற்ற உயிர்வாழ் இனங்களே நன்கு உணரும். அதிகாலை முதல் அந்திமாலை வரையில் தன்னளவில் விடுமுறையற்ற நித்ய சேவையைப் பார் முழுவதும் தருவதை, உலகோர் யாவரும் தினமும் காண நித்தமும் ஒளிவலம் வருவதை மறுப்பவரும், வெறுப்பவரும் எவருமில்லை.

யாவருக்கும் பிரத்யட்ச அனுபவ வடிவமாக ஒளிரும் சூரியனை எல்லாச் சமயங்களும் தெய்வமாகவே போற்றிப் புகழ்கின்றன. எல்லா நாடுகளிலும் சூரிய வழிபாடு ஏதாவதொரு வடிவில் அவரவர் வாழ்வியல் நாகரிக மரபு நெறிமுறைகளுக்கு உட்பட்டு இன்றளவும் இருந்துகொண்டுதான் உள்ளது.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

இயற்கையாம் இறையுணர்வோடு ஒருவரது தனிப்பட்ட தன்னுணர்வையும் சேர்த்தோ, அல்லது பிரித்தோ இறையையே தன் மயமாக உள்ளுணரும் தன்மையே இந்து மதத்தின் மையமாகும். அப்படி அந்த மேலான தத்துவத்தை நேரடியாகவே அணுகும் முறைகளே வேதகாலம் தொட்டு இருந்து வந்தன. ஆதிசங்கரர்தான் அதை ஆறு மையக்கருத்துக்களின் மீது அமைத்து 'ஷண்மதங்கள்' என்று ஸ்தாபனம் செய்து கலியுகத்திற்கேற்ற நடைமுறை வகைப் படுத்தி அருளினார். அந்த ஆறு நெறிமுறைகளில் ஆறாவதாக வருவது சூரியனையே முழுமுதற்கடவுளாக எண்ணி வழிபடும் 'சௌரம்' என்னும் வழிபாட்டு முறையாகும்.

இதிகாச, புராணங்களில் சூரியன்

விஸ்வாமித்ர மகரிஷியால் தரப்பட்ட காயத்ரி மந்திரமானது 'மந்திரங்களின் தாய்' என்றே போற்றப்படுகிறது. அது சூரியனுக்கு மிக உகந்ததாகக் கருதப்படுகிறது. ஸ்ரீமத் ராமாயணத்தின் நாயகனான ராமன் சூரிய வம்சத்தவன். அவனது குல தேவதா மூர்த்தமும் சூரியனே. அந்தச் சூரியனைக் குறித்தே, அகஸ்திய மாமுனிவரால் ஸ்ரீராமனுக்கு உபதேசமாக அருளப்பட்ட, 'ஆதித்ய ஹ்ருதய ஸ்தோத்திர'த்தின் மகிமையால் ராவணனை வெல்ல முடிந்தது.

மகாபாரதத்தில் பாண்டவர்களின் வனவாச காலத்தில் திரவுபதிக்கு அள்ள அள்ளக் குறையாத அட்சயப் பாத்திரத்தைத் தந்ததும் சூரியனே. உலகப் புகழ்பெற்ற சூரிய நமஸ்காரத்தில் 12 விதமான செய்முறைகள் அமைந்துள்ளன. அவை உடல், மனம், ஆன்மா என்ற மூன்று நிலைகளிலும் தருகின்ற பலன்களை, நம் நாட்டவர் அல்லாது மேலை நாட்டவர்களும் உணர்ந்து போற்றுகின்றனர். நம்முடைய யோகப் பயிற்சிகளிலும் அது முதலிடம் வகிக்கிறது.

ஜோதிட ரீதியாக சூரியன், ஒரு ராசியைக் கடக்க ஒரு மாதம் எடுத்துக் கொள்கிறது. அது இருக்கும் ராசியே அந்த மாதமாகக் கருதப்படுகிறது. மேஷமாகிய முதல் ராசியின் தொடக்கப் புள்ளியில் அது நுழையும்போது தமிழ் வருடப் பிறப்பாக நாம் கொண்டாடுகிறோம்.

சிம்ம ராசியில் நுழையும்போது ஆவணி மாதமாகவும், மகர ராசிக்குள் நுழையும்போது தை மாதமாகவும் நம்மால் அனுசரிக்கப் படுகிறது. உத்தராயணம், தட்சிணாயனம் ஆகிய இரு நிலைகளும் சூரியனை மையமாக வைத்தே நடைமுறைப்படுத்தப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பண்டைய எகிப்தியர்கள் சூரியக்கடவுளை 'ரா' என்று வழங்கி வந்தனர். எகிப்திய அரசர்களும், 'சூரியனின் பிள்ளை' என்று தங்களுக்கு பட்டம் சூட்டிக்கொண்டதும் உண்டு. ரோமானியர்கள் சூரியனை 'அப்பல்லோ' என்ற பெயரால் வணங்கி வழிபட்டு வந்தனர். உலகநாடுகள் பலவற்றிலும் சூரிய வழிபாடு உண்டு என்பதை பலநூல்களும் புராதனமான சின்னங்களும், கலைநயமிக்க சிலை வடிவங்களும் எடுத்துக் காட்டுகின்றன. இந்தியாவின் வட மாநிலமான ஒடிசாவில் உள்ள 'கொனார்க்' சிற்பக் கலைக் கோவில் சூரியனுக்காக அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆலயம் கி.பி.1250-களில் நரசிங்கதேவன் என்ற மன்னனால் அமைக்கப்பட்டதாகும். இன்னும் பல இடங்களில் உள்ள சூரியக் கோவில்கள் அன்னியர்களது படையெடுப்புகளால் அழிக்கப்பட்டு விட்டன. நம்முடைய நான்கு வேதங்களும் சூரியனின் மகாத்மியத்தை எடுத்துக்காட்டுகின்றன. ரிக் வேதம் சூரியனை 'உதய



ஜோதி' என்று கூறுகிறது. யஜூர் வேதம் 'ஒளியை உண்டாக்குபவன்' என்கிறது. சாம வேதமோ 'உலகெங்கும் ஒளிர்ந்து ஒளி தருபவன்' என்கிறது. அதர்வண வேதம் சூரியனை 'இறைவனின் கண்' என்று கூறுகிறது. ஆகம நூல்களோ, சூரியன் சிவபெருமானின் வலது கண்ணாக இருப்பதாகக் குறிப்பிடுகிறது. சூரிய மண்டலத்தின் நடுநாயகமாக சிவம் விளங்குவதால் சூரியன், சிவசூரியனாகவும் வர்ணிக்கப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருமலை திருவேங்கடவன், சூரியனுக்கு உகந்த ரத சப்தமியன்று, சூரியப் பிரபையில் ஆரம்பித்து, சந்திரப்பிரபை வரையில் ஏழுவித வாகனங்களில் பக்தர்களுக்குத் தரிசனம் தரும் அழகை ஒரு நாள் பிரம்மோற்சவம் என்றே சுவையாகக் குறிப்பிடுவார்கள். சூரியநாராயணர் என்றும் கதிரவனைப் போற்றிப் பணிவார்கள் அடியவர் பெருமக்கள். 'காய் கதிர்ச் செல்வனே கள்வனோ என் கணவன்' என்று சங்ககால கண்ணகி கேட்டதையும், பிரத்தியட்ச தெய்வமான கதிரவனும் அதை மறுத்து அசரீரியாக 'நின் கணவன் கள்வனல்லன்' என்று சான்றுரைத்ததையும் இளங்கோவடிகள், தமது சிலப்பதிகாரத்தில் குறிப்பிட்டுக் காட்டுகிறார். அத்தகைய சிறப்பு வாய்ந்த ஆதவனின் அருள் தரும் மந்திரங்கள் சிலவற்றை இங்குக் காணலாம்.

'ஓம் ஆதித்யாய நம' – என்று நாம் செய்யும் ஜபம், நமது ஆன்மப் பிரகாசத்தைத் தூண்டி அதன் வெளிப்பாட்டை நமது முகத்திலும் வெளிப்படுத்தவல்ல சக்தி படைத்ததாகும். ஞாயிறு அன்று காலையில் சூரிய ஹோரையில் இதை *108* முறைகள் கிழக்கு நோக்கி ஜபம் செய்துவந்தால் முகம் பொலிவு பெற்றதாக அமையும். சுறுசுறுப்பும், மன எழுச்சியும் ஓங்கச் செய்து ஒருவரின் உள்ளொளியை கூட்டக்கூடிய மகத்தான மந்திரம் இதுவாகும்.

'ஓம் பாஸ்கராய நம' – என்ற மந்திரமோ நமது கண் பார்வையில் உள்ள குறைபாடுகளைக் களையக்கூடிய தன்மை பெற்றதாகும். நமது பார்வையை அகமுகமாக அமைத்து வைக்கக் கூடிய மகத்துவம் வாய்ந்ததாகும். இரண்டு பட்சங்களிலும் வரக்கூடிய பிரதமை மற்றும் தசமி திதிகளில், இந்த மந்திரத்தை *48* அல்லது *108* முறை சூரிய உதயத்தின்போது உச்சாடனம் செய்துவந்தால் பார்வைக் கோளாறுகள் நீங்குவதற்கு அது மிகவும் உறுதுணையாக அமையும். அல்லது அந்தந்த திதிகளில் வரும் சூரிய ஹோரைகளில் ஜபம் செய்வதும் விசேஷமே.

ஜோதிட சாஸ்திர ரீதியாக சூரியன், 'ஆத்மகாரகன்' என்று வழங்கப்படும். ஒருவருடைய தனிப்பட்ட ஜாதக ரீதியாக குரு நின்ற ராசியைச் சூரியன் கடக்கும் ஒரு மாத காலம், அவருடைய சந்தான பாக்கிய விருத்திக்கான சாதகமான காலகட்டமாகும். அதாவது, ஆத்மாகாரகனான சூரியன், புத்திரகாரகனான குரு நின்ற ராசியைக் கடக்கும் காலகட்டமே அதுவாகும். அந்த மாதத்தில் வரக்கூடிய வளர்பிறையில் அமைந்த சுபநாட்களைத் தம்பதிகள் பயன்படுத்திக் கொள்ளலாம். மருத்துவ ரீதியான பெரிய குறைகள் இல்லாதவர்கள் இம்முறையால் நிச்சயம் சந்தான பாக்கிய விருத்தியை அடைவார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஜாதக ரீதியாக சூரிய பலம் குறைந்தவர்களுக்கு, மனதில் எப்போதும் இனம் புரியாத பய உணர்வு இருந்து கொண்டே யிருக்கும். சாதாரண உடல் ரீதியான சிக்கல்களைக்கூட பெரிய வியாதியாக இருக்குமோ? என்று பயம்கொள்வார்கள். அவர்க ளுக்கான ஒரு பயன் தரும் நல்ல மந்திரத்தை இப்போது காண இருக்கிறோம்.

'ஓம் தினகராய பாஸ்கராய ஜோதிஸ்வரூபாய
சூர்ய நாராயணாய தேவாய நமோ நம'

என்ற மந்திரத்தை ஒரு வளர்பிறை ஞாயிற்றுக்கிழமை காலையில் இருந்து ஆரம்பித்து 108 முறை ஜபித்து வர வேண்டும். உடல், மனம், ஆன்மா என்ற மூன்று நிலைகளிலும் பல நன்மைகளைப் பெற இம்மந்திரம் உற்ற துணையாக அமையும் என்பது உறுதி.

சூரியனும்... வெள்ளெருக்கும்...

உத்தராயணத்தில் வரும் முதல் வளர்பிறை சப்தமி, ரத சப்தமி எனப்படும். அது சூரியனுக்கு உகந்த நன்னாளாகும். அன்றைய தினம் ஆன்மிக, யோகப் பயிற்சிகளைத் தொடங்குதல், வித்யாரம்பம், குலதெய்வ வழிபாடு மற்றும் இஷ்ட தெய்வ வழிபாடு என்று பல்வேறு சுப நிகழ்ச்சிகளைச் செய்ய மிகவும் உகந்ததாகும். அன்றைய தினம் அதிகாலையில் குளிக்கும்போது 2 அல்லது 7 வெள்ளெருக்கு இலை களை ஒரு சிறிது அட்சதையோடு, நமது தலையிலும், தோள்களி லும் வைத்து கிழக்கு முகமாக நின்று குளிப்பதன் மூலம் சூரியக் கதிர்வீச்சின் சாதகமான பலன்களைப் பெற்று மகிழலாம்.

அர்க்க தேவன் என்று அழைக்கப்படும் சூரிய பகவானின் விஷே சமான நன்மையைப் பெற்ற ஒரு தாவரமே வெள்ளெருக்கு செடியா கும். வருடக்கணக்கில் தண்ணீர் இல்லாமல் இருந்தாலும் கூட அது பூப்பதும், பின் காய்ப்பதும் எவ்வகையிலும் பாதிக்கப்படுவதில்லை.

அதன் இலைகளின் அமைப்பும், மேற்புறமும், நரம்புகளும் சூரிய ஒளியிலிருந்தே தமக்குத் தேவையான நீர்ச்சத்தைப் பெறும் வகை யில் அமைந்துள்ளன. ஒளிவடிவச் சூரியக் கதிர்களை உயிர் வடி வின் வெளிப்பாடாக மாற்றியமைப்பதன் காரணமாகவே மருத்துவ குணம் கொண்ட வெள்ளெருக்கு நமது வாழ்வில் முக்கிய அங்கம் வகிக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேலும் கண்களின் பார்வைத்திறனும், ஆயுள் ஆரோக்கிய விருத்தியும் நன்முறையில் அமையும்.

நமது தமிழ் மண்ணின், பண்பாட்டின் மையமாக நன்றியுணர்வே காலம் காலமாக இருந்து வருகிறது. அதன் முக்கிய வடிவமாக மகர சங்கராந்தி என்று கூறப்படும் தை முதல் நாளான பொங்கல் திருநாள் உள்ளது. இந்த நாளில் சூரியனை நன்றியுடன் நினைவுகூர்ந்து சூரிய வழிபாடுகளையும், நதிகளில் நீராடி முன்னோர்களுக்கான பூஜைகளையும் செய்து நிறைவு காண வேண்டும். இரண்டாம் நாள் உழைப்பில் உறுதுணையாக இருந்த, ஆவினங்களுக்கு நன்றி காட்டும் நாளாகும். மூன்றாம் நாள் தமது உற்றார் உறவினர்களையும், உயர்வு பெற உதவிய நண்பர்களையும் தேடிச் சென்று பரிசுகளும் இனிப்புகளும் தந்து உறவுகளைப் புதுப்பித்தலுக்கான நாளாகும்.

நமது தேசம் முழுவதுமே அன்று ஏதாவது ஒரு வகையில் சூரியனை வணங்குவதை நடைமுறையாகக் கொண்டுள்ளன. அத்தகைய ஞாயிறு போற்றுதும்.. ஞாயிறு போற்றுதும்.. என்ற பண்பாட்டின் மையம், நமது தேசிய உணர்வாகவே உள்ளதென்றால் அது மிகையல்ல.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



20. அஞ்சனை மைந்தனின் அற்புத மந்திரங்கள்

'அரும் பசிக்கு உதவாத அன்னமும், ஆபத்திற்கு உதவாத நண்பனும் வீண்' என்று பழமொழி ஒன்று உண்டு. இது சாதாரண உலகியல் பழமொழியாகும். சாதாரண மனிதர்கள் ஒருவரது கஷ்ட காலங்களில் உதவி செய்ய, உற்ற நண்பர்களேயானாலும் பிடி கொடுக்க மாட்டார்கள்.

ஆனால், மானுட தர்மத்திற்குட்பட்ட பரம்பொருளான ராம பிரானுக்கே வந்த கஷ்ட காலங்களில் உதவி செய்யக்கூடிய மகத்தான ஆற்றலைப் பெற்ற வானர வீரர் ஒருவர் இருந்தார் என்றால் அது நிச்சயம் அனுமன்தான்.

ராமனது அத்யந்தப் பிரிய சேவகனாகவும், அன்னை சீதாலட்சுமியின் வாத்சல்யப் பேரன்பைப் பெற்றவனாகவும், யாவருக்கும் இதமானவனாகவும் இருக்கக் கூடிய தன்மையைப் பெற்றவன் அனுமன் என்றால் அது மிகையன்று. அனுமன் என்றால் பெரிய தாடைகளை உடையவன் என்று பெயர். அஞ்சனாதேவி– வாயு பகவானின் புத்திரனான அனுமன், வித்தைகளைச் சூரிய தேவனி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

டமிருந்தே கற்றார். சகல கலைகளையும் கற்று சர்வ வியாகரண பண்டிதர் என்ற பெருமையையும் அடைந்தார். சொல்லின் செல்வன் என்ற அரிய பட்டத்துக்கும் மிகப் பொருத்தமானவர் அவர்.

ஸ்ரீமத் பகவத் கீதை உபதேசத்தைக் கேட்ட இரண்டாவது நபர், அர்ச்சுனனின் தேர்க்கொடியில் வீற்றிருந்த ஹனுமனே. போர் முடிந்து தேரை விட்டு இறங்கிய கண்ணன் அனுமனையும் கொடியில் இருந்து கீழிறங்கி வரக் கேட்டுக்கொண்டார். அனுமன் இறங்கி வந்த மறுகணமே தேர் சுக்குநூறாகச் சிதறி விட்டது. அதைக் கண்ட அர்ச்சுனன் பயமும், வியப்புமாக கண்ணனை நோக்கினான்.

'அர்ச்சுனா, பார்த்தாயா..? தேரில் இருந்தபோது உன்மேல் பிரயோகம் செய்யப்பட்ட, சகல திவ்யாஸ்திரங்களும் என்பொருட்டும், கொடியிலிருந்த அனுமன் பொருட்டும் செயலற்று நின்றுவிட்டன.

அனுமனின் வடிவமைப்பு

தமிழ்நாட்டில் அனுமார் என்று போற்றப்படும் வாயுபுத்திரன், கர்நாடகாவில் 'ஹனுமந்தய்யா'வாகவும், ஆந்திராவில் 'ஆஞ்சனேயலு'வாகவும், மகாராஷ்டிராவில் 'மாருதி'யாகவும், வட மாநிலங்களில் 'மஹாவீர்' என்றும் பக்தியுடன் அழைக்கப்படுகிறார்.

இந்திய வரலாற்றின் பண்பாட்டுப் பக்கங்களில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஆட்சி புரிந்த விஜயநகரப் பேரரசின் காலகட்டத்தில்தான் மகான் வியாசராஜ தீர்த்தரால், நமது நாட்டின் பல இடங்களில் அனுமனின் தேவதா ரூபப் பிரதிஷ்டை செய்யப்பட்டது. நமது வேத தர்மத்தைக் காக்கும் முகமாகவே மிக விசேஷமாக, அனுமனின் வலது திருக்கரம் அபய ஹஸ்தமாகவும், இடது கரத்தில் சவுகந்திகா புஷ்பமும், சிரசிற்கு மேலே உயர்ந்த அவரது வாலின் நுனியில் ஒரு சிறிய மணியும் கொண்டிருந்தது. அந்த மணியில் அதர்வண மந்திரத்தின் முக்கியமான பிரயோகமும் செய்து நின்ற திருக்கோலத்தில், ஒரு செவ்வக வடிவக் கல்லில் புடைப்புச் சிற்பமாக காலத்தின் பாதிப்புகள் அவற்றை சேதப்படுத்த முடியாதபடி நிலையான வடிவமைப்பு தரப்பட்டது. அவை யாவுமே வியாசராஜ தீர்த்தரால், ஞானதிருஷ்டியில் கண்டுணர்ந்த இடங்களிலேயே அமைக்கப்பட்டன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாங்கள் கீழே இறங்கியவுடன் அவை என்ன செய்தன என்பதையே நீ இப்போது பார்த்தாய்..' என்று கண்ணன் கூறியதைக் கேட்ட அர்ச்சுனன் அவர்கள் இருவரையும் பல முறை வணங்கினான்.

'அஸ்வத்தாம பலிர் வியாஸோ ஹநுமனஸ் ச
விபீஷண கிருபாஸார்ய ச
பரசுராமம் ஸப்தைத சிரஞ்ஜீவனம்'

மேற்கண்ட ஸ்லோகம் ஸப்த சிரஞ்சீவிகள் என்று போற்றப்படும் எழுவர்களைப் பற்றிக் குறிப்பிடப் படுவதாகும். அஸ்வத்தாமர், மஹாபலிச்சக்ரவர்த்தி, வேதவியாசர், அனுமன், விபீஷணாழ்வார், கிருபாச்சார்யார், பரசுராமர் ஆகிய எழுவர்களே அவர்களாவார்கள். ராமன், சீதாதேவி ஆகிய இருவரின் பரிபூரண அனுக்கிரகத்தையும் ஒருங்கே பெற்ற அனுமன் சிரஞ்சீவித்துவம் அடைந்ததில் வியப்பொன்றுமில்லை.

ஐம்புலன்களையும் வென்ற ஜிதேந்திரியனாக மட்டுமல்லாமல், பஞ்ச பூதங்களாலும், நவக்கிரக சக்திகளாலும் பாதிக்கப்படாத அதீத பலம் பெற்றவராகவும், தெளிந்த புத்தியுடையவராகவும், விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு நன்கு ஆராய்ந்தே எதையும் முடிவு செய்யும் நிதானப் போக்கும் கொண்ட காரணத்தால், ராமபிரானின் எல்லா ஆலோசனைகளிலும், அனுமனின் முடிவு முக்கியமானதாக இருந்தது என்பது காவிய உண்மையாகும்.

நவக்கிரகங்களால் விளையக்கூடிய பல்வேறு தோஷ விளைவுகளுக்கு நல்ல பலன்களைத்தரும் ஒரு பிரசித்தி பெற்ற ஸ்தோத்திரத்தை இங்குக் காண உள்ளோம். இதை ஒரு வளர்பிறை குரு வாரத்தில் ஆரம்பித்துச் செய்ய வேண்டும். தினமும் 48 முறை காலையிலும், மாலையிலும் ஜபம் செய்து வந்தால் அது நவக்கிரக சாந்தியாக அமையும். அந்த ஸ்துதி:-

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'மனோ ஜவம் மாருத துல்ய வேகம்
ஜிதேந்திரியம் புத்தி மதாம் வாஷ்டம்
வாதாத்மஜம் வானர யூத முக்யம்
ஸ்ரீ ராம தூதம் சிரஸா நமாமி'

உண்மையான பக்திக்கும் அன்புக்கும் கட்டுப்பட்ட அனுமன் தன்னை நாடியோரின் துன்ப துயரங்களை உடனடியாகத் தீர்க்கும் ஆசீர்வாத பலம் பெற்றவர்.

அத்வைத ஸ்தாபனாச்சார்யாரான ஆதிசங்கர பகவத்பாதரால் தரப்பட்ட ஒரு மகத்தான மந்திர ஸ்துதியே அனுமத் பஞ்சரத்னம் ஆகும். இதைப் பாராயணம் செய்வதன் மூலமாக மனதின் சஞ்ச லங்கள் அகன்று திடசித்தமும், சத்கர்ம நாட்டமும், காரிய அனு கூலமும் நிச்சயமாக உண்டாகும். 12 முறை தினமும் பாராயணம் செய்வது விசேஷமாகும்.

ஸ்ரீ ஹனுமத் பஞ்சரத்னம்

வீதாகில விஷயேச்சம் ஜாதா நந்தாச்ரு புலகம் அத்யச்சம்!
ஸீதாபதி தூதாத்யம் வாதாத்மஜம் அத்ய பாவயே ஹ்ருத்யம்!!
தருணாருண முக கமலம் கருணாரஸ பூர பூரிதாபாங்கம்!
ஸஞ்சீவநம் ஆசாஸ மஞ்ஜுல மஹிமாநம் அஞ்சனா பாக்யம்!!
சம்பரவைரி சராதிகம் அம்புஜ தல விபுல லோசநோதாரம்!
கம்பு கலம் அநில திஷ்டம் பிம்ப ஜ்வலிதோஷ்டம் ஏகம் அவலம்பே!!
தூரீக்ருத ஸீதார்த்தி ப்ரகடி க்ருத ராம வைபவ ஸ்பூர்த்தி!
தாரித தஸமுக கீர்த்தி புரதோ மம பாது ஹநுமதோ மூர்த்தி!!
வாநர நிகராத்யக்ஷம் தாநவ குல குமுத ரவி கர ஸத்ருக்ஷம்!
தீந ஜாநாவந தீக்ஷம் பவந தப பாக புஞ்சம் அத்ராக்ஷம்!!
ஏதத் பவந ஸீதஸ்ய ஸ்தோத்ரம் ய படதி பஞ்சரத்நாக்யம்!
சிரமிஷ நிகிலாந் போகாந் புங்த்வா ஸ்ரீ ராம பக்தி பாக் பவதி!!

நமது நாயன்மார்கள் ஒருவரது பக்தி கலந்த சேவை மனப் பான்மைக்காக, அவரை அடியார்க்கடியவன் என்று குறிப்பிடு வார்கள். சுவாமி விவேகானந்தர் அதைத் தமது சொற்பொழிவு களில், 'SERVANT OF SERVANTS OF HIS SERVANTS' என்று மிகவும் அழகாகக் குறிப்பிடுவார். அத்தகைய தாஸ்ய பாவ சேவா ரத்ன மான ஸ்ரீஹனுமன் எளிமையான, உள்ளன்புடன் கூடிய பக்திக்கே மனம் உவந்து துணை நிற்பார் என்பது நிதர்சனமான உண்மை யாகும். ஒருவரது வீட்டில் சுப காரியத்தடைகளால் மனதில் அமைதியற்ற நிலை உண்டானால், கீழ்க்கண்ட மந்திர ஸ்துதியைச் சிக்கல்கள் தீரும் வரையில் தினமும் 108 முறை ஜபம் செய்துவர வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸர்வ கல்யாண தாதாரம் ஸர்வ ஆபத் கன மாருதம்!
அபார கருணா மூர்த்திம் ஆஞ்சனேயம் நமாம்யஹம்!!

அதேபோல் ஒரு காரியம் குறித்து மனதில் பயமும், தெளிவின்மையும் மேலோங்கி குழப்பமான சூழ்நிலைகளால் ஒருவர் சிரமப்படும் தருணங்களில் உற்ற துனை நிற்கும் ஒரு நன்மந்திரத்தை இப்போது காணலாம்.

இதைத் தினமும் காலை, மதியம், மாலை என்று மூன்று காலங்களிலும் உச்சாடனம் செய்து வந்தால் மனதின் ஆற்றல் பெருகி காரிய வெற்றியைப் பெறலாம்.

ராம தூத மஹாதீர ருத்ர வீர்ய ஸமுத்பவ!
அஞ்ஜனா கர்ப்ப ஸம்பூத வாயு புத்ர நமோஸ்துதே!!

ஒருவரது ஜனன கால ராசியோ, லக்னமோ தற்கால கோள் சார நிலைகளில், அசுப கிரகங்களான சனி, ராகு, கேது ஆகியவற்றால் பாதிக்கப்பட்டால், அதிலிருந்து விலக ஒரு நல்ல வழி உண்டு.

அதாவது சனிக்கிழமைகளில் ஆஞ்சநேயர் சன்னிதியில் உளுந்து வடையோ, அல்லது ஜிலேபியோ நிவேதனம் செய்து அவற்றோடு புளி சாதமும் சேர்த்து வயதானவர்களுக்கு தானமாகத் தருவதோடு, கீழ்க்கண்ட மந்திரத்தையும், அங்கேயே அமர்ந்து 108 முறை ஜபம் செய்து வந்தால் நல்ல பலன்கள் நமக்கு உற்ற துணை நிற்கும் என்பது திண்ணம். மந்திரம் வருமாறு:-

'ஓம் நமோ பகவதே ஆஞ்சநேயாய நம'

தற்காலத்தில் நமக்கு வரும் பிரச்சினைகளால், நமது வாழ்வியலின் மதிப்பீடுகள் யாவுமே திசை மாற்றம் அடையக்கூடிய சிக்கலான வாழ்க்கையே நம்முன் வந்து நிற்கிறது. மனிதர்கள் மனிதர்களுக்கு உதவும் மனிதம் நடைமுறையில் குறையும் அதே தருணத்தில், அந்த இடத்தில் கண்காணாத தெய்வம் எப்படி மனிதர்களுக்கு உதவும் தெய்வீகம் அரங்கேறும் என்பது மிகப்பெரிய கேள்வியாகும்.

இதற்கான பதில் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட அனுபவத்தைச் சார்ந்ததாகும். அது பொதுவழியல்ல, தனிவழி என்பதே அதன் நிதர்சனமாகும். மறைபொருளாம் இறையருள் எங்கும் நிறைய திருவருளே துணையாகட்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

21. அரசு வேலைக்கு உறுதுணையாகும் மந்திரங்கள்

'அரைக்காசு என்றாலும் அரண்மனைக் காசு', 'கால் காசு என்றாலும் கவர்ன்மெண்ட் காசு' என்ற சொல்வழக்குகள் அரசு வேலை வாய்ப்பின் முக்கியத்துவத்தைக் காலம் காலமாக எடுத்துக்காட்டி வருகின்றன. நமது நாட்டில் உள்ள மொத்த வேலைவாய்ப்பில் வெறும் இரண்டு சதவிகித அளவு மட்டுமே அரசு வேலைவாய்ப்புகள் உள்ளதென்பது புள்ளி விவரக் கணக்கு. அப்படிப்பட்ட அரசு வேலைவாய்ப்புகளுக்கு விண்ணப்பிக்கும் அனைவருக்கும் அந்த வேலை கிடைக்கும் என்பது சர்வ நிச்சயமான விஷயமில்லை.

விண்ணப்பம் செய்து தகுதித் தேர்வில் தேர்ச்சியும் பெற்று, முதல் தடவையிலேயே வேலைவாய்ப்பில் அமர்ந்தவர்களும் நம்மிடையே உண்டு. அதே போல வருடக்கணக்காகத் தகுதித் தேர்வுகள் எழுதியும் ஒரு சில சின்னச் சின்ன வித்தியாசங்களில் அதில் தேர்வு பெற இயலாமல் போய்விட்ட பலரும் நம்மிடையே உண்டு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதை அவரவரது அதிர்ஷ்டம் என்றே பொதுவாகச் சொல்லித் தமது தோல்வியில் இருந்து மீண்டு, மறுபடியும் தமது முயற்சியைத் தொடங்கிக் கொண்டு இருப்பார்கள். சரியான அனைத்துத் தகுதியும் பெற்ற பலரும் இந்த வகையில் அடங்கியுள்ளார்கள் என்பதும் ஒரு நடைமுறை உண்மையாகும்.

நமது இந்தியா போன்ற அதிக ஜனத்தொகை கொண்ட வளர்ந்து வரும் நாட்டில், தேவைகள் பூர்த்தி என்ற தொழில் நுட்பச் சிக்கல் சர்வ சாதாரணமாக நடைமுறையில் உள்ளதாகும். வேலையின் நிலைத்தன்மை, சம்பளத்தில் உள்ள பல்வேறு படிகள், சமூக மதிப்பு, வாரிசு முன்னுரிமை, விடுமுறைகள் என்ற பல்வேறு அம்சங்கள் அரசு வேலையை யாவரும் நாட முக்கியக் காரணங்களாக அமைகின்றன. குழந்தைகள் அவர்களது பள்ளிப் பருவத்திலிருந்தே அரசின் உயர் வேலை வாய்ப்புகளை நோக்கிப் பயணிக்கவே, பெரும்பாலான மத்தியதர வர்க்கப் பெற்றோர்களால் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.

தனியார் நிறுவனங்களின் இயந்திர மயமாக்கப்பட்ட வேலை வாய்ப்புகளில் மனித சக்தியின் அவசியம் குறிப்பிடத்தக்க அளவு குறைந்து விட்டது. உலகளாவிய பொருளாதார மந்த நிலைகளால் பல முக்கிய தனியார் நிறுவனங்கள் ஆட்குறைப்பில் இறங்கி விட்டன அல்லது வேலையின் உத்தரவாதம் நிரந்தரமில்லை. இவை தவிரவும் இன்னும் உள்ள பல்வேறு விதமான பொருளியல் சார்ந்த காரண காரியச் சிக்கல்களில் உள்ள தனியார்மயத் தத்தளிப்புகளில் தமது வாழ்நாளைச் செலவிட பலர் தயாராக இல்லை. அதன் விளைவுகளால் அரசு நிறுவன வேலைவாய்ப்புகளில் பலத்த போட்டிகள் நிலவி வருவது கண்கூடான உண்மை.

நாம் இங்குக் காண இருக்கும் விஷயம் அரசு வேலை வாய்ப்பை ஒருவர் பெறத் தக்க வகையில் உதவி செய்யும் ஆன்மிக, ஜோதிட, மந்திரப் பூர்வமான வழிவகைகளைப் பற்றியதாகும். மந்திரத்தால் மாங்காய் விழாது எனினும், முயற்சி தன் மெய் வருத்தக் கூலி தரும் என்ற பார்வைக்குட்பட்டே நமது முயற்சிகளை ஆன்மிக ரீதியாகவும், வேத ஜோதிட அணுகுமுறையோடும், நேர்மறைச் சிந்தனையுடனும் அமைத்துக் கொண்டு, வெற்றியின் பாதையில் தமது முதலடியை எவ்வாறு எடுத்து வைப்பது என இங்குக் காண இருக்கிறோம்.

இந்த வழிவகைகளைக் கடைப்பிடித்த யாவருக்கும் அதில் வெற்றி கிட்டி வேலைவாய்ப்பைப் பெறுவார்கள் என்பது 100 சதவீதமும் சாத்தியமில்லை. ஆனால் நமக்குள் உள்ள, நம்மை வழிநடத்தக்கூடிய அக நிலையின்பாற்பட்ட சக்தியின் வழித்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

டத்தில் ஒரு சாதகமான மாற்றத்தை, நமது முயற்சியால் நாமே உண்டாக்கிக் கொள்ள இயலும் என்பதே இக்கட்டுரையின் உள்ளீடாகும்.

'முயற்சிகள் தவறலாம்; ஆனால் முயற்சிக்கத் தவறக்கூடாது' என்ற ஒரு நேர்மறை உளவியல் சார்ந்த கருதுகோள் ஒன்று உண்டு. அதன்படி நமது முயற்சிகள் என்ற பயணத்தை, இயற்கை நியதிகளின் பாரபட்சமற்ற பொதுத் தன்மையின் பரந்த சாலையில் நமக்காக உள்ள பிரத்தியேகமான வழியில் அமைத்துக்கொள்கிறோம்.



பொதுவாக ஒருவரது பிறந்த நேரத்தின் நவக்கிரக அமைவுகளில் ராஜ கிரகமான சூரியன், உத்தியோக காரகனான செவ்வாய், மற்றும் தொழில்களுக்குக் காரகம் வகிக்கும் சனி ஆகியவையே ஒருவரது அரசு வேலைவாய்ப்புகளில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. தமது பிறந்த நேரத்தில் இவை யாவும் நல்ல முறையில் அமைந்தவர்களுக்கு பெரிய சிரமங்கள் ஏதுமின்றி அவரவர் தகுதிகளுக்கேற்ற அரசு வேலைகள் அமைந்து விடும். ஆனால், அதில் உள்ள அமைவுகள் சரியாக இல்லாவிட்டால் முயற்சிகளின் அளவுகளை அவரவர் புத்தி, யுக்திகளுக்கு உட்பட்டு வெவ்வேறு தளங்களில் அமைத்துக் கொள்ள வேண்டும். இங்கு அப்படிப்பட்ட நிலைகளுக்கு நல்ல மாற்று முறைகளாக உள்ள சில வழிகளைக் காணலாம்.

முதலாவதாக சூரிய பகவானின் மேலமைந்த 'ஸ்ரீ ஸூர்யாஷ்டகம்' என்ற ஸ்துதியைக் காணலாம். இதை ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி முதல் 7 மணிக்குள் அமைந்த சூரிய ஹோரையில் சிவபெருமானின் கோவிலில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். பின்பு தினமும் அதே நேரத்தில் நமது வீட்டிலிருந்தபடியே, சூரிய தரிசனம் செய்துவிட்டு, 24 அல்லது 48 என்ற எண்ணிக்கையில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஜபத்தைக் கிழக்கு முகமாக அமர்ந்து செய்துவர வேண்டும். 108 நாட்கள் செய்து வர வேண்டும். அந்த 108 நாட்களும் அசைவ உணவையும், கருப்பு நிற ஆடைகள் அணிவதையும் முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும்.

ஆதி தேவ நமஸ்துப்யம் ப்ரஸீத மம பாஸ்கர
திவாகர நமஸ்துப்யம் ப்ரபாகர நமோஸ்துதே
ஸப்தாஸ்வ ரதமாரூடம் ப்ரஸண்டம் கஷ்யபாத்மஜம்
ஸ்வேத பத்ம ரதம் தேவம் தம் ஸூர்யம் ப்ரணமாம்யஹம்
லோஹிதம் ரதமாரூடம் ஸர்வலோக பிதாமஹம்
மஹாபாப ஹரம் தேவம் தம் ஸூர்யம் ப்ரணமாம்யஹம்
த்ரை லோக்யம் ச மஹாஸூரம் ப்ரஹ்மா விஷ்ணு மஹேஷ்வரம்
மஹா பாப ஹரம் தேவம் தம் ஸூர்யம் ப்ரணமாம்யஹம்
ப்ருஹ்மிதம் தேஜ புஞ்ஜம் ச வாயும் ஆகாஸம் ஏவ ச
ப்ரபும் ச ஸர்வ லோகானாம் தம் ஸூர்யம் ப்ரணமாம்யஹம்
பந்தூக புஷ்ப ஸங்காஸம் ஹார குண்டல பூஷிதம்
ஏக சக்ர ரதம் தேவம் தம் ஸூர்யம் ப்ரணமாம்யஹம்
தம் ஸூர்யம் ஜகத் கர்த்தாரம் மஹா தேஜ ப்ரதீபனம்
மஹா பாப ஹரம் தேவம் தம் ஸூர்யம் ப்ரணமாம்யஹம்
தம் ஸூர்யம் ஜகதாம்நாதம் ஞான விஞ்ஞான மோக்ஷதம்
மஹா பாப ஹரம் தேவம் தம் ஸூர்யம் ப்ரணமாம்யஹம்
இதி ஸ்ரீ ஷிவப்ரோக்தம் ஸூர்யாஷ்டகம் ஸம்பூர்ணம்.

போட்டித் தேர்வுகளுக்கான நுண்மாண் நுழைபுலம் தரத்தக்க வல்லமை படைத்த ஒரு மந்திர ரூபஸ்துதி, ஸ்ரீ மேதா தட்சிணா மூர்த்தி மந்திரமாகும். இதை ஒரு குரு வாரத்தில் (வியாழக்கிழமை) அதிகாலையில் மஞ்சள் நிற ஆடையணிந்து கிழக்கு முகமாக அமர்ந்து, நெய் தீபமேற்றி, 48 முறையோ அல்லது 108 முறையோ, 108 நாட்கள் தொடர்ந்து ஜபம் செய்து வர வேண்டும். ஸ்ரீ தட்சிணாமூர்த்தம், ஞானமய சச்சிதானந்த ஸ்வருபமாக இருப்பதால் மனதில் அந்த ரூபத்தை நிறுத்தியபடி ஜபம் செய்து வரலாம். படத்தைப் பார்த்தபடியும் ஜபம் செய்து வரலாம்.

'ஓம் ஹ்ரீம் தக்ஷிணாமூர்த்தயே மஹ்யம்
மேதாம் ப்ரஞாம் ப்ரயச்ச ஸ்வாஹா'

ஸ்ரீ ஹயக்ரீவ சுவாமியின் மேலமைந்த 'ஸ்ரீ ஹயக்ரீவ சம்பதா ஸ்தோத்ரம்' என்ற அரிய மந்திரப்பூர்வமான ஒரு ஸ்துதியினை இங்கு காணலாம். இதை ஒரு புதன்கிழமை அதிகாலையில் ஹயக்ரீவரின் திருமுன்னர் ஆரம்பித்துச் செய்ய வேண்டும். 21 முறை ஜபம் செய்ய வேண்டும். 108 நாட்கள் கணக்கு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஹயக்ரீவ ஹயக்ரீவ ஹயக்ரீவேதி வாதிநம்
நரம் முச்யந்தி பாபானி த்ரத்ரமேவ யோஷித
ஹயக்ரீவ ஹயக்ரீவ ஹயக்ரீவேதி யோ வதேத்
தஸ்ய நிஸ் ஸரதே வாணீ ஜநுகன்யா ப்ரவாஹவத்
ஹயக்ரீவ ஹயக்ரீவ ஹயக்ரீவேதி யோ த்வனி
விஷோபித ஸ வைகுண்ட கவாடோத் காடனக்ஷம்
ஸ்லோகத்ரயமிதம் புண்யம் ஹயக்ரீவ பதாம் கிதம்
வாதிராஜ யதிப்ரோக்தம் படதாம் ஸம்பதாம் பதம்

நவக்கிரகங்களில் சனீஸ்வரரின் மேலுள்ள மந்திர ஸ்துதிகளும் நல்ல வேலைவாய்ப்பினைத் தர வல்லவையாகும். அதில், தசரத சனி ஸ்தோத்ரம் என்ற ஸ்துதியும், சனியின் மற்ற ஸ்துதிகளும் குறிப்பிடத்தக்க நல்ல விளைவுகளைத் தர வல்லவை. சனிக்கிழமையில் பிறந்தவர்களும், பூசம், அனுஷம், உத்திரட்டாதி முதலிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களும், மகரம், கும்பம் ராசிகளிலும், 8, 17, 26 ஆகிய தேதிகளிலும் பிறந்தவர்கள் சனீஸ்வரரின் ஸ்துதிகளின் மூலம் வெற்றி பெறலாம்.

நிறைவாக ஸ்ரீ அனுமனின் மீதமைந்த ஒரு பிரபலமான ஸ்துதியை இங்குக் காணலாம். ஒரு சனிக்கிழமையில், அவரது சன்னிதியில் இருந்து ஆரம்பித்துச் செய்ய வேண்டும். ஒவ்வொரு சனிக்கிழமையும் 108 முறை இம்மந்திரத்தைச் சொல்லியபடியே, 108 வெற்றிலை மாலையைக் கோர்த்து அவருக்குச் சமர்ப்பிக்க வேண்டும். மற்ற நாட்களில் ஜபம் மட்டும் செய்தால் போதும். தினமும் 108 முறைகள் ஜபிக்க வேண்டும் என்பது விதிமுறையாகும்.

‘அஸாத்ய ஸாதக ஸ்வாமின் அஸாத்யம் தவ கிம் வத
ராம தூத க்ருபா ஸிந்தோ மத் கார்யம் ஸாதய ப்ரபோ’

திருவருளின் அருட்கடாட்சம் யாவருக்கும் வேண்டியபடி வேண்டியது கிட்ட அவனருளால் அவன் தாளை வணங்குவோமாக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

22. பயத்தை விலக்கி ஜெயத்தை அருளும் மந்திரங்கள்

இந்த உலகத்தில் (மனிதம் என்ற தளத்தில்) நாம் இருப்பதற்கும், நமக்குள் இவ்வுலகம் இருப்பதற்கும் முக்கியக் காரணியாக விளங்கக்கூடிய ஒரு தொடர்பறிவு உண்டு, அது ஆறாம் அறிவான நமது மனமேயாகும். மனம் இருந்தால் மார்க்கமுண்டு என்ற கருத் தின்படி மனதின் துணையில்லாமல் இவ்வுலகில் ஒருவர் தனது வாழ்வை, சரியான குறிக்கோளை நோக்கி அமைத்துக்கொள்ள இயலாது. ஒருவர் பிறந்ததிலிருந்து இவ்வுலகை விட்டுச் செல்வது வரை நண்பனாகவும், எதிரி யாகவும், குருவாகவும், மாணவனாக வும் பல்வேறு நிலைகளில் அவரவரது மனமே துணை நிற்கிறது.

அந்த மனம் பல்வேறு சக்திநிலைகளின் கூட்டுக்கலவையாகும். பல்வேறு அடுக்குகளால் அமைக்கப்பட்ட அது, தமது நிலைப் பாட்டைச் சூட்சுமமான பரிமாணங்களில் நமக்கே தெரியாமல்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒவ்வொரு நாளும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது. மனோ தத்துவ அறிஞர்களின் கருத்துப்படி, நமது சொந்த மனம் பற்றிய உண்மைகளில் 70 சதவிகிதம் நம்மாலேயே அறிந்து கொள்ள இயலாததாக உள்ளது. நமக்கு வரும் நோய்களில் பெரும்பாலானவை மனம் சார்ந்தவையே. உடலுக்கு உண்டாகும் பாதிப்பால் மனமும், மனதுக்கு உண்டாகும் பாதிப்பால் உடலும் தத்தமது இயக்க நிலை இயல்புகளில் மாறுபாடுகளை அடைகின்றன. அவற்றின் வெளிப்பாடுகள் ஒரு குறிப்பிட்ட நோயாக அமைகிறது.

அதிலும் மனம் சம்பந்தமான குறைபாடுகள், சாதாரண பய உணர்வில் தொடங்கி, புத்தி பேதலிக்கும் நிலை வரையில் பல வகைப்பட்டவையாக உள்ளன. நவீன வளர்ச்சிகளுக்கேற்ப நவீன நோய்களும் வந்து விட்டன. உடல், மனம், ஆன்மா என்ற மூன்று விதங்களிலும் உள்ள தெளிவற்ற நிலையால் வரும் துன்பங்களே நவீன காலத்தில் பெரும் சிக்கல்களாக உள்ளன.

தற்காலத்தில் நிலவுகின்ற சிக்கலான வாழ்க்கை முறைகள், அனைத்துத் தரப்பிலும் பல்வேறு உளவியல் முரண்பாடுகளை உண்டாக்கி விட்டன. பயம் கலந்த சுயநலமே தனி மனிதப்போக்காக

ஆஞ்சநேயர் மந்திரத்தின் அற்புதம்

சிலருக்கு உறக்கம் வராததோடு, உறக்கத்தில் கெட்ட கனவுகளும் வந்து மனதில் சங்கடங்களை உண்டாக்கும். இடம், பொருள், காலம் என்ற கட்டுக்குள் அடங்கிய, நமது அக மற்றும் புற இயற்கையின் சுபாவங்கள் மிக எளிதில் பலவிதமான பாதிப்புகளுக்கு உள்ளாகி விடுகின்றன. நமது வாழ்க்கை முறைகளோ எதிலும் எதிர்நீச்சல் என்ற வகையில் தொடர் போராட்டக் களமாகத் தினமும் இன்ப துன்ப அனுபவங்களைத் தாங்கி தொடர் கதையாய் நம்முன் விரிகிறது. கெட்ட கனவுகள் நம்மைத் துன்பப்படுத்தாமல் இருக்க ஒரு மந்திரப்பூர்வமான உபாயம் உள்ளது. அது ஸ்ரீஆஞ்சநேயரின் மீது அமைந்த ஒரு அரிய மந்திரமாகும்.

இதை ஆஞ்சநேயரின் சன்னிதியில் ஆரம்பித்துச் செய்ய வேண்டும். ஒரு செவ்வாய்க்கிழமையன்று காலையில் குளித்து முடித்து, விரதம் அனுஷ்டித்து, கிழக்கு முகமாக அமர்ந்து ஒரு சிவப்பு நிறக் கயிற்றில் ஒன்பது முடிச்சுகளை இட வேண்டும். ஒவ்வொரு முடிச்சுக்கும் ஒரு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வும், சமூகத்தின் இயல்பு நிலையாகவும் அமைந்து, அமைதியற்ற நிலைக்கே மனித மனதை இட்டுச் செல்கின்றன.

அதன் குறிப்பிடத்தக்க விளைவுகளாகக் காரணமற்ற பயங்கள் ஒருவரை மறைமுகமாகவும், நேரடியாகவும் நடத்திச் செல்கின்றன. நம்மை அலைக்கழிக்கும் காரணமற்ற பய உணர்வுகளில் இருந்து மீண்டு வர உதவிபுரியும் தேவதா ஸ்வரூபங்களின் மீதமைந்த மந் திர வடிவங்களை இங்கே நாம் காண உள்ளோம்.

எல்லா மந்திரங்களும் எல்லோருக்கும் நிச்சயமாகப் பொருந்தி வராது. காரணம், பஞ்ச பூதங்கள், பஞ்ச கோசங்கள், திரிகுணங்கள், திரிதோஷங்கள் ஆகியவற்றின் விகிதாச்சார வித்தியாசங்கள் மனி தருக்கு மனிதர் வேறுபடும். அந்த அடிப்படையிலேயே சத்வ, ரஜோ, தமஸ் ஆகிய குண விசேஷங்களைப் பெற்ற மந்திரங்கள் அவற்றின் பயன்களை, அதை உச்சரிப்பவருக்கு அளிக்கின்றன. மனோ பயங்களை நீக்குவதற்கு, ரஜோ குண மந்திரங்களே பெரி தும் பயன் தருகின்றன. அவை துர்க்கை, பைரவர், நரசிம்மர், ஆஞ் சநேயர், பிரத்யங்கிரா தேவி, ஸுதர்ஷனர் ஆகிய முக்கியமான தேவதா மூர்த்திகளின் மேல் அமைந்தவையாகும். அவற்றை நமது

முறை கீழ்கண்ட மந்திரத்தை உச்சாடனம் செய்ய வேண்டும்.

'ஓம் ஹம் ஓம் ஹம் ஓம் ஹநுமதே ஃபட்'

– என்ற மந்திரத்தைக் கூறி, ஒன்பது முறை முடியிட்ட பின்னர், அதை ஒரு சிவப்பு நிற துணியில் வைத்து விட வேண்டும். அன்று மாலையில் ஆஞ்சநேயரின் சன்னிதியில் அவருடைய பாதத்தில் அந்தச் சிவப்பு நிறக்கயிறை வைத்து அர்ச்சனை, ஆராதனைகள் செய்து அங்கேயே அந்தச் சிவப்புக் கயிற்றைக் கையில் கட்டிக் கொள்ள வேண்டும்.

பிறகு அவரது சன்னிதியிலேயே அமர்ந்து இந்த மந்திரத்தை 27 முறை உச்சாடனம் செய்வது அவசியம். பிறகு 9 முறை பிரதட்சணம் செய்து விட்டு வீடு திரும்பலாம். தொடர்ந்து ஒவ்வொரு வாரமும் செவ்வாய் மற்றும் சனிக்கிழமைகளிலும், அவரவரது ஜென்ம நட்சத் திரங்களிலும், பிறந்த வாரங்களிலும் ஆஞ்சநேயர் சன்னிதியில் இந்த மந்திரத்தை 27 முறை உச்சாடனம் செய்துவர வேண்டும். கெட்ட கனவுகள் வருவது நின்ற பின்னர் அந்தக் கயிற்றை ஏதாவது ஆற் றிலோ, குளத்திலோ, கடலிலோ சேர்ப்பித்துவிட வேண்டும். இந்தக் காலகட்டத்தில் அசைவம் தவிர்ப்பது முக்கியமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அன்றாட வாழ்வில் பயன்படுத்திப் பயம், மற்றும் மனோ நிலை பாதிப்புகளிலிருந்து விடுபடலாம்.

முதலில் லட்சுமி நரசிம்ம சுவாமியின் மேல் அமைந்த ஒரு மகத்தான ஸ்துதியைக் காண்போம். இது பாடலாத்ரி ஷேத்திரம் எனப்படும் சிங்கப்பெருமாள் கோவில் என்ற இடத்தில் உள்ள திரிநேத்ர உக்ர நரசிம்ம சுவாமியின் மேல் அமைந்த ஸ்துதியாகும். இது, சகலவித பயங்களில் இருந்தும், மன சங்கடங்களில் இருந் தும் ஒருவரைக் காப்பாற்றும் சக்தி மிக்கது. மனதிற்குள் வேண்டிக் கொண்டு, தினமும் நெய் தீபமேற்றி 12 முறை இந்த துதியைப் பாராயணம் செய்து வந்தால், துன்பங்கள் விரைவில் தீரும் என் பது சர்வ நிச்சயம்.

ஸ்ரீ பாடலாத்ரி நரசிம்ம துதி

ஜிதந்தே மஹாஸ்தம்ப ஸம்பூத விஷ்ணோ
ஜிதந்தே ஜகத் ரக்ஷணார்தாவார
ஜிதந்தே ஹரே பாடலாத்ரௌ நிவாஸின்
ஜிதந்தே ந்ருஸிம்ஹ ப்ரஸீத ப்ரஸீத
நமஸ்தே ஜகந்நாத விஷ்ணோ முராரே
நமஸ்தே ந்ருஸிம்ஹ அச்யுதாநந்த தேவ
நமஸ்தே க்ருபாலோ சக்ரபாணே
நமஸ்தம்ப ஸம்பூத திவ்யாவதார
பரப்ரஹ்ம ரூபம் ப்ரபுத்தாட்டஹாஸம்
கரப்ரௌல சக்ரம் ஹரப்ரஹ்ம ஸேவ்யம்
ப்ரஸந்நம் த்ரிநேத்ரம் ஹரிம் பாடலாத்ரௌ
சான்மேக காத்ரம் ந்ருஸிம்ஹம் பஜாம்
கிரிஜ ந்ருஹரிமீஸம் கர்விதாராதி வஜ்ரம்
பரம புருஷ மாத்யம் பாடலாத்ரௌ ப்ரஸந்நம்
அபய வரத ஹஸ்தம் சங்க சக்ரேத தாநம்
ஸரணமிஹ பஜாம் சாச்வதம் நாரஸிம்ஹம்
ஸ்ரீ ந்ருஸிம்ஹ! மஹாஸிம்ஹ! திவ்யஸிம்ஹ!
கிரிஸம்பவ! தேவேச! ரக்ஷமாம் ஸரணாகதம்!

அன்னை மகா மாயையின் சகல அற்புதங்களையும் எழுநூறு மந்திரங்களில் 'தேவி மாஹாத்மியம்' அருமையாக விளக்கி அருள் கிறது. நவராத்திரி சமயங்களில் பலர் அதை, விஜயதசமி உள்ளிட்ட 10 நாட்களிலும் பாராயணம் செய்து தேவியின் திருவருளைப் பெறுவது வழக்கம்.

தற்போதுள்ள பரபரப்பான காலநிலைகளில், விஸ்தாரமான பூஜா நியதி நியமனங்கள் பலருக்குப் பொருந்தி வருவதில்லை. மையப் பொருளிலிருந்து விலகாமலும், அதே சமயம் மையக்க

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ருத்தையே தம்மில் அடக்கிய நுண்ணிய மந்திர வடிவங்களைப் பல வகைகளாக நமது மகரிஷிகள் தந்தருளியுள்ளனர்.

அவ்வகையில் இங்கு நாம் காணும் 'ஸ்ரீ துர்கா ஸப்த ஸ்லோகீ' என்ற ஸ்லோகமானது தேவி பாகவதத்தின் மிக நுட்ப வடிவம் என்றால் அது மிகையன்று.

இதை கிருஷ்ண பட்ச சதுர்த்தசி, அமாவாசை, சுக்லபட்ச பிரதமை ஆகிய மூன்று நாட்களிலும், சுக்லபட்ச சதுர்த்தசி, பவுர்ணமி, கிருஷ்ணபட்ச பிரதமை ஆகிய மூன்று நாட்களிலும், இரு பட்சங்களில் வரும் அஷ்டமி திதிகளிலும், செவ்வாய், வெள்ளி ஆகிய கிழமைகளிலும் புஷ்பம், தூபம், தீபம், கந்தம், நைவேத்தியம் என்ற பஞ்சோபசார முறைப்படி பூஜித்து, கீழ்காணும் ஸ்லோகங்களை 3 முறை உச்சாடனம் செய்து துர்க்கா தேவியை வழிபட்டு வர வேண்டும். இதன் மூலம் ஒருவரது சகல மனோ சங்கடங்களும் நீங்கி நல்ல நிலையை அடையப் பெறுவார்கள்.

ஸ்ரீ துர்க்கா சப்த ஸ்லோகி மந்திரம் வருமாறு:-

க்ஞானிநாமபி ஸேதாம்ஸி தேவீ பகவதி ஹி ஸா
பலாதாக்ருஷ்ய மோஹாய மஹாமாயா ப்ரயச்சதி
துர்கே ஸ்ம்ருதா ஹரஸி பீதிமசேஷ ஜந்தோ
ஸ்வஸ்த்தை ஸ்ம்ருதா மதி மதீவ சுபாம் ததாஸி
தாரித்ரிய துக்க பயஹாரிணி காத்வதன்யா
ஸர்வோபகார கரணாய ஸதார்த்ர ஸித்தா
ஸர்வ மங்கள மாங்கல்யே ஸிவே ஸர்வார்த்த ஸாதிகே
ஸரண்யே த்ரியம்பகே கௌரி நாராயணி நமோஸ்துதே
ஸராணாகத தீனார்த்த பா்த்ராண பராயணே
ஸர்வஸ்யார்திஹரே தேவி நாராயணி நமோஸ்துதே
ஸர்வஸ்ரூபே ஸர்வேசே ஸர்வஸக்தி ஸமன்விதே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பயேப் யஸ்த்ராஹிநோ தேவி துர்கே தேவி நமோஸ்துதே
ரோகா நசேஷா நபஹம்ஸி துஷ்டா
ருஷ்டாது காமான் ஸகலான பீஷ்டான்
த்வாமாச்ரிதானம் ந விபந்நராணாம்
த்வாமாச்ரிதா ஹ்யாச்ரயதாம் ப்ரயாந்தி
ஸர்வா பாதா ப்ரசமனம் த்ரைலோக்யஸ் யாகிலேஸ்வா
ஏவம் ஏவ த்வயா கார்யம் அஸ்மத் வைரி விநாஸனம்

எல்லோருக்குள்ளும் மறைபொருளாகவுள்ள மனோசக்தியாக விளங்கும் அந்த மகா மாயை, நம் அனைவருக்கும் மன வலிமையைத் தந்து என்றும் நம்மைக் காத்தருளட்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



23. வெளிநாட்டுப் பயணங்களுக்கு உதவும் மந்திரங்கள்

திரை கடலோடியும் திரவியம் தேடு' என்று ஒரு சொல் வழக்கு உண்டு. 'ஒருவர் எப்பாடுபட்டாவது, எந்த ஊருக்குச் சென்றாவது, தமது சொந்த முயற்சி கொண்டு பொருளீட்ட வேண்டும்' என்பதே பொருளாதாரம் பற்றி தர்ம சாஸ்திரம் கூறும் மையக் கருத்தாகும்.

ஈட்டிய பொருளில் ஒரு குறிப்பிட்ட பங்கை தான, தர்ம காரியங்களுக்கு ஒதுக்க வேண்டும் என்பதும் அதில் ஒரு முக்கிய அங்கமாகும்.

ஆனால் இந்த கலியுகத்தில் அதர்மத்தின் நிலைப்பாடே எங்கும் பரவி நிற்கும் என்பதை நமது மகரிஷிகள் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளனர்.

வெளிநாட்டு பயணம்

உள்ளூரில் ஒருவர் தமது பொருள் வளத்தை அடைவது அவரது புண்ணியம் என்று கொண்டால், வெளியூரிலோ, அல்லது வெளிநாட்டிலோ தமது பொருள் வளத்தை அடைவது அவரது பாக்கியம் என்றே கூறவேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆனால், வெளிநாடு சென்று பணம் சம்பாதிக்கும் வசதி, வாய்ப்புகள் அனைவருக்கும் அமைவதில்லை.

வெளிநாட்டுப் பயணத்தில் கல்வி கற்கச் செல்வது, தொழில் மற்றும் வேலை வாய்ப்பிற்காகச் செல்வது, சுற்றுலாவாகவோ அல்லது மருத்துவச் சிகிச்சைக்காகவோ செல்வது என்ற பல நிலைகள் அதில் உண்டு.

சிலருக்கு விரும்பியபடி வெளிநாடு செல்ல முடியாத நிலை இருக்கும். அதாவது வெளிநாட்டில் வேலை கிடைக்கும். ஆனால் தான் விரும்பிய வேலை அமையாது. சிலருக்கு விரும்பிய வேலை அமையும். ஆனால் மனதிற்கு பிடித்தமான நாட்டிற்கு செல்லும் வாய்ப்பு அமையாது.

வெளிநாடு செல்லும் வாய்ப்பு யாருக்கு அமையும்?

ஜோதிட ரீதியாக ஜல ராசிகள் எனப்படும் கடகம், விருச்சிகம், மீனம் ஆகியவை ராசியாகவோ, லக்னமாகவோ அமைந்து அவற்றில் சந்திரனும், குருவும் இருந்தால் அவர்களுக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு அமையும்.

அந்த ராசிகள் ஒருவருக்கு பாக்கிய ஸ்தானமாகவோ (9–ம் இடம்), விரய ஸ்தானமாகவோ (12–ம் இடம்) அமைந்து, அதில் ராகு–கேதுக்கள் இருந்தாலும் ஒருவருக்கு வெளிநாடு செல்லும் யோகம் அமையும்.

பொதுவாக கடக ராசியிலோ, கடக லக்னத்திலோ ஜனனம் ஆனவர்கள் தமது வாழ்நாளில் ஒரு முறையாவது வெளிதேசம் செல்வார்கள் என்பது எழுதப்படாத விதியாகும்.

மேலும் பல்வேறு விதிகளும், கிரகச் சேர்க்கைகளும் வெளிநாடு செல்வது பற்றி முடிவு செய்யும். பொதுவாக ஜல ராசிகளிலோ, அல்லது 8, 9, 12 ஆகிய வீடுகளிலோ, அவற்றின் சாரங்களிலோ அமர்ந்த கிரகத்தின் திசா, புத்திகளில் ஒருவருக்கு அவரவரது சுய ஜாதக வலுவையொட்டி வெளிமாநில வாசமோ, வெளிநாட்டு வாசமோ அமையும் என்பதை உறுதியாகக் கூறலாம்.

நவக்கிரகங்களில் ராகு, குரு, சந்திரன், சுக்ரன் ஆகிய கிரகங்களே ஒருவரது அன்னியதேச பயணத்தைச் சுட்டிக்காட்டுகின்றன. இந்த கிரகங்களில் ஒன்றோ, இரண்டோ, மூன்றோ அல்லது நான்கும் இணைந்த நிலையிலோ, அல்லது தொடர்பு நிலைகளிலோ இருந்தால் வெளிநாட்டுப்பயணத்தை ஏற்படுத்துவார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதுபோல முரண்பாடான சூழலில், ஒருவரது வெளிநாடு பயணத்தை உருவாக்கித் தரும் ஆன்மிக ஜோதிட வழிவகைகள் பற்றி இங்கே காண இருக்கிறோம்.

காரணம் புரியாத தாமதங்களால் வெளிநாடு பயணம் செல்ல முடியாமல் தவிப்பவர்களும், பாதி முயற்சியில் தத்தளித்துக் கொண்டிருப்பவர்களும், இங்கு நாம் காண இருக்கும் சில வழிவகைகளால் தமது வாய்ப்புகளை எளிதில் பெறலாம்.

தடையை தகர்க்கும் மந்திரம்

குரு ஆதிக்கத்தில் பிறந்தவர்களின் ஜாதக ரீதியாகவோ, கோள்சாரா நிலைகளிலோ குரு பலமற்ற தன்மையில் அமைந்திருந்தால், வெளிநாட்டுப் பயணங்கள் காரணம் எதுவும் தெரியாமலேயே தள்ளிப் போகும்.

அப்படிப்பட்ட நிலை அமைந்தவர்கள் கீழ்கண்ட குரு பகவானின் ஸ்துதியை ஒவ்வொரு வியாழக்கிழமையன்றும், மஞ்சள் ஆடையணிந்து தென்முகக் கடவுளின் முன்பு நின்று 48 முறை உச்சாடனம் செய்துவந்தால் நாடிய நன்மைகள் ஓடிவரும்.

அதற்கு முன்பாக அவர்கள் குளிக்கும் நீரில் நான்கைந்து சொட்டுக்கள் தேன் விட்டு, குளிக்க வேண்டும். உடலில் தங்கத்தின் தொடர்பு எந்த வகையிலாவது இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

இந்த மந்திரம் பிரம்ம வைவர்த்திக புராணத்தில் வரும் பிரகஸ்பதி கவசம் ஆகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்வர்ணாஸ் வரதமாரூடம் பீதத்வஜ ஸுஸோபிதம்
மேரோ ப்ரதக்ஷிணம் ஸம்யகாச ரந்தம் ஸுஸோபனம்
அபீஷ்ட வரதம் தேவம் ஸர்வக்ஞும் ஸுர பூஜிதம்
ஸர்வ காமார்த்த ஸித்யர்த்தம் ப்ரணமாமி குரும் ஸதா

ராகு ஆதிக்கம்

ஒருவரது வெளிநாட்டுத் தொடர்புகளை அமைத்து வைப்பதில் பிரதானமாக இருக்கும் ஒரு முக்கிய கிரகம் ராகு ஆகும். ஜாதக ரீதியாக ராகு 9-ம் இடத்தில், அல்லது 12-ம் இடத்தில் இருந்தாலோ, 7, 8, 9, 12 ஆகிய வீட்டு அதிபதிகளின் சம்பந்தம் பெற்றாலோ, ராகுவின் திசா புத்திகளில் வெளிநாட்டு தொடர்புகள் உண்டாகும்.

ராகுவின் ஆதிக்கத்தில் பிறந்து, கோட்சார ராகுவின் சாதகமற்ற தன்மையால் தடை, தாமதம் ஏற்பட்டுத் தவிப்பவர்கள் கீழ்காணும் ஸ்ரீ துர்க்கா மந்திரத்தை 108 தடவை ஸ்படிக மணி மாலை கொண்டு, தொடர்ந்து 21 நாட்கள் ஜபம் செய்து வந்தால் நல்ல முறையில் வெளிநாட்டுப் பயணம் அமையும்.

'ஓம் தும் துர்காயை நமஹ'

–என்ற இந்த மந்திரத்தை வீட்டில், ஒரு வெள்ளிக்கிழமை இரவு 10 மணியளவில் ஸ்ரீ துர்க்கா எந்திரமும், துர்க்கையின் படமும்

அதிர்ஷ்டக்கல் அணிந்தால் யோகம் பெறலாம்

வெளிநாடு பயணம் செல்ல உதவும் மற்றொரு வழிமுறையானது விசேஷமான ரத்தின பிரயோக முறையாகும். அதாவது ஒருவரது ஜென்ம லக்னாதிபதிக்குரிய ரத்தினத்தையும், பாக்கிய ஸ்தானாதிபதிக்குரிய ரத்தினத்தையும் இணைத்து ஐம்பொன்னிலோ அல்லது தங்கத்திலோ பதித்து அணிந்து கொள்வதாகும்.

இதை, அவ்விரு கிரகங்களும் லக்னத்துக்கு நல்ல நிலையில் கோட்சாரத்தில் வரும் சமயத்தில், ஒருவரது ஜன்ம நட்சத்திரத்துக்கு சாதகமான நல்ல நாளில் அணிந்து கொள்வதால், அவருக்கு தடை பட்ட பாக்கிய யோகங்கள் வந்து சேரும்.

இது பல்வேறு வகையான சுபாம்சங்களை விருத்தி செய்யும் உத்தமமான முறையாதலால் ஜாதி, மத பேதமில்லாமல் யாவருமே இதனால் நிச்சயம் பயனடையலாம். ஒருவருக்கு லக்னம் எதுவென்று தெரியாவிட்டால் ராசியில் இருந்து கணக்கிட்டு அணிய வேண்டும். பெண்கள் இடது கை மோதிர விரலிலும், ஆண்கள் வலது கை மோதிர விரலிலும் அணிந்து கொள்வது மரபாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வைத்து, கிழக்கு நோக்கி அமர்ந்து, 12 நெய் தீபம் ஏற்றி, ஜபிக்கத் தொடங்க வேண்டும்.

தூபம், தீபம், நைவேத்தியம், கந்தம், புஷ்பம் என்ற முறையில் பூஜையைச் செய்யலாம். 21 நாட்கள் பூஜை நிறைவுற்ற பிறகு, யந்திரம், ஜபமாலை, 21 நாட்கள் செய்த பூஜா நிர்மால்யங்கள் யாவற்றையும் நதியிலோ, கடலிலோ சேர்ப்பித்துவிட வேண்டும்.

முருகன் வழிபாடு

செவ்வாயின் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் வெளிநாடு செல்ல முயற்சி செய்து, தடை ஏற்பட்டுத் தவிப்பவர்கள் கீழ்க்காணும் பூஜை முறையைச் செய்ய வேண்டும்.

அதாவது, மயிலுடன் இருக்கும் முருகனின் திருமேனி உள்ள கோவிலுக்கு 48 நாட்கள் தினமும் சென்று 6 நெய் தீபமேற்றி வழிபட்டு, அர்ச்சனை, ஆராதனைகள் செய்து 12 முறைகள் பிரதட்சிணம் செய்துவர வேண்டும்.

அத்துடன் முருகனின் வாகனமான மயிலின் திரு முன்பும், 4 நெய் தீபமேற்றி வணங்க வேண்டும். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் விரதமிருந்து, முருகனுக்கும் மயிலுக்கும் பஞ்சாமிர்த அபிஷேகம் செய்து, அடியவர்களுக்கு அன்னதானம் செய்து வந்தால் எண்ணியவை ஈடேறும் என்பது உறுதி.

பூஜையை ஒரு செவ்வாய்க்கிழமையன்று ஆரம்பித்துச் செய்வது முக்கியமாகும். பொதுவாக எல்லோரும் செய்யக்கூடிய பூஜையாகவே இது இருப்பதால் விரும்பியவர்கள் செய்து நல்ல விளைவுகளைப் பெற்று நலமடையலாம்.

சனி ஆதிக்கம்

சனியின் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் சனிக்கிழமைகளில் பொது சேவை நிறுவனங்களுக்கோ, தனியார் சேவை நிறுவனங்களுக்கோ நல்லெண்ணெய், இரும்பு சம்பந்தமான பொருட்கள் மற்றும் வஸ்திர தானங்களும் செய்யலாம். அவரது ஜன்ம நட்சத்திரத்தன்றும் ஆதரவற்ற முதியோர்களுக்கு உணவு, தகுந்த மருத்துவச் சிகிச்சைகள், வஸ்திரம் முதலானவற்றை முழுமனதுடன் தானம் செய்து வந்தாலும் நலம் பல விளையும்.

சனி, கையில் தராசு வைத்திருக்கும் நீதிமானாக இருப்பதால் (தராசைக் குறிக்கும் துலாம், சனியின் உச்ச ராசி) நமது தான, தர்ம, தவ, ஜபங்களின் பலன்களைச் சரியாகத் தருவதில் தவறவே மாட்டார். 'சனி கொடுக்க எவர் தடுப்பார்' என்ற ஜோதிட வழக்கு இங்கு குறிப்பிடத்தக்கது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கணபதி பூஜை

கணபதியின் முக்கியமான வடிவங்கள் 32 ஆகும். அதில் 20–வது வடிவத்தின் திருநாமம் 'க்ஷிப்ர ப்ரஸாத கணபதி' ஆகும். அவர் அடர் சிவப்பு நிறத்துடனும், ஆறு திருக்கரங்களுடனும், உச்சியில் பிறை நிலவுடனும், குசப்புல் ஆசனத்துடனும், மூன்றாம் கண்ணுடனும் விளங்கக் கூடிய தேவதா மூர்த்தம்.

அவரைத் தேய்பிறை நான்காம் நாளன்று ஆரம்பித்து, வளர்பிறை நான்காம் பிறை வரையில் 108 முறை மந்திர ஜபத்தினால் பூஜை செய்ய வேண்டும். மொத்தம் 16 நாட்கள் கணக்கு.

அவரது மந்திரம் '**ஓம் கம் க்ஷிப்ர ப்ரஸாதனாய நம**' என்பதாகும். அவரைப் பிரார்த்திப்பதால் விரைவில் ஒருவரது துயர் தீரும் என்பது நிச்சயம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

24. எதிர்மறை சக்திகளை விரட்டும் மந்திரங்கள்

இந்த உலகம் தோன்றியது முதல் இருமைத் தத்துவமே அதன் உள்ளார்ந்த வெளிப்பாடாக அமைந்திருக்கிறது. ஒளி–இருள், நல்லது–கெட்டது, பகல்–இரவு, இன்பம்–துன்பம் என்று யாவுமே இருமையின் மாற்ற இயலாத கோட்பாடுகளுக்குள் தான் அடங்கியிருக்கின்றன. பிறப்பு–இறப்பு என்னும் இருமைகளின் மையங்களிலேயே நமது வாழ்க்கை, அதன் இயல்பான விரிவுகளில் தமது சுய இருப்பை நிலைப்படுத்துகிறது.

அது எல்லா உயிர்களுக்கும் அடிப்படைத் தன்மை என்றாலும், மானுடம் மட்டுமே அதன் மாற்றவியலா நெறிமுறைகளையும் தாண்டிய பயண அனுபவங்களைச் சந்தித்துள்ளது. அதன் தன்னியல்பான பயணங்களில் பெற்ற அனுபவங்கள் நன்மையும் தீமையும் கலந்ததாகவே எப்போதும் இருந்து வந்ததை மானுடம் கண்டு வந்துள்ளது. அது எப்போதுமே தொடர்கதைதான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இருந்தாலும் வாழ்வின் இருமை அனுபவங்கள் யாவும் ஒருவரது மனதை, இயல்பாகவே எதிர்மறைகளுக்கு எதிராகவே இட்டுச் செல்கின்றன. எல்லோரும் நன்மையையே எப்போதும் விரும்புகிறோம். ஆனால் அது எப்போதும் சரி பாதிதான் சாத்தியம் என்பது சூரியன் போலச் சுடும் உண்மை.

அன்று முதல் இன்று வரையில் எதிர்மறை சக்திகளே வலிமையாக இருந்து கொண்டிருக்கின்றன என்பதை அனைவருமே அறிவர். ஆக்கப்பூர்வமான ஆளுமைத்திறன் கொண்டவர்கள் வாழ்வில் எதிர்மறை சக்திகளால் பாதிக்கப்படுவதில்லை. அவ்வாறு பாதிக்கப்பட்டாலும் மிக எளிதாக அதிலிருந்து விடுபட்டு விடுகின்றனர்.

'உள்ளம் இலாதார் எய்தார் உலகத்து
வல்லியம் என்னும் செறுக்கு'

–என்ற குறள் மொழிக்கிணங்க தமது ஆளுமைத் திறனை வடிவமைத்துக் கொள்வதில்தான் ஒருவரது பெருமை அடங்கியுள்ளது.

எண்ணங்களைக் கவனியுங்கள், அவை வார்த்தைகளாக மாறுகின்றன.
வார்த்தைகளைக் கவனியுங்கள், அவை செயல்களாக மலருகின்றன.

உபயோகிக்கும் பொருட்களில் எதிர்மறை

எப்போதும் மன இறுக்கத்தோடு இருப்பவர்கள் சூழ்நிலைகளில் உள்ள எதிர்மறைத் தன்மையை மிக எளிதில் ஈர்த்துக்கொண்டு விடுகிறார்கள். அவர்களின் நரம்புகள் சந்திக்கும் மையப்புள்ளிகளில் மின்னோட்டத் தடுப்பில் சமநிலை குறைவுபடுகிறது. இதில் இருந்து விடுபட மிக எளிய வழி, வெளிர் நிறங்கள் கொண்ட பருத்தி ஆடைகளை அணிவதேயாகும். மேலும் ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் அசைவ உணவுகளைச் சாப்பிடாமல் இருந்து பலன்களைக் கவனித்து, அதன்படி வாழ்க்கை முறைகளை அமைத்துக் கொள்ளலாம்.

தினமும் அதிகாலையில் குளிக்கும் பழக்கத்தாலேயே ஒரு ஆற்றல் மையத்தின் சக்திப் பரவலை நமது உடலெங்கும் உணர முடியும். மேலும் புருவமத்தி, நெற்றி, புஜங்கள் ஆகிய இடங்களில் திருநீறோ, திருமண்ணோ அணிந்து இறை வணக்கம் செய்யலாம். மேலும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செயல்கள் யாவுமே பழக்கங்களாக வடிவம் பெறுகின்றன. பழக்கங்கள் தான் நமது குணத்தை நிர்ணயம் செய்கின்றன. நமது குணமே நமது வாழ்க்கையைத் தீர்மானிக்கிறது.

ஆக எண்ணங்களே யாவற்றையும் தீர்மானம் செய்கிறது. உள்ளத்தின் ஆளுமையும், உருவத்தின் ஆளுமையும் ஒருங்கே அமையப்பெற்றவர்களே வாழ்வில் உன்னத நிலையை அடைகிறார்கள். ஆனால் மிகப் பெரும்பாலானோரின் நிலையானது சாதாரணமாகவே இருக்கும் தருணத்தில் வாழ்வின் எதிர்மறை சக்திகளால் பாதிக்கப்படுகிறார்கள். அவை பல வகையாக உள்ளன. சாதாரணக் கண் திருஷ்டி முதல் ஒரு ஆளை மரண நிலைக்குத் தள்ளக்கூடிய எண்ண நிலையை உண்டாக்கக்கூடிய பில்லி, சூனியம் வரையில் பல தரப்பட்ட வகைகள் உள்ளன. மிக நுட்பமான பல தகவல்களைக் கொண்ட அவை பற்றி ஆராயாமல், அதிலிருந்து விடுபட உதவும் சில வழிவகைகளைக் காண உள்ளோம்.

ஒருவரது லக்னம், லக்னாதிபதி, ராசி, ராசியாதிபதி, சூரியன், சந்திரன் ஆகியவை பாதிப்படைந்தோ, பலவீனமாகவோ இருந்தால் அவருக்குக் கண் திருஷ்டியாலோ, எதிர்மறை சக்திகளாலோ கஷ்ட நஷ்டங்கள் உண்டாகும். 6,8,12 ஆகிய இடங்கள் பலமாக இருந்து, கோச்சார நிலைகள் பாதகமாக இருந்தாலும் அவற்றின் திசா புத்தி காலங்களிலும் மேற்கண்ட பிரச்சினைகள் உண்டாகும்.

மரத்தாலான கட்டிலில் உறங்குவதும், மிக முக்கியமாக இலவம் பஞ்சில் செய்யப்பட்ட மெத்தை, தலையணைகளை உபயோகிப்பதும் அவசியம். படுக்கை விரிப்புகளும் பருத்தியாக இருப்பது முக்கியம். செயற்கை இழைகளால் செய்யப்பட்ட ஆடைகள், விரிப்புகள் யாவும் மனிதர்களின் கண் திருஷ்டி எனும் எதிர்மறை ஈர்ப்பை உள்வாங்கும் தன்மையுடையவை.

அதாவது அவற்றிலுள்ள இயல்பான செயற்கை மின் தூண்டலானது, பிறருடைய நுட்பமான உடலியல் மின்தூண்டுதலான எண்ணங்களின் வாயிலாக வெளியாகும் ஒருவித ஈர்ப்பு விசையைப் பெறுவதன்மூலமாக நல்லதோ, கெட்டதோ அதனதன் தன்மைக்கேற்ப விளைவுகளை உண்டாக்குகின்றன. பருத்தி ஆடைகள் அவ்வகையிலான ஈர்ப்பு நிலைகளை உள்வாங்குவதில்லை. அதுவும் இலவம்பஞ்சு படுக்கையோ, தலையணையோ உடல், மனம் என்ற இரு நிலைகளிலும் உடலியக்கக் காந்த மண்டலத்தைச் சமச்சீர் நிலைக்கு அமைத்து வைப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு நல்ல பலனைத்தரும், அனுமன் மீது அமைந்த இரண்டு முக்கியமான மந்திரங்களை இங்கு காணலாம்.

'ஓம் நமோ ஹனுமதே ருத்ர அவதாராய
பர யந்த்ர மந்த்ர தந்த்ர த்ராதக
நாசகாய ஸ்ரீ ராம தூதாய ஸ்வாஹா'

'புத்திர் பலம் யஸோ தைர்யம்
நிர்பயத்வமரோகதா
அஜாத்யம் வாக்படுத்வம் ச
ஹநுமத் ஸ்மரணாத் பவேத்'

இதை ஒருவரது ஜன்ம நட்சத்திரத்தன்று காலையில் ஒரு அனுமனின் சன்னிதியில் இருந்து ஏதாவது ஒன்றை மட்டும் உச்சாடனம் செய்து ஆரம்பிக்க வேண்டும். பிறகு தினமும் காலையில் வீட்டிலிருந்தே ஜபம் செய்து வரலாம். இந்த மந்திரங்களை எப்போதுமே 48 அல்லது 108 என்ற எண்ணிக்கையிலேயே ஜபித்து வருதல் முக்கிய அம்சமாகும்.

ஒருவர் தமது வாகனங்களை வீட்டில் நிறுத்தும்போது, வடக்கு அல்லது கிழக்கு பார்த்தபடி நிறுத்துவதே சரியானதாகும். காலையில் வீட்டிலிருந்து கிளம்பும்போது மேற்கு அல்லது தெற்கு நோக்கிச் செல்ல வேண்டி வந்தால், சிறிது தூரம் வடக்கு அல்லது கிழக்குத் திசைகளில் சென்றபின்பே அந்தந்த திசைகளில் செல்ல வேண்டும். வாரம் ஒருமுறை ஏதாவது ஒரு நாளில் பூஜை செய்த எலுமிச்சம்பழத்தை வண்டியில் வைத்திருந்து, மறுவாரம் ஏதாவது நீர் நிலைகளில் போட்டு விடவேண்டும். இவற்றின்மூலம் நமது வாகனங்கள் திருஷ்டி போன்ற எதிர்மறைசக்திகளால் பாதிக்கப்படுவதைத் தவிர்த்து விடலாம். எலுமிச்சைக்கு சூழ்நிலையிலுள்ள நல்ல சக்திகளைத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தம்பால் ஈர்த்துக்கொள்ளும் அபூர்வ ஆற்றல் உண்டு. திருக்கோவிலில் இருந்து நல்ல தெய்வீக அலை இயக்கத்தைத் தம்பால் ஈர்த்த அக்கனி, நமது வாகனங்களில் இருப்பது பல துன்பங்களைத் தடுக்கக் கூடிய சக்தி படைத்ததாகும். எதிர்மறை உணர்வுகளை வெளிப்படுத்தும் படங்கள், பொம்மைகள் ஆகியவற்றை வாகனங்களில் வைப்பதை தவிர்த்துவிட வேண்டும்.

முக்கியமாக, ஆதி சங்கர பகவத்பாதர் அருளிச்செய்த 'ஸ்ரீ பவானி அஷ்டகம்' என்ற மந்திர ஸ்துதி ஒருவரைப் பாதிக்கக் கூடிய சகல எதிர்மறைச் சக்திகளையும் விலகியோடச் செய்யும் சக்தி படைத்ததாகும்.

இதை ஒரு வெள்ளிக்கிழமையன்றோ, செவ்வாய்க்கிழமையன்றோ ஆரம்பித்து காலை, மாலை ஆகிய இரு வேளைகளிலும் 4 முறையோ, 6 முறையோ பாராயணம் செய்து வந்தால் சகல எதிர்மறை சக்திகளும் தூளாகி விடும். பிரச்சினைகள் தீரும் வரை செய்து வர வேண்டும்.

ஸ்ரீ பவானி அஷ்டகம்

'ந தாதோ ந மாதா ந பந்துர் ந தாதா
ந புத்ரோ ந புத்ரி ந ப்ர்த்யோ ந பர்த்தா
ந ஜாயா ந வித்யா ந வ்ருத்திர் மமைவ
கதிஸ்த்வம் கதிஸ்த்வம் த்வமேகா பவானி

பவாப்தாவபாரே மஹா துக்க பீரு
பபாத ப்ரகாமி ப்ரலோபி ப்ரமத்த
கு சம்ஸார பாச ப்ரபத்த ஸதாஹம்
கதிஸ்த்வம் கதிஸ்த்வம் த்வமேகா பவானி

ந ஜாநாமி தானம் ந ச த்யான யோகம்
ந ஜாநாமி தந்த்ரம் ந ச ஸ்தோத்ர மந்த்ரம்
ந ஜாநாமி பூஜாம் ந ச ந்யாஸ யோகம்
கதிஸ்த்வம் கதிஸ்த்வம் த்வமேகா பவானி

ந ஜாநாமி புண்யம் ந ஜாநாமி தீர்த்தம்
ந ஜாநாமி முக்திம் லயம் வா கடாசித்
ந ஜாநாமி பக்திம் வ்ரதம் வாபி மாதர்
கதிஸ்த்வம் கதிஸ்த்வம் த்வமேகா பவானி

கு கர்மி கு ஸங்கி கு புத்தி கு தாஸ
குலாச்சார ஹீன கடாச்சார லீன
கு த்ருஷ்டி கு வாக்ய ப்ரபந்த சதாஹம்
கதிஸ்த்வம் கதிஸ்த்வம் த்வமேகா பவானி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ப்ரஜேஷம் ரமேஷம் மஹேஷம் ஸுரேஷம்
தினேஷம் நிசீ தேஸ்வரம் வா கடாசித்
ந ஜாநாமி சான்யத் ஸதாஹம் சரண்யே
கதிஸ்த்வம் கதிஸ்த்வம் த்வமேகா பவானி

விவாதே விஸாதே ப்ரமாதே ப்ரவாஸே
ஜலே ச அனலே பர்வதே ஷத்ரு மத்யே
ஆரண்யே ஷரண்யே ஸதா மாம் ப்ரபாஹி
கதிஸ்த்வம் கதிஸ்த்வம் த்வமேகா பவானி

அநந்தோ தரித்ரோ ஜரா ரோகா யுக்தோ
மஹா க்ஷீண தீன ஸதா ஜாத்ய வக்த்ர
விபத்து ப்ரவிஷ்ட்ட ப்ரநஷ்ட்ட ஸதாஹம்
கதிஸ்த்வம் கதிஸ்த்வம் த்வமேகா பவானி

எங்கும் நிறையிறையருள் பொங்கிப் பரவிப் பழுதறு பவித்ர மங்களங்கள் யாவும் எங்கும் வளரட்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

25. தவறாது தனயோகம் தரும் மந்திரங்கள்

பணம் என்ற மந்திரக்கோல் யாரிடம் இருக்கிறதோ அவரையே, இவ்வுலகம் பின்தொடர்வதுதான் எக்காலத்திலும் வெளிப்படும் சமூகம் சார்ந்த மனோபாவமாகும். அவரது கேள்விக்குரிய தனிப்பட்ட குணவியல்புகளோ, வாழ்க்கை நெறிகளோ பெரிதுபடுத்தப்படுவதில்லை. அவருடைய சுக–துக்கங்கள் யாவும் சமூகத்தின் சுக–துக்கங்களாகவே பார்க்கப்படும் அளவுக்குப் பொருளின் அத்தியாவசியத்தன்மை எல்லாக் காலங்களிலும் இருந்துவருகிறது.

பிரம்மச்சரியம், கிரஹஸ்தம், வானப்ரஸ்தம், சன்னியாசம் ஆகிய நான்கு மானுட வாழ்வியல் பெரு நிலைகளிலும் பொருளின் அத்தியாவசியம் நேரடியாகவும், மறைமுகமாகவும் உள்ளதைப் பல நூல்கள் எடுத்துக் காட்டியுள்ளன. அத்தகைய பொருளை அருளும் அலை மகளாம் திருமகள் உலவிக் குலவும் இடங்கள், எந்த வகையிலான காலவியல் கணக்கு முறைகளுக்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்டவை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்பது இன்றுவரை அறியமுடியாத தேவரகசியமாகவே இருந்து வருகிறது.

அந்த அலைமகள் யாரைத்தான் நாடித்தேடி ஓடிவருவாள் என்பதும் புரிந்தும் புரியாததுமான சூட்சுமமான விதிமுறையாகவேதான் இன்றைய காலகட்டம் வரையில் இருந்து வருகிறது. அவள் வருகையை உறுதிப்படுத்த, தவ மாமுனிவர்களும், மகான்களும்கூட தவமோ, ஸ்துதியோ, மந்திரமோ, ஸ்தோத்திரமோ, யக்ஞமோ செய்தருள வேண்டிய காலகட்டாயம் அவர்களையும் முன்னே தள்ளியதை நாம் யாவருமே அறிந்திருக்கிறோம். அவர்கள் தமது முயற்சியில் கண்டடைந்த அவ்வகையிலான மந்திர வடிவங்களில் ஒரு சில வற்றை இங்கே காணவிருக்கிறோம்.

ஒருவரது ஜாதக ரீதியாக பொருளாதார நிலையைக் காட்டும் ஸ்தானங்கள் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகி இருந்தாலும், கோட்சாரக் கோளாறுகளால் பண வரவுகள் பாதிக்கப்பட்டு மனக்கஷ்டத்தை உண்டாக்கியிருந்தாலும் அவற்றை நிவர்த்தி செய்ய நமக்கு வழிகாட்டும் ஒரு சிறப்பான மந்திரஸ்வரூபத்தை இங்கு நாம் காண உள்ளோம்.

இதை அவரவரது ஜென்ம நட்சத்திரத்தன்றோ, அவரவரது பிறந்த கிழமையிலோ, வளர்பிறை பஞ்சமி அல்லது சப்தமி திதிகளிலோ வரும் அதிகாலைப்பொழுதில் பிள்ளையார் வழிபாட்டுடன், பிள்ளையாரையே தமது குருவாக ஏற்றுச் செய்ய வேண்டும். (ஒரு குருவின் மூலமாகப் பெற இயன்றால் மிகவும் உத்தமம். அப்படிப் பெற இயலாத பட்சத்தில் முழுமுதற் கடவுளான பிள்ளையாரையே நமது மந்திர குருவாக ஏற்று ஜபதவங்களை ஆரம்பித்துச் செய்வதும் ஒரு நல்ல முறையே).

வழக்கம்போல மகாலட்சுமியின் திருவுருவத்தின் முன்பு தீபமேற்றி வைத்து, நைவேத்தியம் சமர்ப்பித்து 108 முறைகள் ஜபம் செய்ய வேண்டும். வில்வ தளங்கள் கொண்டு மகாலட்சுமியின் திருவுருவை அலங்கரிப்பதும், கஸ்தூரி, அத்தர், ஜவ்வாது, சந்தனம் முதலான வாசனை திரவியங்களால் மகாலட்சுமியின் திருவுருவுக்குப் பொட்டிடுவதும், நல்ல சந்தன மணமிக்க ஊதுபத்திகளைப் பொருத்தி வைப்பதும் மிக நல்ல தேவதா அலையீர்ப்பு மண்டலத்தை அமைத்து வைக்கும்.

அன்றுமுதல் தினமும் காலையிலும், அந்திமாலையிலும் 108 முறைஜபம் செய்வது அவசியம். ஜபத்தை 90 நாட்கள் விடாமல் செய்வதும் முக்கியம். பூஜை நாட்களில் அசைவம் தவிர்ப்பதும், மனம், வாக்கு, காயம் ஆகியவற்றில் திரிகரண சுத்தியும் மிகவும் முக்கியமாகும். அவையின்றி இம்மந்திரம் சித்தியாகாது. அதா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வது மனதில் சுத்த சத்வ எண்ணங்களும், பேச்சில் இனிமையும், உண்மையும் வெளிப்படும்படியாகவும், எப்போதும் சுத்தமாகவும், வாசனைகளுடனும் கூடிய ஆடைகளை அணிந்தும், சொல்வாக்கு தவறாமலும் இருப்பவருக்கே லட்சுமி கடாட்சம் உண்டாகும்; செல்வ வளம் கூடும்.

அத்தகைய பொருள் வளத்தை உறுதியாகத் தரும் ஒரு உன்னத மந்திரம்தான், **'ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் ஸ்ரீம்'** என்பதாகும்.

இரண்டாவதாக நாம் காணவிருப்பது ஸ்ரீ பத்மாவதி தாயாரின் மீதமைந்த ஒரு மந்திர வடிவமாகும். இம்மந்திரத்தை வளர்பிறை திங்கட்கிழமையன்றோ அல்லது வளர்பிறை வெள்ளிக்கிழமை யன்றோ இரவு 9 மணிக்குமேல் தாயாரின் திருவுருவப்படத்தின்

வியாபார ஸ்தலங்களுக்கு ஏற்ற மந்திரம்

வியாபார ஸ்தலங்களில் மகாலட்சுமியின் திருவுருவப் படத்தையோ, சிறு சிலை வடிவத்தையோ வைத்து தினமும் பூஜை செய்த பின்பே, அன்றைய வியாபாரத்தைத் தொடங்கும் வழக்கம் பெரும்பாலோனோர்களுக்கு உண்டு. அவ்வாறு மகாலட்சுமி பூஜையைச் செய்வதன் மூலமாகவும், கீழே குறிப்பிட்ட மந்திரத்தை அதனுடன் உச்சாடனம் செய்வதன் மூலமாகவும் பல வகைகளில் வியாபார வளர்ச்சி நிலைகளை எட்டலாம்.

நமது கடைகள், அலுவலகங்கள், தொழிற்கூடங்கள், உணவகங்கள், நிறுவனங்கள் ஆகிய எந்த வகையான வியாபார ஸ்தலமாக இருந்தாலும் லட்சுமி கடாட்சம் ஏற்பட முக்கியத் தேவை எதுவெனில், அங்குக் கடைப்பிடிக்கப்படும் சுத்தமேயாகும். மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரண சுத்தி மட்டுமல்லாமல் நமது இல்லங்கள், வியாபார, மற்றும் தொழில் தலங்கள் ஆகியவற்றிலும் நாம் கடைப்பிடிக்கும் தூய்மையானது மகாலட்சுமி ஆகர்ஷணத்தை அமைத்து வைக்கும் ஒரு முக்கியமான காரணியாக விளங்குகிறது.

அதன் பிறகே பூஜைகளும், மந்திர ஜபங்களும் இடம் பெற்று தத்தமது பலன்களைத் தருகின்றன. ஆகவே, நமது வியாபாரஸ்தலங்களில் காலையில் செய்யும் சிறு பூஜையோடு கீழ்வரும் மந்திரத்தையும் பயன்படுத்தி நல்ல பலன்களைக் காணலாம். நெய்யிலோ, நல்லெண்ணெயிலோ தீபம் ஏற்றுவது விசேஷம். மந்திரம் கீழ்வருமாறு:-

'ஸ்ரீ சுக்லே மஹா சுக்லே நிவாஸே
ஸ்ரீ மஹாலக்ஷ்மி நமோ நம'.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முன்பு நெய் தீபமேற்றி ஆரம்பித்துச் செய்ய வேண்டும். தொடர்ச்சியாக 48 நாட்கள், 108 முறை ஜபம் செய்வது மிகமிக அவசியமாகும். கண்டிப்பாகக் குளித்து முடித்த பிறகே ஜபம் செய்வது முக்கியம். அமர்ந்து ஜபம் செய்வதற்கு ஒரு கம்பளியாலான விரிப்பையோ, அல்லது காட்டன் விரிப்பையோ பயன்படுத்தலாம்.

ஜபத்தின் எண்ணிக்கைக்கு உதிரி மல்லிகையோ அல்லது தாமரை மணி மாலையோ, துளசி மணி மாலையோ பயன்படுத்துவது நல்லது. இரவில் ஜபம் செய்வதால் இரவு உணவாக பாலும், பழமுமோ, அல்லது வேக வைக்காத இயற்கை உணவு வகைகளையோ மட்டுமே சாப்பிட வேண்டும். இரவு 9 மணிக்கு ஜபம் ஆரம்பிப்பதன் காரணமாக இரவு 8 மணிக்குள் உணவை முடித்துக் கொள்ள வேண்டியது அவசியம். (முக்கியமாக அவரவரது உடல்நலனுக்கு ஏற்றபடியே உணவுப் பழக்கத்தை அமைத்துக் கொள்வது மிக அவசியம்) பணம் சம்பந்தமாகக் குடும்பத்தில் உண்டாகும் அமைதிக் குறைவுகளுக்கும், குடும்ப உறுப்பினர்களிடையே சொத்து சம்பந்தமாக உண்டாகும் வாக்குவாத கருத்து வேற்றுமைகளுக்கும் நல்ல தீர்வாக விளங்கக் கூடிய ஒரு நன்மந்திரம் இதுவாகும்.

இது சாத்வீக தேவதா மந்திரமாதலால் அசைவ உணவு சம்பந்தம் சிறிதும் கூடாது. அந்த மந்திரம் பின் வருமாறு:-

'ஓம் நமோ பத்மாவதி பத்ம நேத்ர வஜ்ர வஜ்ராம்
குஷ ப்ரத்யக்ஷம் பவதி'.

அடுத்ததாக நாம் காண இருக்கும் மந்திரம் ஸ்ரீ அனுமனின் மீது அமைந்ததாகும். ஸ்ரீ ருத்ராவதாரமான அனுமனின் பெருமை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அளவிடுவதற்கு அரியதாகும். சொல்லின் செல்வனாகவும், சகல கலைகளிலும் வல்லவராகவும், பிறரது துன்ப துயரங்களை உடனே களையும் இயல்பு கொண்டவராகவும், அஷ்டமா சித்தி களை அடைந்தவராகவும் இருக்கும் அனுமன் மீது அமைந்த இந்த மந்திரம், ஒருவர் வேண்டும் வரங்களைத் தரும் தன்மையை உடையது.

கலியுகத்தில் உண்டாகும் பொருளாதாரம் சார்ந்த குறைபாடு கள் அனைத்து தரப்பு மக்களையும் மிகுந்த சங்கடங்களுக்கு உள் ளாக்கி வருகிறது.

இறைவனின் மீது நல்ல பக்தியுடையவராக இருப்பவருக்கும், திருக்கோவில் பக்கமே தலைகாட்டாமல் இருப்பவருக்கும், வாழ் வியல் நெறிமுறைகளில் அக்கறை கொள்ளாமல், தமது இஷ்டப்ப டியே பொருளைச் சம்பாதிப்பவருக்கும் பொருளாதாரம் சார்ந்த சிக்கல்கள் இருக்கத்தான் செய்கிறது.

இறையருளை நாடுவோர் அதனால் பாதிக்கப்பட்டாலும் சிறிது காலத்தில் அதிலிருந்து மீண்டுவிடுவது இறைநியதியாகும். காரணம், யாவற்றுள்ளும் உள்ளுறையும் மைய சக்தியின்பால் தமது முயற்சி களையும், சக்திகளையும் ஒருங்கிணைந்து விடுவதால் மனோரீதி யாக, சூழ்நிலையின் அழுத்தங்களைக் கையாளும் தன்னியல்பு அவர்களுக்கு இயற்கையாக அமைந்துவிடும்.

மனதின் சமநிலைகள் பாதிப்படைந்தாலும் அவை தற்காலிக மானவையே என்பது சூழ்நிலைகளின் வாயிலாக அவர்கள் உணர் வார்கள். அவ்வாறு இறையின் தன்னிகரில்லாத தனிப்பெரும் துணையை நாடித்தேடித் துதிப்போர்களுக்கு, அந்தப் பரம்பொருள் தக்க சமயத்தில் அருள்வான் என்பது முக்காலத்திற்கும் பொருந் தும் நித்திய உண்மையாகும்.

ஆற்றலால் தமது இயல்பு பூரணமடைந்திருந்தாலும் எவ்வித வெளித்தோற்ற சஞ்சலங்களாலும் பாதிப்படையாமலும், அன்னை சீதா மகாலட்சுமியின் திவ்யமான அருள்பிரவாகத்தில் திளைத்து, ராமனின் உள்ளம் கவர்ந்த சுந்தரனாகவும் இருக்கும் அனுமனின் மீதமைந்த இந்த மந்திரம் உச்சரிப்பவரின் உள்ளம் உள்ளூர விரும் பும் நல்ல விளைவுகளை தந்தருளும் என்பது நிச்சயமாகும்.

இதை ஒரு வளர்பிறை ஞாயிற்றுக்கிழமையோ, அல்லது வளர் பிறை வியாழக்கிழமையோ ஆரம்பித்துச் செய்யவேண்டும். அனும னின் சன்னிதியிலோ அல்லது ஒரு அரச மரத்தடியிலோ அமர்ந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சொல்வது மிக நல்ல பலன்களைத் தரும். 48 முறைகளோ, 108 முறைகளோ உள்ளார்ந்த பக்தியுடன் ஜபித்து வருவதும், அசைவம் தவிர்ப்பதுமே மிக முக்கியமான விதியாகும். வேறு நியதிகள் பெரியதாக இம்முறைக்கு இல்லை. மந்திரம் கீழ்வருமாறு:

**'ஓம் ஹ்ரீம் உத்தரமுஹே ஆதி வராஹாய
பஞ்ச முஹி ஹநுமதே லம்லம் லம்லம்
ஸகல ஸம்பத்கராய ஸ்வாஹா'.**

–நிறைவு பெற்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்னைப் பற்றி...

''நீ விரும்புவதை அடையும் சக்தி உன்னிடமே உள்ளது'' என்ற சுவாமிஜி விவேகானந்தரின் எழுச்சியுரையே என்னை சிறு வயது முதல் கவர்ந்த விசயமாகும். அந்த ஈடுபாடு பற்பல துறவியர் பெருமக்களை நாடித் தேடி ஓட வைத்தது. பலதரப்பட்ட சாது சன்னியாசிகளின் சத்ஸங்க அனுபவத்தையும் உண்டாக்கி வைத்தது. இன்று வரை ஆன்மவியல் என்னையும் ''தேடலின் பால் மாளாத நோயாளனாக்கி'' வைத்துள்ளது. தேடல்கள் முடிவற்ற வழிகளில் பயணப்பட்டாலும், வழியில் கண்ட மாமணிகளை மாலையாக்கிட இந்நூல் வடிவம் வழிகாட்டியது.

தமிழ்கூறு நல்லுலகுக்கு நூல் வழியில் நான் புதியவன் ஆயினும், செய்திகள் பழையதே. ஈரோடு மாவட்டம் சிவகிரி எனது ஊர். சமூகப் பிரக்ஞையுள்ள அனுபவ சித்த வைத்தியர் எனது தாத்தா. அவர் அப்பகுதியில் பிரபலம். எனது தந்தையார் இலக்கிய, கலை ஈடுபாட்டோடு, நாடகத் தமிழில் பெரும் ஈடுபாடு கொண்டு, நிறைய மேடை நாடகங்களை அரங்கேற்றிப் பிரபலமானவர். கைரேகை ஆராய்ச்சியாளர். எனது அன்னையாரோ ஆன்மவியலை அன்றாடவியலாக்கும் வித்தையை ஓதாது உணர்த்தியவர் என்றால் அது மிகையன்று.

மேலும் தினத்தந்தி சூடிய மகுடத்தோடு உங்களுடன் மேலும் பல விஷயங்களுடன் சந்திக்க வருகிறேன். உங்களுடன் பகிர்ந்து கொள்ளவும் விழைகிறேன்.

நன்றி.

தந்தி பதிப்பகம்
THANTHI PUBLICATIONS
86, EVK Sampath Road,
Chennai - 600 007
Phone : 26618661

விலை : 165/-